



மேலாண்மை
பொன்னுசாமி

# மானுடம் வெல்லும்

மேலாண்மை செ. பொன்னுச்சாமி

கரிகாலன் பதிப்பகம்
மேலாண்மறைநாடு
இராமநாதபுரம் மாவட்டம்
626127

உரிமை : ஆசிரியருக்கே

முதல் பதிப்பு : ஏப்ரல் 1981

அட்டை ஓவியம் : கவிஞர் இளவேனில்

நன்றி :
செம்மலர்
சிகரம்

மேலாண்மை பொன்னுச்சாமியின்
முதல் சிறுகதைத் தொகுப்பு
**மானுடம் வெல்லும்**

நன்றிக்குரியவர்கள் :
தணிகைச்செல்வன்
இளவேனில்
கி. த. பச்சையப்பன்
கிருஷ்ணசாமி
மனுவேல்
என். என். ஜே. பிரிண்டர்ஸ் அன்டு தொழிலாளர்கள்

விலை ரூ. 5/-

கிடைக்கும் இடம் :
சிகரம் வெளியீடு,
19, குறுக்குச் சாலை,
புதுவண்ணாரப்பேட்டை,
சென்னை-81.

# நுழை வாசலில்....

இராமநாதபுரம் மாவட்டத்தில், நகர நாகரீகம் எட்டிப் பார்க்க இயலாத ஒரு குக்கிராமத்தில் புஞ்சைக்காட்டில் மிளகாய்ச் செடிகளுக்காக உழுதுகொண்டும் கிராமத்துச் சில்லறைக் கடை ஒன்றின் சாளரத்து வழியாக ஜனங்களின் உறவுகளைக் கண்டு வியந்து கொண்டும், மகிழ்ந்துகொண்டும், வருந்திக்கொண்டிருந்த ஒரு இளைஞனின் நெஞ்சுக்குள் ஒரு இலக்கியவாதி கருக்கொண்டிருந்தான் என்பது சராசரி வாழ்வின் விதிகளிலிருந்து விலகிக் காட்சியளிக்கும் ஒரு செய்தியாகும். அதுவும் இந்திய வாழ் நிலைகளிலிருந்தும் - அதிலும் கிராமியச் சூழ்நிலைகளிலிருந்தும் இத்தகைய கலைஞன் ஒருவன் பிறப்பெடுப்பது ஒரு அபூர்வ சங்கதியாகும். ஆம்! மேலாண்மை பொன்னுச்சாமி அத்தகைய அபூர்வக் கலைஞன்தான்.

''காளியின் சக்தியினால் கலைஞனானேன்'' என்று காளிதாசர்களே சொல்லிக்கொள்ள விரும்பாத ஒரு காலத்தில், இந்த 'அபூர்வ' உண்மைக்குக் காரணத்தை எங்கே தேடுவது என்று அதிக தூரம் அலைய வேண்டியதில்லை.

'மேலாண்மை' சார்ந்துள்ள அரசியல் இயக்கம், அவர் தேர்ந்துள்ள சித்தாந்தம் அவற்றில் வெளிப்பட்ட சமூக — பொருளாதார கலாச்சாரக் கோட்பாடுகள் ஆகியவற்றின் உதய ரேகைகள் மேலாண்மறைநாட்டின் சின்னக் கடையில் ஜன்னல் வழியாக நுழைந்து உருவத்தால் சின்ன மனிதனைப் பரிணமைப் படுத்தி ஒரு சிறந்த இலக்கியவாதியாகச் செதுக்கியதில் வெற்றிபெற்றிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

அவர் படைப்புகளே அதை ஊர்ஜிதம் செய்யும். அவற்றின் சிலவே இங்கு நூல் உருப்பெறுகின்றன. இந்தக் கதைகளைத் திறனாய்வு செய்வதல்ல என் நோக்கம். அதை நீங்களே செய்வீர்கள். மேலாண்மையின் முன்னுரைக்கும் முன்னுரையாக இது அமைந்து அவர் முகவிலாசத்துக்கு ஒரு பகைப்புலனைத் தரவே இது பயன்படும்.

கல்லைக் கனியாக்கும் ரசவாதத்தை மார்க்சீயம் வரலாற்றில் ஆயிரம் முறை நிரூபித்திருக்கிறது. ஆயிரத்து ஓராவது முறையாக மீண்டும் நிரூபிக்கிறது — 'மேலாண்மை' மூலம்! 'மானுடம் வெல்லும்' அதற்கொரு மகத்தான சாட்சி!

**தணிகைச்செல்வன்**

Printed at enenjey printers Madras-600 005. Ph.: 843642

# நுழைவாசலில்
## சில வார்த்தைகள்....

முன்னுரை என்று தனியாக ஒன்று தேவைதானா?

இந்தக் கேள்விக்குப் பதில்சொல்ல என்னால் முடியவில்லை. எழுத்தாளன், தனது படைப்புகளில் வெளியிட முடியாததை... வேறெதில் வெளியிட்டுவிட முடியும்?

ஆயினும் தேவை தேவையில்லை என்ற பிரச்னையில் அதிகமாக மண்டையைக் குழப்பிக் கொள்ளாமல், இந்த முன்னுரையின் மூலம் உங்களுடன் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

இலக்கியம் படைப்பவர்களில் மூன்றுவகைப்பட்டவர்கள் இருக்கின்றனர் என்று கருதுகிறேன்.

முதல் வகை: இலக்கியத்தின் வலிமையை - கடமையை கொஞ்சங்கூட பொருட்படுத்திக் கொள்ளாமல் - குறைந்தபட்ச தார்மீக உணர்வுகள்கூட இல்லாமல்,.... 'எதையாவது எழுதிச் சம்பாதிப்பது' என்ற சுயநலத்தில் - சமூகத்துக்குக் கேடு விளைவிக்கும் இலக்கியங்களையும், நிஜவாழ்க்கை பிரக்ஞையில்லாத கற்பனைக் கதைகளையும் புற்றீசல்களாகப் படைத்துக் கொண்டிருக்கும் வணிக எழுத்தாளர்கள்.

இவர்கள் மக்கள் மத்தியிலே அம்பலமாகிப் போனவர்கள்.

இரண்டாம் வகை: இலக்கியத்தைப் பாதுகாப்பதற்கே அவதாரம் எடுத்திருப்பதாக தம்மைத்தாமே கற்பனை செய்து கொண்டு மாபெரும் சிந்தனையாளர்களாகக் கருதிக்கொண்டு உலவித்திரிகிற பகட்டு அறிவுஜீவிகள்.

'இலக்கியப் புரட்சிக்காரர்களாக' பகட்டித் திரிகிற இந்த இண்டலெக்சுவல்களின் படைப்புகளை - இயல்புகளை - உற்று நோக்கினால்.... இவர்கள் எத்தனை வறண்டுபோய்க் கிடக்கிறார்கள் என்பது பளிச்சென்று விளங்கிவிடும்.

இந்த எக்ஸிஸ்டென்ஷியலிஸ்டுகளின் சிந்தனைகளும்சரி, படைப்புகளும்சரி.... சீர்குலைவுத்தன்மை கொண்டதாக இருப்பதையும் காணமுடியும்.

இவர்களால் மக்களை நேசிக்கவோ, மதிக்கவோ முடிவதில்லை. 'மக்கள் வெறும் மந்தைக் கூட்டங்களாக' இவர்கள் 'ஞானக்'கண்களுக்கு தெரிவதால்... மக்கள் இலக்கியத்தைக் கண்டு, மிகுந்த அருவருப்புடன் முகஞ்சுளிப்பார்கள்.

நடப்புலக வாழ்க்கையின் பயங்கரத்தில் மிரண்டு, புதைந்து போன இந்த எக்ஸிஸ்டென்ஷியலிஸ்டுகள், வாழ்க்கையை புதுப்பிக்க முடியும் என்ற நம்பிக்கையை இழந்துபோனவர்கள்.

வாழ்க்கையும், சமூகமும், சுரண்டலும், கொடுங்கோன்மையும், மற்றும் சகலமும் மாறவே மாறாது என்கிற மாறா நிலைத் தத்துவத்தைக் கொண்டுவாழும் இந்த மனிதர்கள்.... தங்களை சுத்த சுய இலக்கியவாதிகளாக —அதிமேதாவிகளாக பிரகடனப் படுத்திக் கொள்கின்றனர்.

இவர்கள் தான் —

புதுக்கவிதை என்ற பெயரில் கவிதை இலக்கியத்தையே காயடித்திருக்கின்றனர்.

வாழ்வும், உணர்ச்சிக்கொந்தளிப்புகளும், கற்பனை விசாலமும் கொண்டு எழில் சிந்தி இருக்கவேண்டிய கவிதையை – சாரமற்றதாக—வக்கிரமமாகிப்போன அடிமனசுகளின் நெருடல்களாக—தரமற்றதாக சீரழித்துவிட்டனர்.

தமிழ்க்கவிதை உலகத்தில் விஷக்காற்றாக இவர்கள் பரவிவிட்டனர்.

மேடும் பள்ளமும் கொண்ட இந்த சமூகத்தின் மர்ம இருட்டுகளின் மீது ஒளிபாய்ச்சி, அம்பலப்படுத்தவேண்டிய சமூகக் கடமை கொண்ட சிறுகதை பிரதேசத்திற்குள்ளும் இந்த நச்சுக் காற்று பரவி...

இலக்கியம் பிரச்சாரத்திற்கல்ல — அடிமன நெருடல்களை வெளிப்படுத்தவே, என்று கோஷித்து — மனசின் அசிங்கங்களை யும், கோரங்களையும் நோக்கமின்றி வெளியிடுகின்ற சாதன மாக சிறுகதை இலக்கியத்தை மாற்றி, சாரமற்றதாக்கி விட்டது.

இவர்கள் தான் —

நாடக உலகிலும் பிரவேசித்து, 'மேடை வேண்டாம் லைட் வேண்டாம்—ஆடை வேண்டாம் — கதை வேண்டாம் வாழ்வோ-உணர்ச்சியோ எதுவுமே வேண்டாம்' என்று மிகப்பலமாக கூச்சலிட்டு நாடகத்தை வீதிக்கு கொண்டு வந்திருக்கின்றனர். வளர்ந்துவரும் விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி, எப்படி அந்தக் கலையை வளர்ப்பது என்ற இயக்க இயல் ரீதியான சிந்தனை இல்லாமல், கலை வடிவத்தைப் பின்னேக்கி இழுத்துச் செல்கின்றனர்.

கெட்டிதட்டிப் போன பழமைகளின் மீது, மக்கள் கொண் டுள்ள வெறுப்புணர்வை பயன்படுத்தி...புதுமைச் சிந்தனை என்ற பெயரில் சகலத்தையும் நிர்மூலமாக்கும் இந்த வக்கிர மனம் படைத்த—நம்பிக்கை களற்ற—யாவும் மாறும் என் கிற தத்துவத்தை நம்பாத

இந்த இரண்டாவது வகை புதுமைவேடம் புனைந்த போலி இண்டெலெக் சுவல்களிடம் தான் படிப்பாளிகள் இன்று எச் சரிக்கையாக இருக்க வேண்டும்.

மூன்றுவது வகை: இவர்கள் இலக்கியத்தையும், மொழி யையும் நேசிப்பதைப்போலவே — அல்லது அதிகமாக மக்களை நேசிக்கின்றனர்; வாழ்க்கையைக் காதலிக்கின்றனர்.

மக்களையும் வாழ்க்கையையும் நேசிப்பதனுலேயே — மக்கள் வாழ்வதற்குப் பொருத்தமில்லாமல் ஆகிவிட்ட இந்த சுரண்டல் சமூகத்தின் மீது ஆழ்ந்த பகைமை கொண்டிருக்கின்றனர்

இந்தச் சமுதாயம் மனிதகுலத்தால் தூக்கியெறியப்பட்டு, புதிய சமுதாயம் நிர்மாணிக்கப்படும் என்று வலுவான நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

நனவுலகத்தைப் புரிந்து கொண்ட இலட்சியக் கனவு களுடன் பயணத்தைத் தொடங்கியிருக்கிற இந்த மூன்ரும் வகை முற்போக்கிலக்கியப்படை வரிசையில் ஒரு வீரனுக நிற்பதில் பெருமை கொள்கிறேன்.

அடங்கிப் புழுங்கிக் கிடக்கிற இந்த மக்கள் கூட்டம், சன்னஞ் சன்னமாக உஷ்ணப்பட்டு, எரிமலேயாக கனன்று கொண்டிருப்பதை நான் உணர்வதாலேயே...வரப்போகும் சமூக மாறுதலேயும், அதற்கான புரட்சியையும் உத்வேகத்துடன் வரவேற்கிற எழுத்தாளனுக இருப்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

என்னுல் நேசிக்கப்படுகிற தொழிலாளி வர்க்கமும், உழவர் வர்க்கமும், வாலிபர்களும், என்னேயும் நேசிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு.

எனது முதல்ச் 'சிறுகதையை வெளியிட்டு, என்னேப் பிரகாசிக்க வைப்பதில் இன்னமும் முக்ய பாத்திரம் வகித்து வருகிற ''செம்மலரு''க்கும், எனது இலக்கிய அணியின் தலேவனுகதிகழும் கே. முத்தையா அவர்களுக்கும் தோழர் வரதன் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக!

இந்தச் சிறுகதை தொகுப்பு வெளிவரக் காரணமாயிருந்த எல்லா அன்பு இதயங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி!

வாழ்த்துகளுடன்

**மேலாண்மை செ. பொன்னுசாமி**

மேலாண்மறை நாடு 17—4—81

626127

# சமரச விலை

அந்தக் காட்சியின் நினைவில் ஒன்றிப் போனான் ராமசாமி. தனது மனதை அரித்துக் கொண்டிருந்த கவலைகளை யெல்லாம் மறந்து விட்ட நேரம் அது.

ஆறு வயதுகூட நிரம்பாத மகன் வெள்ளாட்டுக்கு அக்கறையுடன் அகத்திக் கொழையை ஒவ்வொன்றாக எடுத்து வாயில் ஊட்டுகிறான். வெள்ளாடும் தனது காதுகளை ஆட்டிக் கொண்டு, ஒவ்வொன்றாக வாங்கி 'நறுக் நறுக்' கென்ற ஓசையுடன் இன்பமாய் புசிக்கிறது.

பூமிக்கு அறிமுகமாகி பத்து நாட்கள் கூட ஆகாத இளங் குட்டிகளும் தாயுடன் போட்டி போட ஆசைப்பட்டு சின்னவனின் மேல் பிஞ்சுக் கால்களை போட்டு எட்டிப் பிடிக்க முயல்கின்றன. அவன் அதனுடன் விளையாடுகிறான். ஆட்டின் மீதும் அதன் குட்டிகள் மீதும் அந்தச் சின்னப் பையன் வைத்திருக்கும் பிரியத்தையும், ஆசையையும் பார்க்கும்போது தகப்பனுக்கு மனசெல்லாம் பூரித்துப் போகிறது.

எட்டு வயசிருக்கும் மகள் நாராயணிக்கு. அவளுக்கு இந்த வெள்ளாடு பிடிக்காது. 'எனக்கு எருமெ மாடுதான்'னு பெருமைப்பட்டுக் கொள்வாள். அவளுக்கு அந்த எருமையின் மீது அப்படியோர் பற்றுதல்; ஒட்டுதல்.

எருமை இப்போது சினை வயிறு உப்பியிருந்தது. அடுத்த மாதம் ஈன்றுவிடும். ரெங்கம்மா புல்லுக்கட்டை கொண்டு

வந்து போட்டவுடன்—அதிலிருந்து புல்லையள்ளி சிந்திச்சிதறி இழுத்தவாறு, நாராயணிதான் மாட்டுக்கு காடியில் போடு வாள். தண்ணீர் வைக்கிற சட்டியை தூக்க முடியாமல் 'முக்கி'த் தூக்கிக் கொண்டு அவள்தான் எருமையின் முன் வைப்பாள். அதுவும் நாராயணியை பார்க்கும் போது வித்தி யாசமான கனிவான உணர்வைக் காட்டும்...

ராமசாமியின் மனம் இந்த மென்மையான சிந்தனைகளின் இனிமையான தழுவலின் சுகத்தில் மயங்கியது கவலைகள் ஒதுங் கியிருந்தன.

எருமை மாட்டை கர்ப்ப ஊசி போடுவதற்காக சில மாதங் களுக்குமுன் அண்மையிலுள்ள கிராம மிருக வைத்தியசாலைக்கு ஒட்ட முனைந்தபோது, பக்கத்து வீட்டுக்காரர் விளையாட்டுக் காகச் சொன்னார் ;

''நாராயணி, உங்க அய்யா மாட்டை விக்கிறதுக்காகத் தான் கொண்டு போருர். இனிமே இது உன் மாடு இல்லை''.

அதை நம்பி...அழுது புலம்பியது...மாட்டை ஓட்ட விடா மல் தம் காலைக் கட்டிக் கொண்டது...ரெங்கம்மா ஆத்திரத்தில் முதுகில் சாத்திய அடிகளை பொருட்படுத்தாமல் மாட்டுக்காக அழுது கத்தியது—அப்புறம் அவளையும் கூட்டிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனது...

எல்லாமே அவனது நினைவுக்கு வந்தது.

'இந்த புள்ளைக்கு மாட்டுமேல எத்தனை பாசம்!'

ஆச்சர்யத்தில் நெஞ்சு வியந்து . . . கனிந்து — சந்தோ ஷித்தது.

அப்போது—

ரெங்கம்மா அலையக்குலைய ஓடி வந்தாள். அவள் அதிர்ச்சி அடைந்திருக்கிருள் என்பதை அவளது தேகப் பதற்றம் காட்டியது.

''இந்தக் கொடுமை உலகத்துலே உண்டா? கேட்டீயளா... இந்த அக்கிரமத்தை...?'' என்று கதறிக்கொண்டே வந்தாள்.

''என்ன?'' என்பது போல நிமிர்ந்தான் ராமசாமி. அவளது திகிலூட்டும் வருகையைக் கண்டு ஆடுகூட பயந்து இரை வாங்க மறந்து அவளை நிமிர்ந்து பார்த்தது.

''உங்க அண்ணன் கேஸ் குடுக்க போயிருக்காராம்...'' என்ருள். ராமசாமிக்கு கன்னத்தில் தேள் கொட்டியது போலிருந்தது மனம் அதிர்ந்து, நடுங்கி, குலுங்கி... ...

அவள் மேலும் இடைவிடாமல் புலம்பினுள். அங்கலாய்த்தாள்.

ராமசாமி குழம்பித்தவித்தான். சிந்தனைகள் ஆடி மாதக் காற்றுபோல கட்டற்றுப் பாய்ந்தோடின.

ராமசாமிக்கும் அவனது அண்ணனுக்கும் அடிக்கடி சண்டை நடக்கும். சில சமயம் குடும்பத்துச் சண்டையாக இருக்கும். பெரும்பாலும் கிணற்று இறவையைப் பங்கீடு செய்யும் சண்டை தான் அடிக்கடி நடக்கும்.

ஒரே கிணறு. பம்ப் ஷெட் இணைக்கப்பட்டிருந்தது. அரை ஏக்கர், முக்கால் ஏக்கராக... மொத்தம் ஐந்து ஏக்கர் நிலத்துக்கு அந்த கிணறு பாத்தியப்படும். அந்த ஐந்து ஏக்கர் ஏழு பர் கையிலிருந்தது. அதில் ராமசாமிக்கு அரை ஏக்கர். அண்ணனுக்கும் அதே அளவு,

முறைபோட்டு ஒழுங்காக தண்ணீர் பாய்ச்சுவார்கள். மழை பெய்தாலோ.. அல்லது யாருக்காவது தற்காலிகமாக நீர் தேவையில்லாமல் போனுலோ...முறை குழம்பிப்போகும். அந்தக் குழப்பம் ஒரு சண்டையில் தான் ஓயும்.

அந்தச் சண்டைகளில் குடும்பப் பகையின் வெம்மையும் இணைவதனுலோ, என்னவோ, பெரும்பாலும் ராமசாமிக்கும், அவனது அண்ணனுக்கும் இடையில்தான் அடிக்கடி நிகழும். சில சமயம் கைகலப்புவுரைக்கும் கூட போய் விடும்.

அதேபோல் தான் இன்று காலையிலும் நிகழ்ந்து விட்டது. நேற்று சாயங்காலம் புஞ்சைப் பக்கம் போயிருந்தான். சோளப் பயிர் இளமையின் அழகுடனும் செழிப்புடனும் தோகை நீண்டு அடர்ந்திருந்தாலும், அந்த மாலை நேரத்திலும் வாடிக் கிடந்த

கொடுமையைக் கண்டான். பிள்ளையின் பசித்த முகத்தைத் தாங்காத தாயைப் போல அவனது நெஞ்சமும் தவித்தது.

காலையில்... நாராயணியைக் கூப்பிட்டான்.

''என்னப்பா...''

''பெரியப்பாகிட்டே போய்... கெணத்துச் சாவியை வாங் கிட்டுவா... தண்ணி பாச்சணும்...''

...வீட்டிற்குள்ளிருந்து ரெங்கம்மா குறுக்கிட்டாள்.

''அவரு கம்புக்கு இறைக்கணும்ஞரே...''

'அவருக்கு நேத்தே பாய்ஞ்சு போச்சு. பாத்துட்டேன்.

'ஆஞ அவருக்கு காலை பத்து மணி வரைக்கு 'முறை' யிருக்கே?'

''தெரியாதா எனக்கு? நீ சும்மா கிடையேன். பாய்ச்சல் முடிஞ்சு போச்சுன்ஞ அவருக்கு எதுக்கு சாவி? நாராயிணி, நீ போம்மா''

போஞள், வந்தாள்.

''என்னம்மா?''

''அவரு சாவியை பத்து மணிக்குத்தான் தருவாராம்.''

''தண்ணிதான் பாஞ்சு போச்சே, வாடிகிடக்குற சோளப் பயித்துக்கு தண்ணியை விடலாம்ஞ... பெரிசா சட்டம் பேசு கிருரோ? எல்லாம் சட்டப்படியே தான் நடப்பாரோ? மிச்சம் கிடக்குற தண்ணியை என்ன செய்யப் போருராம் வாயிலே

அள்ளியா ஊத்திக்குவாராம்? அண்ணந் தம்பியாம் பெரிய மயிரு.''

வாடிக்கிடந்த சோளப் பயிர் நெஞ்சுக்குள் நெருப்பை ஜுவாலைவிடச் செய்து கொண்டிருந்தது. எரிச்சலுடன் வார்த்தைப் பொறிகள் மனதையும் மீறி பறந்தன.

''மயிரு மட்டைன்னு வாய் நீண்டா நாக்கை ஒட்ட நறுக்கிப் போடுவேன், ஜாக்கிரதை,'' என்ற அண்ணனின் குரலைக் கேட்டு திடுக்கிட்டுப் போனான் ராமசாமி. இப்படி வந்து நிற்பாரென்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் சமாளிக்க முயன்றான்.

''சும்மா கெடக்குற தண்ணியை பாச்சுனா என்னவாம்?''

'தாலியத்தவா ஒருத்தி சும்மாயிருந்தா, எவனாவது போய் இழுக்க முடியுமா?''

''பெரியமனுசன் பெரியமனுஷன் கணக்கா பேசணும். சின்னத்தனமா பேசுனா சரிப்படாது.''

''ஏலே...படுவா...தோலை உரிச்சுப்போடுவேன், தோலை ராஸ்கல், சின்னத்தனம்னா சொல்றே'' என்று கோபாவேசமாகக் கூறிய அண்ணன் ஒரு கெட்ட வார்த்தையுடன் முடித்தார்.

''வார்த்தை ஒழுங்கா பேசனும் இல்லேன்னா சரிப்பட்டு வராது. ஆமா, சொல்லிப் போட்டேன்.''

'இல்லேன்னா மயிரைப்பிடுங்கிடுவியோ...'

வார்த்தைகள் தடித்தன. கை கலப்பு வந்தது. மனைவி ரெங்கம்மாள் ஓடி வந்தாள். அலறினாள் கூட்டம் கூடி வந்தது. கைகலப்பு நின்றது. நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனாலும் வாய்கள் ஓயவில்லை. ரெங்கம்மா பழைய சங்கதிகளை யெல்லாம் இழுத்து வசைபாட ஆரம்பித்தாள். மறுபடியும் கை

கலப்பு, கூட்டத்தின் குறுக்கீடு. பிரச்னை தீராமலேயே சண்டை ஓய்ந்தது.

இந்தச் சண்டை ஒன்றும் அதிசய நிகழ்ச்சியல்ல. ஊருக்குப் பழகிப் போன விஷயம் தான். சண் ட போட்ட ஒரு மாதம். மனதை விறைத்துக்கொண்டு, முகத்தை திருப்பிக் கொண்டு நாட்கள் ஓடும். பிறகு ஏதோ ஒரு 'நல்லது பொல்லது,' வந்தால் பகை வெம்மை குளிர்ந்து உறவுதுளிர்க்கும்.

''அஞ்சு வயசு வரைக்கும் தான் அண்ணன் தம்பி; பத்து வயசுக்கு மேலே பங்காளின்னு சும்மாவா, சொன்னுக...? அண்ணன் தம்பிக்குள்ளே இதெல்லாம் சகஜம்தான் அடிச்சுக் கிடுவாங்க கூடிக்கிடுவாங்க'' என்று சாதாரணமாகப் பேசிக் கொள்வார்கள் ஊரார்..

அந்த அளவுக்கு பழக்கமாகிப் போன சண்டை இந்தத் தடவை மட்டும் இந்த அளவுக்கு வளர்வதேன்? ராமசாமியின் நெஞ்சம் பதறியது.

''கேஸ்'' என்ற வார்த்தை அவனது நினைவில் ஒரு சர்ப்பமாக ஒலித்தது. 'கேஸ் கோர்ட்' என்று வரட்டுக் கௌரவத்திலான பிடிவாதத்தில் அலைந்து சீரழிந்த எத்தனையோ பேர் குடும்பங்களின் கதைகள் அவனது நினைவில் ஓடி நெஞ்சைக் குலுக்கின.

40 ஏக்கர் 60 ஏக்கர் என்று நிலம் வைத்திருந்த பெரிய பெரிய குடும்பங்களெல்லாம் கோர்ட் படிகளை சமாதிகளாக்கிக் கொண்ட கதைகள் அவனை அதிகமாக மிரள வைத்தது.

அற்பக் காரணங்களாக கோர்ட்டுக்குப்போய் படிப்படியாக பெரிய பெரிய விவகாரமாக விசுவரூபமாகி வாழ்க்கையையே விழுங்கிவிடும் என்ற அனுபவம் ராமசாமியை கதி கலங்கச் செய்தது.

''இப்ப என்ன செய்றது?''

இந்தக் கேள்வி அவனது நினைவின்முன்னே மறித்து நின்றது.

''இப்ப என்ன செய்யப் போறீக...?'' புயலோய்ந்த அமைதியுடன் அங்கலாய்ப்பை நிறுத்திவிட்டுக் கேட்டாள்.

''என்னன்னு ஒண்ணுமே புரியல்லே. நாமே என்ன செய்றது? நாலெழுத்து படிச்சதுல்லே. மண்ணுலே புரண்டோம். வேர்வையைச் சிந்துறோம். வெளைஞ்சதுலே விதை முதல் கூட இல்லாமெ இழந்துபோறோம். வெந்ததைத் திங்கிறோம்...நமக்கு இதைபத்தியெல்லாம் என்ன தெரியும்...?''

அவனது குரல் விரக்தியில் கம்மியது. பீதியால் திகிலடைந்த அவன் நெஞ்சை வேதனை வாட்டியது. அவனைச் சுற்றி ஒரே இருட்டு. வாழ்க்கை முழுவதும் இருட்டு. எதிர்காலமே இருட்டு. கண்ணைக் கட்டி காட்டில்விட்டதுபோல எங்குமே இருட்டு. இப்ப என்ன செய்றது?

''யாரையாச்சும் பெரியாள்களைப் போய் பார்த்து. விவரத்தைச் சொல்லுங்களேன்...''

''சரி...எது செய்றதுன்னாலும் பணம் வேணுமே. வருமானமில்லாத இந்த நேரத்துலே பணத்துக்கு எங்கே போறது?''

''எதுக்கும் ஒரு முடிவு இல்லாமெப்போயிடாது, தீயெ வைச்ச சாமி தண்ணியெக் காட்டாமலா ப்பாயிடும்?''

வாழ்க்கையின் மீது அவன் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கை அவனையும் பற்ற முயன்றது. பெருமூச்சு வீட்டபடி வெளியேறினான்.

நடுத்தெருவுக்கு வந்தான். அங்கு டீக்கடையில் இரண்டு மடிப்புக் கலையாத 'காக்கி உடுப்புகள்' விடைத்து நின்றன. ராமசாமிக்கு பகீரென்றது. தேகம் முழுவதும் பனிக்குள் புதைந்துபோனதைப்போன்ற ஒரு நடுக்கம். மனதில் ஜில்விட்டது.

அந்தப் போலீஸார் இருவரும் உல்லாசப் பேர்வழிகள். இளைஞர்கள். டெரிகாட்டன் காக்கிகளும், மினுமினுத்த பூட்ஸ் களும், கருப்புக் கண்ணாடியும் அடர்ந்து கனத்த மீசையுமாக

பெரிய ஆபிஸர்' போன்ற கம்பீரத் தோற்றத்துடன் நின்றனர். வேடிக்கை பார்க்க வந்த சிறுவர் கும்பல் வியப்புடன் நிமிர்ந்து நின்றன.

போலீஸாருடன் ரூஸ்வெல்ட் பேசிக்கொண்டிருந்தான். அவன் ஒருவிதமான கேரக்டர். அவனுக்கென்று தொழில் கிடையாது. வாழ்க்கையில் எந்தவிதமான குறிக்கோளுமில்லா தவனைப்போல தினத்துக்கொரு விதமாக பேசித்திரிவான். அவன் பெரிய பண்ணையின் விவசாய நிர்வாகியாக இருக்கிறான்.

அதனால் ''ரூஸ்வெல்ட் பேச்சுக்கு போலீஸ் ஸ்டேஷன்லே நல்ல மரியாதை உண்டு'' என்று ஊரில் பரவலான பேச்சு.

ரூஸ்வெல்ட் இளவயசிலிருந்தே பெரிய பெண்லோலன்; நல்ல குடிகாரன்; சிவந்த உடம்பு; கம்பீரமான நிமிர்ந்த தோற்றம்; மீசை இல்லாமல் சுத்தமான முகம்; வெளிப்பார் பார்வைக்கு சர்வயோக்யன் போலத் தோன்றுவான். ஆனால் எல்லாக் கயவாளித் தனத்திற்கும் சொந்தக்காரன்.

ராமசாமி முடிவுக்கு வந்து விட்டான். மனதில் ஒரு தெளி வான ஒளிர்வு. 'ரூஸ்வெல்ட்டை பிடிச்சிக்கிட வேண்டியது தான்!'

போலீஸார் ரூஸ்வெல்ட்டுடன் சகஜமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

''இங்க, ராமசாமிங்கிறது யாரு?''

''என்ன, கேஸ்வந்துடுச்சா?''

''ஆமா, அவுக அண்ணன் 'கச்சேரி'யிலே வந்து ப்ராது குடுத்துருக்கார்''

''எஸ்.ஐ. எப்படியிருக்காரு? சௌரியமாயிருக்காரா?''

''அவரு உம்மைப் பாக்கனும்னுரே''

''அப்படியா?'' என்றவன் ஏதோ நகைச்சுவையை கேட்டவனைப்போல காரணமின்றி சிரித்தான். சிரிப்பு வான்கோழியின் கொக்கரிப்பைப் போல நாராசமாக இருந்தது. சிரித்து முடிக்கும்போது இப்படிக் கூறினான்:

''இன்னிக்கு எஸ்.ஐ.க்கு நல்ல வேட்டைதான்''

ராமசாமி, சிரமப்பட்டு தைர்யத்தை வரவழைத்து கொண்டு அவர்கள் முன் வந்து நின்றான்.

''நீருதான் ராமசாமிங்கிறதா?''

''ஆமா எசமா''

''உம்மை கச்சேரிக்கு வரச் சொன்னாரு எஸ்.ஐ.''

ராமசாமி, இவர்கள் தான் நீதிபதி என்பதைப்போல எண்ணிக் கொண்டு முறையிட்டான். சம்பவத்தை ஆதியோடந்தமாக விவரித்தான். தான் அநீதிக்குள்ளாக்கப் பட்டிருக்கும் அவலத்தை இரக்கமேற்படும்படி எடுத்துரைத்தான். அவர்களும் தம்மை வக்கீலாக பாவித்துக் கொண்டு குறுக்குக் கேள்விகளை வீசினர். மிரட்டினர்.

ரூஸ்வெல்ட் குறுக்கிட்டு.

''சார், நீங்க ரெண்டு பேரும் போங்க. நானும் ராமசாமியும் வர்ரதாக எஸ்.ஐ. கிட்டே போய் சொல்லுங்க''

''சரி'' என்றனர். ரூஸ்வெல்ட் இட்லி காபி வாங்கித்தந்தான். சிகரெட் பாக்கட்டை வாங்கித்தந்தான். ஊதித்தள்ளியவாறு, சைக்கிளைத் தள்ளினர்.

ராமசாமியின் பக்கம் திரும்பினான் ரூஸ்வெல்ட். அவனது சிவந்த சிறு கண்களைப் பார்த்த ராமசாமி மிரட்சிக்குள்ளாயினான்.

''என்ன செய்யணுங்கிறே?''

''ஏதோ நீமனசு வச்சு என்ன செஞ்சாலும் சரிதான்''

அதுக்கில்லேயா....கேஸ் போட்டா எப். ஐ. ஆர். கிழிக் கட்டும். கோர்ட்டுக்குப் போங்க. ஜாமீன் எடுத்து கேஸை நடத்த வேண்டியதுதான். நல்ல வக்கீல் ஒருத்தர் எனக்குப் பழக்கம் அவரை வேணும்னு உனக்கு ஏற்பாடு பண்ணித் தாரேன். அவரு கெட்டிக்காரர்தான்.''

''அதெல்லாம் எதுக்கு...? என்று அச்சத்துடன், தயக்கத் துடன் இழுத்தான். ரூஸ்வெல்ட் கண்களில் ஒரு மலர்ச்சியின் ''ஒளிச்சிதறல்!'

''வேறென்ன செய்யலாம்?''

''கேஸ் இல்லாமச் செஞ்சா நல்லதே. நீ நினேச்சா அப் படிச் செஞ்சுடலாம்''

ரூஸ்வெல்ட் உதட்டில் ஒரு மலர்ச்சி; நகையின் மின்னல்; தன்னை நெருங்கி வரும் மீனைப் பார்க்கும் கொக்கின் ஆனந்தப் பார்வை .

''கொஞ்சம் பணமாகுமே''

ராமசாமியின் முகத்தில் நிச்சயமாகிப் போன தாக்குதலை எதிர்நோக்கும் கைதியின் சோகமும் அபலைத்தனமும் ததும் பியது

''எம்புட்டு செலவாகும்?''

ரூஸ்வெலட் எஸ் ஐ.யை கடுமையாக விமர்சித்தான். 'பணந்தின்னி' என்று திட்டினான். இவனுடைய மனக் கொதிப்பை அவன் வழியாக மிகைப்படுத்தி வெளியிட்டான். இறுதியில் ஒரு முடிவுடன் கச்சேரிக்கு செல்ல **ஆயத்தமாயினர்.**

'பணத்துக்கு என்ன செய்வது?' இந்தக் கேள்வி ராமசாமி நெஞ்சில் பாறையாக கனத்தது. அவனைச் சுற்றிலும் இருட்டு.

கண்ணைக் கட்டி வனத்தில் விட்டது போல கனத்த இருட்டு. இருட்டுக்குள் எண்ணங்கள் தடுமாறின.

'கச்சேரி' போய்ச் சேர்ந்தனர். ஆறுமைல் தூரத்திற்கு ரூஸ்வெல்ட்டை பின்னால் வைத்து சைக்கிள் மிதித்த களைப்பு, ராமசாமியின் உடம்பை வதைத்தது. அண்ணன் கச்சேரியினுள் இருந்தார்

எஸ். ஐ. மேஜை ஓரத்தில் நிமிர்ந்து நின்றார். உயர்ந்து கனத்த தோற்றம். தொந்தி வயிற்றை இறுக்க முடியாமல் பெல்ட் திணறியது.

விசாரித்தார், சட்ட நுணுக்கமான விசாரணை. கதர் சால்வை போர்த்தியவாறு பொக்கை வாய் சிரிப்புடன் 'மகாத்மா' கண்ணாடிச் சட்டத்தினுள் சிறைப்பட்டு சுவரில் தொங்கினார்.

எஸ். ஐ. விசாரித்தார். ராமசாமியையும், அண்ணனையும் விசாரித்தார், கிராமப்புறத்து சிறுவிவசாயிகளின் கஷ்டங்கள் துயரங்கள் சண்டைகள் வெளிவந்தன. இறவைப் பங்கீடு, கரண்ட் தட்டுப்பாடு, மழையின்மை, இவைகளால் அதில் வரும் குழப்பம், அற்ப நிலத்தில் உயிர் தொங்கும் அவல வாழ்க்கையின் காரணமாக அதில் வரும் சண்டைகள் எல்லாவற்றையும் இருவரும் மாறி மாறி கூறினர்.

எஸ். ஐ. இருவரையும் மிரட்டினார். அண்ணன் தம்பி உறவின் உன்னதத்தை விளக்கினார். சமரச உணர்வை உருவாக்க எத்தனித்தார். இருவருக்குமே நாலைந்து அடிகள் விழுந்தன. கணக்கில்லாத வசைகள் நெஞ்சில் தீயாக விழுந்தன.

வெளியேற்றப்பட்டனர்.

ரூஸ்வெல்ட் உள்ளே போனான். எஸ். ஐ.யுடன் சற்று நேரம் கிசுகிசுத்துவிட்டு வெளியே வந்தான்.

''போய்ட்டு மூணு நாள் கழிச்சு வருவோம்'' என்று ராம சாமியை அழைத்துக் கொண்டு ரூஸ்வெல்ட் கிளம்பினுன்.

அண்ணனை மறுபடியும் எஸ். ஐ. அழைத்தார். மேலும் சூடான விசாரணை. மானக்கேடான வசவுகள். தாராளமான அடிகள் 'கேஸ் என்ருலும் சரி, ஆளைவிட்டால் போதும்' என்ற உணர்வு அவரைக் கவ்வியது.

''என்னய்யா ரெண்டு பேரும் 'ராசி' பண்ணிக்கிறீகளா, இல்லே கோர்ட்லே போய் சீரழியப் போறீகளா?'' என்று எஸ்.ஐ. கேட்டார். குரலின் கரகரப்பில் மிரட்டல் பளிச்சிட்டது.

''உங்க மனம் போல செய்யுங்க எசமான்''

மூன்ரும் நாள் ரூஸ்வெல்ட்டுடன் மேற்கொண்டு இருவர் எல்லாருக்கும் ராமசாமிதான் சாப்பாட்டுச் செலவு. ஐநூறு ரூபாயை ரூஸ்வெல்ட் வாங்கிக் கொண்டு போனுன், எஸ். ஐ. யைத் தனியாகப் பார்க்க.

சற்று நேரத்தில் சமரசப்ப திரம் எழுதி முடிக்கப்பட்டது. கையொப்பம் முடிந்தது. வெளியே வந்தபோது காக்கி உடுப் புக்கள் சூழ்ந்தன. மொய்த்தன. பேராசையுடன் பாய்ந்தன.

ரூஸ்வெல்ட் ராமசாமியிடம் கூறினுன்.

''நல்லவேளை இத்தோட முடிஞ்சது. கொஞ்ச பணம் செலவாயிட்டாலும் இவ்வளவோட முடிஞ்சு போச்சு. கோர்ட் டுக்குப் போயிருந்தால் என்ருகும்? குடியே நொறுங்கிப் போகும்''

எல்லோரும் பிரிந்தனர். ராமசாமி தனியனுனுன். இந்தச் சம்பவம் அவனை குழப்பி, திகைக்க வைத்து விட்டதே! எவ்வளவு பயமுறுத்தி விட்டது!

நேற்று மாட்டு வியாபாரி பணத்தை கொடுத்துவிட்டு எருமை மாட்டை யிழுத்தபோது நாராயணி அழுத அழுகை

அதை இழுக்கும்போது இவனுக்கேற்பட்ட வேதனையின் சோகத்தை பல மடங்காக பெருக்கியதை நினைத்துப் பார்த்தான்.

கச்சேரியை ஏறிட்டுப் பார்த்தான். ஏழைகளின் ரத்தத்தை பூசிக்கொண்டது போல பயங்கரமாகத் தோன்றியது.

ராமசாமியின் நெஞ்சில் என்னென்னவோ நினைவுகள் மோதின. வேதனை, துயரம், சோகம், அவலம், கோபம் எல்லாமே முண்டி மோதின. இறுதியில் ஒரு வார்த்தை பீறிட்டது.

''அட குடிகெடித்த பாவிகளா.''

சமரசத்தின் விலையாக வழங்கப்பட்ட எருமையின் இழப்பையும், அதனால் துடித்துப் போன நாராயணியின் அழுகையையும் எண்ணியவாறு சோகத்துடன் ஊரை நோக்கி நடந்தான்.

# குரூர நிறைவு

''ஆக்....ஹாய்...ஹாய்—ஆக் ஹாய்''

கொழுத்து ஜதை பிடித்திருந்த காளைகளின் முதுகில் கைகளை வைத்து முனியன் உல்லாசமாக அதட்டினான். காளைகளும் வால்களை சுழற்றியடித்துக் கொண்டு—ஓட ஆரம்பித்தன. அந்த ஓட்டத்திற்கேற்ற பிசகாத தாளமாய் கழுத்து மணிகள் 'ஜல்ஜல்...ஜல்ஜல்' ஓசை ரம்மியமாக ஒலித்தது.

வில் வண்டிக்கூட்டின் அசைவுகளால் பாதிக்கப்படாதவர் போல...எங்கோ சிந்தனை சுற்றித் திரிய அமர்ந்திருந்தார் 'வடக்குப்பண்ணை' வடிவேலு நாடார். தூய வெண்ணிறச் சட்டைக்கு மேல், சிவபெருமானின் நாகமாக சுருண்டு கிடந்த விசிறிமடிப்புத் துணியின் முனையை கையிலெடுத்து வீசிக் கொண்டிருந்தார்.

நீண்ட நேரமாக தொடர்ந்து சுமையாக அழுத்தும் மௌனத்தை சகிக்க மாட்டாதவன் போல், முனியன் மீண்டும் ஒரு முறை காளைகளை அதட்டி சுதாரிப்பு காட்டிவிட்டு, 'எஜமான் சாமி'யுடன் வாய் கொடுக்க ஆரம்பித்தான்.

'என்ன எஜமான்...போன காரியம் ஜெயந்தானே?' என்று விசாரித்தவாறே கழுத்தைத் திரும்பியவன், வாயில் ஊறிய மட்ரக 'பொடி கலந்த எச்சிலைத் துப்பிக்கொண்டான். இடத்தை மாட்டின் மீது விழுந்த எச்சில் துளியை மரியாதையுடன் துடைத்துக் கொண்டான்.

பதில் வராததால் கூண்டுக்குள் திரும்பியவாறே பொய்யான பெருமையில் சொன்னன் 'எஜமாஅவுக...போய் முடியாத காரியமா!'

,கம்பெர்ஸேன் வர்ரததுக்கு சம்மதிச்சாங்க. ரேட்லேதான் கொஞ்சம் ட்ரபிள் இருந்துச்சு. 'அதையும்கூட ஒரு மாதிரியா 'பைசல்' பண்ணியாச்சு''

'அதென்ன மகா பொல்லா ரேட்டு! இப்ப எவன் கம்பெர்ஸேன் வைச்சு கிணறு வெட்ருன்? சீந்த நாதியில்லாத 'சீப்பட்ட கழுதைக்கு, செருக்கென்ன வேண்டிக்கெடக்கு?'

'அதெல்லாம் அவனுக்கும் தெரியும். ஆனலும் 'கெராக்கி' பண்ணிக்கிடுறதுதானே அவங்க கொணமே.'

'அதுதானே! நாட்லே மழை தண்ணி யில்லாமெ போனலும் போச்சு...இவங்கபாடு கொண்டாட்டந்தான். அவனவன் கைத்துட்டையெல்லாம் கெணத்துலே கொட்டிட்டு வெறுங் கிணத்தை கவுந்து கவுந்து பார்த்துக்கிட்டிருக்கிருன். இவங்க என்னமோ...பெரிய..., 'இவங்க' மாதித்தான்.'' அவனது அங்காலாய்ப்பில் இயல்பான ஆத்திரம் இல்லே.

முனியன்...அவனுக்கே உரிய பாணியில் இடையிடையே எச்சிலேத் துப்பிக்கொண்டே பேசிக் கொண்டே போனன். ஆனல் வடிவேலு வேறு ஏதோ சிந்தனேயில் ஆழ்ந்து விட்டார்.

இரண்டு வருஷமாக வானம் கருமைத் திரைபடியாமல் கருணே காட்ட மறுத்துவிட்டது. மழையேயில்லே. ஏழை விவசாயிகள் தமது எஞ்சிய' குருதியை வாழ்க்கைப் போர்களத்தில் கொட்டித் தீர்க்க வேண்டியதாயிற்று.

கடன் உடன் வாங்கி...நகை நட்டுகளே விற்றும், அடகு போட்டும், எல்லாப் பணத்தையும் நீராக இறைத்து கிணறு வெட்டினர். கிணற்ருேரத்தில் மலேயாக பாறைகளும், கருங்கல்லும் குவிந்ததுதான் மிச்சம். தண்ணீர் முகம் காணமுடியவில்லே. விவசாயம் நஷ்டத்தின் விளே நிலமாக—நரகத்தின்

தலைவாசலாக மாறிவிட்டது. எல்லாரும் ஒய்ந்துபோன நேரத்தில்தான் வடிவேலுக்கு, நகரிலிருந்து வந்திருந்த ஒரு நில வள வங்கி அதிகாரி இந்த 'கம்பர்ஸென்' யோசனையைச் சொன்னார்.

இந்த ராட்சஸ இயந்திரத்தைப் பயன்படுத்தினால் வெகு வேகமாகவும், குறைந்த செலவிலும் கிணறை பிரம்மாண்டமாக ஆழப்படுத்தி நீர் வளத்தைப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையை விதைத்தார்.

அந்த 'விதைப்பு'...வளமாக அறுவடையாகி...இதோ

கம்பர்ஸென் வரப்போகிறது. ஊரையே வியப்பிலும் பயத்திலும் வாயைப்பிளக்க வைக்கப் போகிறது...

ஏழை மத்தியதர விவசாயிகள் முண்டிமுண்டி நொறுங்கிப் போன இந்த அக்கினி வறட்சியிலும்...இவர் புஞ்சைதான் 'பச பச'வென்றிருக்கிறது.

'எதை எதையோ' மேய்ந்து திரிந்த அவரது சிந்தனை... அவரை உள்ளூர புளகிக்க வைத்து விட்டது போலும்! கனத்து வெளுத்த மீசைக்கடியிலுள்ள கருமைப் படிந்த உதடுகளில் புன்னகை மின்னல்கள் நெளிந்தோடுகின்றன.

பணமிருந்தால் போதும் — விஞ்ஞானமென்ன......உலகத்தையே வாலாட்ட வைக்க முடியுமே' என அலட்சியமாக நினைத்து உள்ளுக்குள் வியந்து கொண்ட வடிவேலு சமீபித்து வரும் பிரச்சனைகள் பற்றி சிந்திக்க ஆரம்பித்தார்.

'கம்பர்'ஸன் டிரைவர்... அவர் ஜாதி... அவரை நடத்த வேண்டிய முறை... ''கடன் கடன்'' என்று சுற்றித் திரியும் ஜனங்கள்...அவங்க நிலம் என்ன பெறும்...? என்ன வேலைக்கு 'வளைச்சுப்' போடலாம் ..'

எண்ணம் வில்வண்டியின் தடம்போல் முடிவின்றி தொடர்ந்தது. இலேசாக வீசிய காற்று அவர் முகத்தில் மோதி விலகியது. அதனால் சலனமுற்று கண்களை விரித்தார். ' சே ' என்று வெறுப்புடன் கூறிக் கொண்டார்...இந்தச் சலனத்தினால் சலனமுற்று முனியன் திரும்பினான்.

'என்ன எசமா...'

'அடிக்கிற காத்துகூட அனலா அடிக்குதே'

'என்ன செய்றது எசமா,..ரெண்டு வருஷமா பூமியிலே சொட்டுத் தண்ணிவுழலே...வெக்கரிச்சுப்போய்க் கெடக்குது... ஒரு நொண்டி மேகம் மழையைப் பொழிஞ்சாக்கூட போதும்... கொஞ்சமாச்சும் குளுந்த காத்து வூசும்...'

வடிவேலு வெறுப்புடன் முகத்தைச் சுளித்தார். கண்களை இடுக்கிக் கொண்டு பேசினர்.

''மழை எப்படி பெய்யும்? ஏண்டா...தர்ம ஞாயம் செத்துப் போன நாட்டிலே எப்படி பேயும்ங்கிறேன்; எவனுவது பெரிய மனுஷனை மதிக்கிருனு? முளைச்சு முணு எலை விடறதுக் குள்ளே கட்சிங்கிருன்., தத்துவங்கிருன் ... சங்கம்கிருன் ... காலங் காலமா பெரியவங்க காத்துவச்ச ஜாதிக் கட்டுப்பாட்டையெல் லாம் 'ப்பூ'ன்னு ஒதறித் தள்ருன். ...இவங்கல்லாம் உருப்படு வானுங்களா? இவங்க இருக்கிற வரைக்கும் மழைதான் எட்டிப் பார்க்குமா?' சீற்றத்தில் அவரது குரல் கிழட்டு நாயின் உயிரற்ற உறுமலாக கரகரத்து மெலிந்தது.

''நெஜந்தா எசமான் நீங்க சொல்றதுதான் நூத்துலே ஒரு வார்த்தை, நேத்துக்கூட பாருங்க நா சாமி கும்பிட்டுட்டு 'துருநூரை" எம் பயலுகிட்டே குடுத்தேன். 'போயா சாமியா வது....பூதமாவது....'ன்னு ஒதறித் தள்ளிட்டான். காலம் முத்திப் போச்சு எசமா...'

சோர்வுடன் ஆமோதித்தான். தலையை உலுக்கினுன். சொன்ன பொய்க்காகவும் போடும் வேஷத்திற்காகவும் அவனது உள் மனம் சபித்துக் கொண்டிருந்தது. மனச்சாட்சி யின் திரைகளாக நாவின் சுழற்சியிருந்தது.

காளைகள் 'ஜல்ஜல்' ஓசையை நாதத்துடன் வரிசை தப்பாமல் அடி வைத்து நடந்து கொண்டிருந்தன. காளைகளின் வாயில் சோப்பு நுரை போன்ற எச்சில் வடிந்து கொண் டிருந்தது.

ஊர் சமீபித்துவிட்டது.

ஊருக்குள் வண்டி நுழைந்தவுடன் காளைகளை 'துடி'யாய் பத்தினான், முனியன். மணியோசையின் சலசலப்பு, வேகத்தின் அதிகரிப்பை பறையறிவித்தது. 'நிகருண்டா எனக்கு' என ஊரையே வினவுவது போலிருந்தது.

முனியனின் இந்த கர்வமிக்க உல்லாசத்தை ஆட்சேபிப்பது போல காளைகள், எரிச்சலுடன் தலையை உலுக்கின. சாட்டையாக வால்கள் மேலும் கீழுமாய் சுழன்றன.

வீட்டின் முன்பு வண்டி நின்றது. இறங்கி, வண்டியின் பின்புறம் ஓடிவந்து குறுக்குக் கம்பியை எடுத்துவிட்டு ஓரமாய் ஒதுங்கி நின்றான் முனியன்.

கால்களில் செருப்பை மாட்டிக் கொண்டு மெதுவாக இறங்கிய வடிவேலு...தனது வீட்டிற்கு எதிர்ப்பில் இருந்த வீட்டடி நிலத்தைப் பார்த்தார். அவர் மனதில் இனம் புரியாத ஏக்கம் சூழ்ந்து மனமே வெறுமையுற்றுவிட்டது போலிருந்தது.

முகத்தில் படிந்த இருளை விசிறி படிப்பால் துடைத்துக் கொண்டு வீட்டுப்படி ஏறினார். நட்சத்திரக் கூட்டத்திடையே பிரமாண்ட தோற்றத்துடன் நகன்றுவரும் வட்ட நிலாவைப் போல...அந்தக் கிராமத்து குடிசைகளுக்கு மத்தியில்...வடிவேலுவின் மஞ்சள்நிற வீடு, கம்பீரமாக நிமிர்ந்து, கடலாக விரிந்திருந்தது.

வீட்டுக்குள் நுழைந்து ஈஸிசேரில் அமர்ந்தவுடன், இளைய மகள் எல்லம்மா கொண்டு வந்து தந்த 'நீச்சுத் தண்ணீ'யை ஆர்வத்துடன் பருகினார். புளிப்பான மணத்துடன் உள்ளிறங்கிய அந்த நீர், உடலுக்கும், மனதுக்கும் புதிய தெம்பையே தருவது போலிருந்தது.

அவர்...எதிர்வரிசையில் கிடக்கும் வீட்டடி நிலத்தை மீண்டும் ஆவலுடன் நோக்கினார். நெஞ்சினுள் ஒரு தாகம்! தண்ணீரால் தணிக்கமுடியாத ஒரு பைசாச தாகம்!

சமுத்திரமாய் விரிந்து கிடக்கும் அந்த நிலத்தை வடிவேலு எத்தனை நாட்களாய்ப் பரர்த்திருக்கிறார்?. .எத்தனை மாதங்களாய் முயற்சித்திருக்கிறார்? எத்தனை வருஷங்களாய், அதை வாங்கி வசப்படுத்தி விடும் லட்சியத்தை மனதுள் வளர்த்து வந்துள்ளார்?,..அடேயப்பா!...

நாலாவது பெண்பிள்ளை எல்லம்மாவுக்கு பிறகு ஐந்தாவது குழந்தை — நான்காவது **ஆண்** குழந்தை—பிறந்த சில நாட்களிலேயே, இந்த லட்சியம் சூல் கொள்ள ஆரம்பித்து விட்டதே !

இருக்கிற வீடு பெரிய வீடுதான்...இப்போதைக்கு போதுமானதுதான். ஆனால் நான்கு மகன்களும் வளர்ந்து, கிளை பிரியும் காலத்தில் ஆளுக்கொரு குடும்பமாக வாழ...நாலு வீடுகள் வேண்டுமே! அதுவும் 'வடக்குப் பண்ணை வடிவேலு'வின் அந்தஸ்துக்கேற்ற நான்கு வீடுகள் வேண்டுமே! அதற்கு பொருத்தமான—விரிவான — நிலம் தேவையே!

வருடாவருடம் நஞ்சையும் புஞ்சையும் வாங்கத்தான் செய்கிறார், ஆனால் அதைவிட இது, முக்கியமல்லவா? காசை வீசியெறிந்தால் அவருக்கு கிடைக்காத வீட்டடி நிலமாக ஆனால் அவரது குறி, இந்த எதிர் வீட்டடி நிலத்தின்மேல் விழுந்திருப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது, வடிவேலுவின் பாட்டனாருக்குப் பாட்டனாரின் வீடாம், அது! ஏதோ ஒரு பஞ்சத்தில் நாலு மரக்கால் குதிரை வாலி தான்யத்துக்காக, அந்தக் காலத்தில் கைமாறிப் போன பூர்வீக ஆஸ்தியாம் அந்தப் பூர்வீகப் பாசமும், வடிவேலுவின் நெஞ்சில் ஏதோ ஒரு பசையாக ஒட்டிக்கொண்டிருந்தது.

இப்போது, 'அந்த வீட்டடி நிலம்' பொன்னையா கையிலிருக்கிறது. அவரோ மத்தியதர விவசாயி. ஒரு சொந்த பம்செட் கிணறு, அதைச் சுற்றி ஐந்து ஏக்கர் நாற்பது சென்ட் புஞ்சையும் வேறு இரண்டு பம்ப்செட் கிணறுகளில் பாதி பாதி பங்கும், அதற்கான ஆறு ஏக்கர் நிலமும் உள்ள பசையான புள்ளி.

மண்ணோடு வாழ்க்கையை பிணைத்தே ஜீவிக்கும் கிராம மனிதர்கள், ஒரு நிலத்தை துண்டு நிலமாயிருந்தாலும் சரி—

அதை விலை சொல்லி விற்பது விபச்சாரத்தைவிட மிக கேவல மாக—அபச்சாரமாக நினைப்பார்கள். அது வீழ்ச்சியைக் குறிக்கும் அவக்கேடு எனக் கருதுபவர்கள். சாதாரண ஏழை விவசாயிகூட நிலத்தை இழப்பதென்றால்... மனதறிந்து மனைவியை அடகு வைப்பதுபோல அவமானப்படுவான் அப்படியிருக்க ... பசையுள்ள பொன்னையாவிடம் நிலத்தை வாங்குவது லேசான காரியமா? வறட்சிக் காலத்தில் மூன்று போக விளைச்சல் எடுப்பது போலல்லவா! சாத்தியமாகக் கூடிய விஷயமா, என்ன!

நம்பிக்கை வறட்சியினால் மனம் குமைந்து தவித்தார் வடிவேலு. என்னென்னவோ பகீரதப் பிரயத்தனமெல்லாம் செய்து பார்த்தும். தோல்விச்சேற்றிலியே வழுக்கி வழுக்கி விழுந்தார்.

தன்னுடைய கையாட்களை கிளப்பிவிட்டு...சில சமயம் பொன்னையாவின் வைக்கோற் படப்பில் தீயை வைத்து சாம்ப லாக்குவார், இன்னும் சில நேரத்தில் காய்த்து குலுங்கும் மிளகாய்த் தோட்டத்திற்குள் புகுந்து...செடிகளை வேருடன் பிடுங்கி பிடுங்கிப் போட, 'கள்ளு' பக்தர்களை அனுப்பி வைப்பார்.

பொன்னையாவிடம் நன்றாகப் பழகி, அவர்களது விரோதி களைப் பற்றி 'கன்னாபின்னா'வென்று பேசி கலகத்தை மூட்டி விடுவார். போலீஸ் கேசாக்குவார். விரோதிகள் போர்வை யில் அழிவுப் படலத்தை நடத்துவார்.

இந்த சதிப்பணிகளை எப்படியோ அறிந்துகொண்ட பொன்னையா ஒருநாள் வீடேறி வந்து--நாக்கில் வராத அசிங் கத்தினால் திட்டிவிட்டு ''ச்சீ...நீயும் மனுஷந்தானா? ஒருத்தனுக் குப் பொறிந்தீயா...இல்லே சாதி கெட்டு தப்பிப் பொறந்தியா? சே!'' என்று காறி, எச்சிலாக வார்த்தைகளைத் துப்பிவிட்டுப் போய்விட்டார். அத்தோடு அந்த இரண்டு குடும்பத்துக்கும் ஆகாமல் போய்விட்டது.

கடந்து சென்ற ஆறு ஆண்டுகள், பகை உஷ்ணத்தையும், கொஞ்சங் கொஞ்சமாகக் கரைத்துக்கொண்டு சென்றுவிட்டன. மறுபடியும் நம்பிக்கை ஜீவன் பெற்று, துளிர்விட்டு வளர ஆரம்பித்துவிட்டது.

''அப்பா...சாப்ட வருவீகளாம்...'' எல்லம்மாவின் குரல் வேலுவடிவின் உள் மனச் சலனத்தை ஸ்தம்பிக்க வைத்தது. நிமிர்ந்து மகளைப் பார்த்தார். அவர் முகத்தில் படிந்திருந்த விசன ரேகைகள்...எங்கோ ஓடிப் பதுங்கிக் கொண்டன. எழுந்து சட்டையைக் சுழற்றி...கால் கையை கழுவிவிட்டு சாப்பிடும் அறைக்குப் போனார். மகன்கள் சாப்பிட்டுப் போய் விட்டிருந்தனர். மனைவி தான் எதிர் கொண்டழைத்தாள்.

''என்ன போன காரியம் என்ன ஆச்சு ?''

''எல்லாம் முடிஞ்சது. நாளைக் கழிச்சு வேலைக்கு வர்ருங்க'' எல்லம்மா உணவைப் பரிமாறினாள். சோற்றில் பருப்புக் குழம்பைவிட்டு நெய்யை வார்த்த எல்லம்மா...

''அப்பா... பொன்னையா மாமா உங்களைத் தேடி வந்துட்டுப் போனாரு...'' என்று தகவல் கூறினாள்.

''பொன்னையாவா ? என்னவாம் ?''

ஆனந்த அதிர்ச்சி அவர் குரலில் துல்லியமாக ஒலித்தது. ''என்னமோ...அம்மாகிட்டேதா ரொம்ப நேரம் பேசிக்கிட்டிருந்துட்டு போனாரு...''

''என்ன பாருவதி...என்னவாம்?'' மனைவியிடம் அவசரமாகக் கேட்டார். நிதானம் தவறிய ஒரு இனம் விளங்காத பரபரப்பு, அவரது நெஞ்சை அலைக்கழித்தது. வலையில் ஒரு வகையான பிராணி சிக்கப் போகிறது என்றால்...வேட்டைக் காரன் உள்ளம் துள்ளத்தானே செய்யும்?

''வேறொன்னுமில்லே...'' என்ற முன்னுரையுடன் ஆரம்பித்த பார்வதி...மெல்ல விஷயத்தை கூற ஆரம்பித்தாள்.

போன நாலு வருஷமா...மாறி மாறி சடங்கு, கல்யாணம் எழவுன்னு வந்து கையிருப்புக் காசெல்லாம் கரைஞ்சிடுச்சாம் அவருக்கு. இந்த ரெண்டு வருஷமா அவருக்கு மழையில் லியா ? அவர் கெணறும் உச்சிமேட்லே இருக்கா ?''

''ஆமா...'' அவர் தலை ஆர்வத்துடன் ஆடியது. முகத்தில் ஒரு குரூர ஒளி !

''தண்ணியில்லே. எங்கெங்கு முடியுமோ அங்கெயெல் லாம் கடன் உடனே வாங்கி கெணத்தை வெட்டியிருக்கிருரு. இதுலே பங்குக் கிணறுக வேறே. இது போக...பம்ப்ஷெட் வேறே ஒரு ஏதோ தீ பிடிச்சிருச்சாம்...கடன் வாங்க வேறெ வழியில்லே...''

பொறுமையிழந்துவிட்ட வடிவேலுக்கு கோபம் 'சுள்' ளென்று வந்துவிட்டது. ''ஓம்புத்திபடியே பேசாதே...கழுதை ! விஷயம் என்னன்னு சுருக்கா சொல்லேன்...? மூதி''

''சொல்லிக்கிட்டுத் தான் வாறேன்லே ? அதுக்குள்ளே என்னவாம்?'' என்று பதற்றப்படாமல் சீறிய பார்வதி, தொடர்ந்தாள் ;

''உங்ககிட்டே கேக்கவரணும்னு மனசுக்குள்ளே ஆசை யாம், பெறகும்... 'அப்போ நாக்குலே நரம்புல்லாமே பேசிட் டுப் போனேமே, இப்ப எந்த மூஞ்சியோட போய் கடன் கேக் கிறது'ன்னு மனவாதனையாம்! அதனுலே ..ஏங்கிட்டு சொல் லிட்டுப் போயிருக்காரு ..!'

'என்ன சொல்லியிருக்காரு ?'

நாலாயிர ரூபா தரணுமாம்...அடுத்த வருஷ வெள்ளா மையிலே அட்டியில்லாமெ வட்டியோட தந்துடுவாரம்.,.

'என்னமாய் வாழ்ந்த மனுஷன், ரெண்டு வருஷ வறட்சி... இவரோட இடுப்பையே ஒடிச்சிடுச்சே...! இவர் பாடே இப்பு டின்னு...பாவம், ஒழைச்சுக்கஞ்சி குடிக்கிறுங்களே...அவங்க எல்லாம்...ச்சூச்சூச்சூம்...சவப் பொழைப்புதான்...'

சம்பந்தமில்லாமல் கருணை வடிக்கும் அவரது பேச்சு பார்வதிக்கும் சந்தேகத்தை கிளப்பிவிட்டது. இரக்கப்படுகிருரா, ஏளனப்படுத்துகிருரா, சந்தோஷப்படருரா,...இந்த குள்ளநரி மனசை புரிஞ்சுக்க முடியலியே ..

நாற்பது வருஷங்கள் தாம்பத்ய வாழ்க்கையில் இணைந்து பிணைந்து பழகி பரிச்சயமான பார்வதிக்கே...இப்படி மர்மமாக இருந்தது.

திடுமென கூறிஞர் ; 'இங்கே ஒன்னும் வட்டிக்குப் பணம் கெடையாதுன்னு 'கட்டன்ரைட்டாக சொல்லிப்போடு. அவர் குரலில் கண்டிப்பும், நிர்த்தாட்சண்பமும் நிர்வாணமாக ஒலித்தன. ஏதோ நினைத்துக் கொண்டவராக 'நாளைக்கே சொல்லிப்போடு ஆமாமம்...' என்று உத்தரவு போட்டார். அவர் சொல்லும் போதே...அவர் மனத்துக்குள் புதிய திட்டம் ஒன்றுக்கு உருவம் கொடுத்துக் கொண்டிருக்கிருர் என்பதை பார்வதி பூடகமாக புரிந்து கொண்டாள்...

இரண்டு நாட்கள் சுறுசுறுப்பாக ஒடின. வடிவேலு வேகமாக நுண்ணியமாக இயங்கிஞர். அவரது மூளை சாணக்கியத் தனமான சாமர்த்தியத்துடன் சிந்தித்தது.

முனியனைவிட்டு ரெங்கசாமி கூட்டிவரச் சொன்ஞர். ரெங்கசாமி...ஊரிலேயே பொதுவான ஆசாமி போல தோன்றுவார் ஆனுல் சரியான நரி. லாபம் வரும் திக்கைப் புரிந்து கொண்டு ஏதாவது ஒரு கோஷ்டியில் ரகசியமாக இணைந்து கொள்வார். இணைவும் லாபமும் ரகசியம். 'பொதுவாள்' என்ற பெயர் மட்டும் பரசியம் இப்படியோர் 'கேரக்டர்' அவர். வாழ்க்கைபின் நடப்பைப் புரிந்து அதற்கேற்ப தன்னை தயாரித்துக் கொண்ட சாமர்த்தியசாலி.

ஈஸிச்சேரில் சாய்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த வடிவேலு, ரெங்கசாமியின் தலையைப் பார்த்ததும்.,. 'வாரும் வாருமாய்யா...என்ன ஆளைப்பாக்குறது...காத்திகைப் பிறையைப் போலப் போச்சுது' என்று வெகுபலமாக வரவேற்ருர். முகமெல்லாம் ஆனந்த ஜொலிப்பு!

'எதற்காக வரச்சொன்ஞரோ ..'என்ற காரணமற்ற மர்ம மான பயம் மனதை வதைத்தாலும், வெளிப்பார்வைக்கு சர்வ சாதாரணமாக சிரித்துக் கொண்ட ரெங்கசாமி பவ்யமாக சொன்ஞர்!

'அதெல்லாமில்லே மாமா, நீங்கதான் பெரிய பார்ட்டி. உங்களே பாக்குறதுதான் குருதெக் கொம்பாயுருக்கு'

'சரியான ஆளய்யா..,நீர்,-ஒம்மோட பேசிக் ஜெயிக்க முடியுமா? என்று கள்ளத்தனமாக சிரித்துக்கொண்டே சரணுகதி அடைத்தார் வடிவேலு.

எல்லம்மாவைக் கூட்பிட்டு காப்பி போடச் சொன்ஞர். வரவேற்பு, உபச்சாரம் எல்லாம் பலமாயிருந்தது. அது ரெங்கசாமிக்கு பயத்தை ஏனே வளர்த்தது.

பேச்சு, குருட்டு ஈயைப்போல எங்கெங்கோ அர்த்தமின்றி சுற்றித்திரிந்த பிறகு...மெல்ல விஷயத்துக்கு வந்துநின்றது.

'ஒம்மை எதுக்குவரச் சொன்னேன்ஞ...?என்று ஆரம்பித்தார். வடிவேலு ஜாக்கிறதை உணர்ச்சியுடன் தலேயை அசைத்தார் ரெங்கசாமி.

'....எனக்கு வயசாகிக்கிட்டுப் போகுது, நம்ம பயகளுக்கு ஒரு வழியெ அதுக்குள்ள ஏற்படுத்திட்டுப் போயிடனும்னு நெனேக்கிறேன். நம்ம ஓலே எப்போ கிழியும்னு, நமக்குத் தெரியுமா, என்ன? அதுதான்... நாலு பயகளுக்கும் போதுங்கிற மாதிரி இன்னும் ரெண்டு வீடெ கட்டிப் போடலாம்னு ஆசை.... என்ன சொல்றீர்?'

'பேஷா.. .கண்டிப்பா செய்யனும்....'

'ஆமாமம். அதுதான்....ஒம் பார்வையிலே ஏதாச்சும் வீட்டடி நிலம் இருந்தா சொல்லும்....வாங்கிப்போடுவோம்... ஒமக்குரிய கமிஷனே தாராளமாகவே தாரேன்....என்ன சொல்றீரு?'

வடிவேலு நிறுத்தவும், ரெங்கசாமி 'கபகபா'வென சிரித்தார். சிரிப்பிற்கிடையே வார்த்தைகளை சிதறினார்.

'தோளுலே போட்டுகிட்டு காடெல்லாம் குட்டியைத் தேடுனும் இடையன் அது மாதிரியில்லே இருக்கு ஒங்க கதை! எதுத்தாப்புலே கெடக்குது வீட்டடி நிலம்....நீங்க எங்கேயோ தேடச் சொல்றீகளே'

'அது எனக்கு தெரியுதையா? பொன்னையா வுடமாட்டாரே.

'அதெல்லாம் பழைய கதை. இப்ப அவருபாவம். ஆடிக் காத்து துரும்பாதிரியுருரு. இந்த வறட்சித்தீயிலே....ஜீவனத்துப் போய்க்கெடக்காரு....'

அப்ப....சரிதான்....முடிஞ்சா நைசாக் கேட்டுப்பாருமே'

'முடிஞ்சா கேக்குறதென்ன, கேக்குறது? முடிச்சே காட்டுறேன் போதுமா....?'

ரெங்கசாமி அடித்துப் பேசினார். வடிவேலு, தயங்கியவாறே அனுமதித்தார். முடிந்தால் சரிதான்' என்னும் பெருமூச்சும் விட்டுக் கொண்டார். ரெங்கசாமி லாபம் கிடைக்கிற மகிழ்ச்சியின் மிதப்பில் வெளியேறினார்.

வடிவேலுவின் உதடுகளில் தந்திரப்புன்னகை அரும்பி மலர்ந்தது. கோழிக்குஞ்சை தின்று முடித்த பருந்தின் கண்ணைப்போல அவரது கண்கள், குரூர நிறைவில் ஜொலித்தன.

இருக்காதா பின்னே! நீண்டகால வெறியைத் தணிக்க வறட்சியே ஆயுதமாக பயன்படுகிறது.

ராஜாத்தி மண்டையை போட்டுவிட்டாள். அவளுடைய மகன் ராசாங்கம் பாலூற்ற....நீண்டநேரமாக தவித்துக்கொண்டிருந்த ஜீவதீபம் பொசுக்கென அணைந்து போயிற்று.

அந்த நார் உறிந்த கட்டிலில் கிழிந்த நாராகக் கிடந்த ராஜாத்தியை சுற்றி சூழ்ந்திருந்த மாதர் கூட்டம், இதற்கென தயாராக காத்திருந்ததைப் போல... ... ஓ'வென குரலெடுத்துப் ஒப்பாரி வைத்தனர்.

'அடியாத்தா.......வாயிலே மண்ணையள்ளிப் போட்டுட்டையே...''

''என்னைப் பெத்த எங்காத்தா... ...ஏமாத்திட்டுப் போயிட்டையே....''

''பேரப்பிள்ளைகளை பேணிப்பேணி வளர்த்தீயே—எங்களைப் பேதலிக்க வைச்சுட்டு ஓடிட்டையே....''

குரலெடுத்து பெண்கள் அழுதனர். அந்த சப்த அலைஓசை நயமின்றி அவலக் கூச்சலாக அலறியது. நிகழ்ந்துவிட்ட மரணத்தை பிரகடனப்படுத்துவதைப்போல.

அடர்ந்த புகையாகச் சூழ்ந்து நெருங்கிய அந்த அழுகைக் குரலை ராசாங்கத்தை அழுவதற்கு நிர்ப்பந்தித்தது. அவனது தொண்டை கமறியது. ஆனல் அழுகை வரவில்லை.

'பெத்துச்சீராட்டி பேணி வளர்த்தவள் செத்துக் கிடக்கிறப்போ பெருந்தூணு நின்னேங்கிற பேச்சு வந்துடுமே' என எண்ணிய ராசாங்கம் வேஷத்துக்காகவாது அழவிரும்பினுன். ஆனல் அழவில்லே. முகத்தில் சோகத்தின் ரேகைகள்கூட பதிய மறுத்தன.

ஏதோ மூன்ரும் மனுஷியைப் பார்ப்பதுபோல் பற்கள் வெளித்தெரிய கிடந்த அம்மாவின் சுருக்கங்கள் நிறைந்த முகத்தைப் பார்த்தான். பாம்படம் போடுவதற்காக வளர்ந்து, நனேந்த சணல் கயிருக துவண்டு கிடந்த காது நுனிகளே கவனித்தான்.

இதே காதில் கனத்த பாம்படம் ஊஞ்சலாட, வலிவுகுன்ருத உடம்போடு தெம்பாக அலேந்த நாலேந்து வருடத்துக்கு முந்தைய அம்மாவை நினேத்துப் பார்த்தான். வெறுப்பில் ஊறிய நினேவுகள் நெஞ்சில் ஊர்த்தன.

அந்த பாம்படத்தின் மீது அவள் எத்தனே பாசம் வைத்திருந்தாள். வெறித்தனமான பாசம். மரணத்தின் இறுதி எல்லேவரை ஏன் மரண தினத்தன்றுகூட இந்த பாம்படம்தான் தனது கௌரவத்தையும் உணவையும் காப்பாற்றும் என்று மலேப்பாறை உறுதியான நம்பிக்கை வைத்திருந்தாள்.

'இந்த பாம்படம் இல்லேயாளுல்....... கடைசிக் காலத்தில் கஞ்சியூத்த நாதியற்றுப் போவோம். ஒரு ஈ காக்கைகூட எட்டிப் பார்க்காது. செத்த பிணத்தையும் சீந்த நாதியிருக்காது' என்ற திடமான கணிப்புதான் அவளே அந்த தங்க ஜடத்தின் மீது அத்தனே பாசம் கொள்ள வைத்தது.

போன மூன்ரும் வருஷம், இந்த பிரதேசம் பூராவும் வறட்சித் தீயில் கருகிக்கொண்டிருந்த சமயம், தனது இரண்டு பிள்ளேகளும் மனேவியும் எந்த வேலேயும் கடனும் கிடைக்காமல் பட்டினிக் குளிரில் விறைத்துக் கிடந்த நேரம்.

''அம்மா அந்த பாம்படத்தைக்குடேன். அடகு வைச்சு.... ஒரு மாதச் சாப்பாட்டுக்காவது வழிபாத்துக்கிடுதேன்'' என்று கெஞ்சினுன். ஆனல் ராசாத்தி ஒரேயடியாக மறுத்து விட்டாள்.

''ஒன்னை ஒம்பதாக்குற உத்தமி வவுத்திலே பெறந்த நீ.... ஒன்னுக்கும் வழியத்துப்போய் நிக்கறே. ஒனக்கு வாய்ச்ச வளோ....அடியாத்தே.... ஒம்பதை ஒரு நொடிக்குள்ளே ஒன்னுமில்லாமே ஊதிக்காட்டுறவள். உங்களுக்கு எவ்வளவு போட்டாலும் அடைபடாதப்பா... என்று ஒரு மூச்சு திட்டினுள். திட்டு மழைக்குப் பிறகு கொஞ்சமாவது கருணைக்கசிவு நடக்குமென்ற நப்பாசையில் கோபத்தை அடக்கி மௌனமாயிருந்தான். அவளது அங்கலாய்ப்பு, அனுமான் வாலாக நீண்டது.

''....உள்ளது உரியதெல்லாம் வித்து உங்களுக்கே போட்டாச்சு. மிஞ்சி நிக்குது இது ஒன்னுதான். 'சாவுமுதலு'க்கு கிடக்கிற இந்த பாம்படத்தையும் பிடுங்கிக்கிட்டு காதறுத்த சூர்பனகையா வுட்டுடணும்னு துடியா துடிச்சு நிக்கறே. வெறும் மூளியாக நிக்கணுமாக்கும்! அதென்ன தலையிலே கிழிச்ச எழுத்தா, எனக்கு?

''இதையும் ஒங்கிட்டே குடுத்துட்டா அவ்வளவுதான். அத்தோட தொலேஞ்சேன். யாரு என்னை ஏறெடுத்துப் பார்ப்பா? தாகத்துக்கு தண்ணி கேட்டால்....மேகத்துக்கு ஆளனுப்புவே.... வெந்த சோறு போடப்பான்னு கேட்டா....வெளையாத நெல்லைக் காட்டுவே....உயிரை விட்டுக் கிடந்தாலும் உருட்டிப் பார்க்க மாட்டே 'தாயா இவள்? யாரோ தெரியலியே'ன்னு வாயலுங் காமெ சொல்லுவே....

''போடா போ...புள்ளையாம் தாயாம்...எல்லாம் பொய்''

நீண்ட நெடிய அந்த அங்கலாய்ப்புக்குப் பிறகு, முற்றுப் புள்ளி இத்தனை இருட்டுக் கற்பனையாக வந்து விழும் என்று எதிர்பார்க்கவேயில்லை.

ராசாங்கத்துக்கு சண்டாளமாகக் கோபம் வந்தது. புள்ளை குட்டியோட நா பட்டினி கிடக்க...நீ காதுலே நகையைபோட்டு ஆட்டாணுமாக்கும்'' என்று கத்தலாமா என்று நெஞ்சு துடித்தது.

மார்பகத்துக்குள் ஒரு உக்கிரமமான எரிச்சல். கண்ணில் கொப்பளித்த உஷ்ணப் பெருக்கைத் தாங்கமாட்டாதவளாக ராஜாத்தி, புலம்பிக்கொண்டே, முனங்கிக்கொண்டே தலை கவிழ்ந்து அழுதுகொண்டே போய்விட்டாள்.

''வேஷக்காரி....' என்று அவன் உதடுகள் உச்சரித்தபோது அதில் எல்லையற்ற கோபமும், கையாலாகாத்தனமும் வெளிப் பட்டது.

'இதோ செத்துக் கிடக்கிருள்....என்ன சாவுமுதல் வைச்சி ருக்காள்....ஒன்னுமில்லே....இன்னிக்கு அத்த பாம்படமா...இந்த பிரதேசத்துக்கு கௌரவமான சவ அடக்கத்தை செய்யும்? அது தான் மரணத்தருவாயில் ராஜாத்தியே வித்து தின்னு போட்டாளே...ஒன்னை ஒம்பதாக்குகிற உத்தமியாமே அவள்? சிறுக்கி...

எண்ணங்கள் சிலந்திப்பசையாக முடிவில்லாமல் நீண்டு வலை பின்ளிக் கொண்டிருந்தது. திடுமென ஏதோ பிரக்ஞை யுற்றவனைபோல விழித்தான். மனிதபிமான உணர்வு அவனது மன ஓட்டத்தைக் கண்டித்தது.

என்னதான் கோபதாபங்கள் இருந்தாலும், செத்துக் கிடக் கிற சடலத்தைப் பத்திப் பேசக் கூடாது...சொல்ற குற்றச்சாட் டுக்கு வந்து பதில் சொல்ல முடியாத ஒரு ஜீவனைப்பத்தி பேசற துக்கு எனக்கென்ன உரிமையிருக்கு?'' என்று சுய விமர்சனமாக முணுமுணுத்துக் கொண்டான்.

மனைவி, மாதர் கூட்டத்துடன் சேர்ந்து அழுதுகொண்டி ருந்தாள்.

ராசாங்கத்தின் மனதில் இது ஒரு கேள்வியாக முளைவிட்டு, வியப்பாக வியாபித்தது.

பின்னும் ஒருமுறை அம்மாவைப் பார்த்தான். வெற்றிலைக் காவிப்பற்கள் அசிங்கமாகத் தெரிந்தன. வெள்ளைத்திரை விழுந்த இடுக்கிய கண்களை இன்னும் யாரும் மூடவில்லை.

நனைந்த சணல் துண்டாக துவண்டு கிடந்த செவிகளின் அடிப் பாகத்தையும் பார்த்தான்.

நெஞ்சுக்குள் இனம்புரியாத அசூயையும் கோபமும் பரவி யது. வெளியே வந்தான். அதற்குள் சாவு விஷயம் தெரு

பூராவும் படர்ந்துவிட்டது போலும்! வெளியே ஒன்றிரண்டு பெரிய மனிதர்கள் வந்து நின்றனர்.

துக்கம் விசாரித்தனர். அவர்கள் முகத்திலும் அப்படியொரு துக்க சாயல் வெளிப்படவில்லை.

''என்ன ஒடம்புக்கு சுகமில்லாமெ படுத்திருந்தாளா?''

''ஆம் மாமா...சும்மா சளிக் காய்ச்சல்னு படுத்தாள். நாலு நாள்தான் கிடந்தாள்........மழைக் காலமாயிருக்கிறதுனாலே பொசுக்குன்னு சுருட்டிடுச்சி''

''சரி....யார் யாருக்கு தந்தி கொடுக்கணுமோ...அந்த வேலைகளைக் கவனிக்கக்கூடாது...?''

''கவனிக்கணும்''ராசாங்கம் அசிரத்தையாக முனங்கினான்

ஆட்கள் வரஆரம்பித்தனர். கூரை நிழல்களிலும், அவரைப் பந்தலுக்கடியிலுமாக கும்பல் கும்பலாக உட்கார்ந்து, மாகாண அரசியல், ஊர் விஷயம்...பிற குடும்ப ரகசியங்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

'' ஊர்லே எத்தனை அரசியல் கட்சிகள் இருந்து என்ன செய்ய? இத்த ஊருக்கு ஒரு ரோடுகூட இல்லாமெ தீவுபோல கிடக்கு'' என்று ஒரு பெரியவர் ஆவேசமாகக் கத்தினார்.

ராசாங்கம் எதிலும் பட்டுக் கொள்ளாமல் மேல் துண்டை தலையில் போட்டு ஒரு ஓரத்தில் உட்கார்ந்தான். ஒரு பையனை விட்டு கடையில் வெற்றிலைக் கட்டும் பாக்கும் வாங்கிவரச் சொல்லி ஒரு பெட்டியில், நாட்டாண்மை முன்பு வைத்தான். அவர் 'வெத்திலைச் செலவை' செய்தார்.

ஒவ்வொருவராக அவனிடம் வந்து துக்கம் விசாரித்தனர். அவன் அவைகளை உள்ளூர வெறுப்புடன் வாங்கிக் கொண்டான். ஏதோ மனம் ஒட்டாத பதிலாக உதறினன்.

அவன் போட விரும்பிய சோக வேஷம், வரமறுத்தது.

வேலைகள் இவனை எதிர்பாரமல் சிறகுகட்டிப் பறந்தன. குழி தோண்ட ஆளனுப்பப்பட்டனர். நான்கு வாரி (தேக்குக் கம்பு)களை எடுத்து வந்து வீட்டின்முன் ஊன்றி, அகத்தி குச்சிகளால் பின்னி, தென்னங்கிடுகுகளை போட்டு ஒரு பந்தல் போட்டனர். பந்தலில் அடியில் ஒரு வெள்ளைத் துணியைக் கட்டினர். நாவிதனும், ஏகாலியும் வந்து நின்றனர்.

ஒரு கிழவி அழுது முடித்து விட்டு வெளியே வந்தவள் ராசாங்கத்தினருகிலும் வில்லிலிருந்து விடுபட்ட அம்பாக பாய்ந்தாள்.

''அடப்பாதகத்தி...ஒன்னை விட்டுட்டுப் போயிட்டாளே... பாவஜன்மங்க எங்களை யெல்லாம் போட்டுட்டு, குருட்டுப் பய தெய்வம்...புண்ணியவதியை பூப்போல எடுத்துபோயிடுச்சே...'' என்று ஒரு மூச்சு புலம்பி அழுதாள். அதற்குப் பதிலாக அவனும் குமுறி அழ வேண்டும். அதுதான் மரபு.

ஆனல் அழவில்லை. பிரக்ஞை யற்றவனைப் போல அந்தக் கிழவியை நிகைப்புடன் வெறித்தான். இவனது துக்கமற்ற நிலையை மனதுக்குள் கண்டித்துக்கொண்ட கிழவி, அதை மறைமுகமாக சுட்டிக்காட்டுவதுபோல மேலும் பேசினள்:

''உங்க அப்பா சாகும்போது ஒனக்கு வயது ஏழுதானிருக்கும். ஓந்தங்கச்சி கைப்புள்ளையாயிருந்தாள். அப்போ, இந்த கண் விழிக்காத பச்சை மண்ணுகளை வைச்சுக்கிட்டு அவபட்ட பாடு கொஞ்சமா! காட்லே ஒழைச்சு உயிரைக் குடுத்துட்டு வீட்டுக்கு வந்து சோளத்துக்கு காத்திருந்து வாங்கி இடுச்சி, சோறுகாச்சி உங்களுக்கு ஊத்துவாளே...

''பட்டினியிலே தன் வயிறு காஞ்சாலும், புள்ளை முகம் வாடாமெ வளத்து சிறகு முளைக்க வைச்சாளே...உங்களை வளக்

குறதுக்காக...வளர்த்து பெரிசாக்குறதுக்காக அவ பட்டபாடு.... ஒழைச்ச ஒழைப்பு...அனுபவிச்ச துன்ப துயரம்...அடட...நீங்க அவளை கோயில் கட்டி கும்பிடலாமே''

கிழவி போய்விட்டாள். அவள் எரிந்து விட்டுப்போன ஊசிகள் மனதுக்குள் குத்தி...ரணகாயத்தில் சீழ்வடியச் செய்தன. இதய மூலைகளில் புழுதி மண்டி முடங்கிக் கிடந்த பழைய நினைவுகள், தூசி பறக்க வெளிக் கிளம்பின.

தான் ஏழு வயதாகவும், தங்கை கைக்குழந்தையாகவும் இருந்த சமயத்தில், பொட்டிழந்த வெறுமையிடன், பொருளாதார சூன்யத்துடன் வாழ்க்கையை எதிர்த்து நின்ற அந்த வைராக்கியத்தின் வடிவம் அவனது நினைவுக் குளத்தில் மெல்லிய அலைகளாக விரிந்தன.

சிறுவயதில் ஆடு மேய்த்து, எவனிடமாவது அடிபட்டு தேம்பியழுது வந்த தனது தலையை அன்புடன் தடவி, தவிப்புடன் கண்ணீர் சிந்தி, ஆறுதலாக அணைத்துக் கொள்ளும் அந்தத் தாய்மையின் பாசதரிசனம்!

'தீபாவளி' 'பொங்கல்' போன்ற நல்ல நாட்களில் ஊரெல்லாம் தோசை பலகாரம் வடை நர்த்தனமாட, வெறுமையில் வெந்து, ஏங்கித் ததும்பும் தன்னையும், தன் தங்கையையும் சந்தோசப்படுத்துவதற்காக (போலியாகத்தான்) அவன் சொல்லும் ஆசை மொழிகள்...

'' பொறுங்க...இன்னும் ரெண்டு நாள்லே தோசை சுட்டுத் தர்ரேன்'ன்னு சொல்ற பலகார வார்த்தைகள்...இப்படி புள்ளைகளிடமே பொய் சொல்ல வேண்டியிருக்கிறதே என்கிற மன உறுத்தலும், வறுமையின் அவலமும் முகத்தைக் கறுப்பாக்கி, கண்களை கண்ணீர் குளமாக்கி விடுகின்ற கோரத்தை நினைத்துப் பார்க்கிறபோது,...

அவனது இருதயம் நனைந்து கசிந்தது.

அப்படி யெல்லாம் வறுமைக் காலத்தில் வாழ்க்கையை சவாலாக்கிக் கொண்டு, தனது உதிரப் பெருக்கில் உதயமான

சோலைமுத்து நாடார் ஊரில் பெரும்புள்ளி. செழிப்பான விவசாயம். ஆனாலும் வட்டியே தொழிலாகக் கொண்டவர். அதுவும் 'லேசுமாசான வட்டில்ல.

சாதாரணமாக அவரைப்பற்றிக் கூறுவர்; ''அவன் கொடுக்கிறதுக்கென்னய்யா... 'நூத்துக்குப் பத்து' ஆசாமி யாச்சே!''

அப்பேற்பட்ட பகாசுர வட்டிப் பேர்வழி! அவரது கொடு மைகளையும் கஞ்சத்தனத்தையும், வஞ்சகத்தையும் எண்ணி எண்ணி ஏழைகள் குமுறுவார்கள்; புலம்புவார்கள். ஆனால் சோலைமுத்து நாடாரின் முகத்தைப் பார்த்தால் முகமெல்லாம் சிரிப்பாய் மலர்ந்துவிடும்; மனதுக்குள் நெருப்பு கொழுந்து விடும்.

ஏனெனில் 'இழவு, காடேத்து' போன்ற அவசர செலவுக்கு அவர் முன்புதான் போய் நிற்க வேண்டியதிருக்கும்.

ஆனால் ஒரு தடவை ராசாங்கம் கொடுக்கல் வாங்கலில்... இந்த கொடிய ''நூற்றுக்குப் பத்து'' வட்டியை சகித்துக் கொள்ள முடியாமல், முகத்துக்கு நேராகவே நெருப்பை காட்டி விட்டான். அதிலிருந்து இருவருக்குமிடையில் பேச்சு வார்த் தையே நின்று போயிற்று. பகை நிரத்தரமாயிற்று.

ஒரு பையன் அவிழ்ந்து தொங்கும் டவுசரை ஒரு கையால் பிடித்துக் கொண்டு நெருங்கினான்.

'' சின்னையா....நாட்டாமைத் தாத்தா கூப்பிடுருரு ''

ராசாங்கம் நிமிர்ந்தான். அவரைப் பந்தலின் அடியில் வெற்றிலைப் பெட்டி முன்பு உட்கார்ந்திருந்த நாட்டாண்மை கண்களாலேயே அழைத்தார். எழுந்தான்.

''என்ன சின்னையா...?''

'' உக்காரு...'' என்றவர் நிதானமாகக் கேட்டார்.

''சரி....தேருகட்டித்தானே தூக்கணும்?''

''........'' மௌனத்துடன் தலை கவிழ்ந்தான்.

''அதானே நம்ம ஜாதி வழமை! நிலைமை எப்படியிருந் தாலும் வழமைகளை மீற முடியாதே.''

நாட்டாண்மையின் முகத்தைப் பார்த்தான். ஏலாமையும், திகிலும் கண்களில் நிழலிருட்டாக கவிழ்ந்தது. இழவு, கல்யா ணங்களில் கடைப்பிடிக்கப்படும் சம்பிரதாயங்கள் சடங்குகள் யாவும் ஏழ்மைக் கெதிரான ஆயுதபாணியாக அணி வகுத்து நிற்பது போன்றதோர் நினைவு, அவன் நெஞ்சில் அலைபுரண் டது. மனதைக் கலக்கியது.

அதிர்ச்சியில் நிலை மறந்து, மலைத்துப்போன ராசாங்கத்தை உசுப்பினார், நாட்டாண்மை.

''என்ன ராசு... பணத்துக்கு வழியைப் பாரு....''

மனதுக்குள் சீதம் (குளிர்) பாய்ந்தது. புதிய அதிர்ச்சிக்கு உள்ளாகிப் போனவனைப் போல ஒரேயடியாக வெலவெலத்துப் போனான். நெஞ்சில் ஒருவித நடுக்கம். உதடுகள் உலர்ந்தன:

''எம்புட்டு செலவாகும் ?''

''எப்படியும் நூறு ரூபாயாச்சும் வேணும், மயானச் செல வுக்கு''

''ஐயய்யோ...'' அவனது மனத் திகில் வெளிப்பட்டது.

''ஏன் ஒரேயடியாக மலைச்சுப் போனே? சோலைமுத்து நாடார் கிட்டே போய் விஷயத்தைச் சொல்லிக்கேளு. இல் லேன்னு சொல்ல மாட்டாரு. அந்த மனுஷனுக்கு குறி, வட்டி தானே''

அலட்சியமாக வழிகாட்டினார் நாட்டாண்மை. தேள் கொட் டியதுபோல் இருந்தது ராசாங்கத்துக்கு.

'சோலைமுத்து நாடார் கிட்டேயா போய்க் கேக்குறது? சண்டைக்கார மனுஷனைச்சே. தரமாட்டாரே. பணத்துக்கு என்ன

''ஹே....கார் வருது....வருது கார்...''

குழந்தைகளின் கூச்சல்...கும்மாளம் வானத்தைப் பிய்த்தது. மைக்காரர் அசடு வழிய திகைப்புடன் தவித்தார்....கூச்சல் மைக்கில் எதிரொலிக்கிறது.

''அமைதி, அமைதி...நமது மதிப்பிற்கும் பாசத்துக்கும் உரிய அண்ணன் கோவை வந்து விட்டார்......அமைதி.... அமைதி''

'மைக்'கின் சப்தமான வேண்டுகோள்...குழந்தைகளின் குதூகலக் கூப்பாட்டில் மூழ்கி பயனற்றுப் போயிற்று.

கார் வந்து நின்றது. முன்னணி ஊழியர்கள் மொய்த்தனர். குழந்தைகள் குதூகலமாக ஓடிச்சென்று வண்டியைத் தொட்டுப் பார்த்தனர். சுற்றிச் சுற்றி வந்தனர்.

காரிலிருந்து இறங்கிய 'கோவை'யிடம் உடன் பிறப்புகளின் அன்புக் கெஞ்சல்கள்....

''அண்ணே... இன்னும் டோர் சிலிப் வரலேண்ணே...''

''தலைமைக்கழக போஸ்டர் இன்னும் ரெண்டு வேணும்''

''பூத் பணம் எப்ப வரும்?''

எல்லாவற்றுக்கும் மொத்தமாகச் சிரித்துவிட்டு மழுப்பலான பதில்களுடன், வணங்கியவர்களுக்கு வணக்கம் கூறிவிட்டு, பந்தாவாக மேடையேறினர்.

வெண்ணிற டெரிக்காட்டன் நீலமாக சிரித்தது. தோளில் தொங்கிய துண்டு முதுகைச் சுற்றி.... மறுகையில் சுருண்டு கிடக்க கம்பீரமாக அமர்ந்தார்.

அவருடன் வந்த வேட்பாளர் வெங்கடாசலம்.... வேட்டி, சட்டை துண்டு எல்லாம் கதராக இருந்தார். கறுப்பான உடம்பாக இருந்தாலும்...முகத்தில் பண்ணையார்த்தனம் இருந்தது.

போடுகிற கும்பிடுகள் இயல்பில்லாத பணிவாக-செயற்கை யாக இருந்தன.

அவரும் மேடையில் ஏறி, எல்லாருக்கும் பொதுவாக ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு அமர்ந்தார்.

''நமது கழகத்தின் முன்னணிப் பேச்சாளர். நமது, அன்பு உடன்பிறப்பு, அருமை அண்ணன்... கோ. வையாபுரி அவர்கள் உங்கள் முன் பேசுவார்...''

என்று முழங்கிவிட்டு மைக்கை விட்டார் ஒருவர். புகழ்ச் சியை சகித்துக்கொள்ளாத புன்சிரிப்புடன் காலை செல்லமாக ஆட்டிக்கொண்டிருந்த கோவை எழுந்தார். ஷர்ட்டை ஏனோ பிடித்து இழுத்து சரிப்படுத்தி...துண்டை ஒழுங்கு படுத்தி, செரு மலுடன் மைக்கைப் பிடித்தார்...

பேசி முடித்த அண்ணன்களை விளித்து, கூட்டணி 'ஐயா'க் களை மரியாதையுடன் அழைத்து, தேர்தலில் பம்பரமாக சுழன்ற உடன்பிறப்புகளை அழைத்து, நீளநீள அடுக்கு வார்த்தைகளில் 'அவர்களே' போட்டு பேச ஆரம்பிக்க... ஆரம்பமே நீண்ட நேரத்தை சாப்பிட்டது. கூட்டத்தையும் பிரமிக்க வைத்தது.

''நள்ளிரவுக்குக் பின் இன்னும் ஆறு கூட்டங்கள் இருப்ப தாலும், அங்கெல்லாம் மக்கள் காத்துக் கிடப்பதாலும். உங்கள் முன் நீண்ட நேரம் உரையாற்ற முடியாத இக்காட்டான நிலை காண, மனதுக்கு-நெஞ்சுக்கு-இதயத்துக்கு வருத்தமாக இருப் பதாலும் சுருக்கமாக ஒன்றிரண்டு கருத்துக்களை உங்கள் மத்தி யில் வைத்துவிட்டு போக இருப்பதாலும், 'எப்பொருள் யார் யார்வாய் கேட்பினும்' என்று வள்ளுவப் பெருந்தகை கூறிய தற்கொப்ப, கேட்கிற உரைகளில் உண்மை எது—பொய்யெது என்று பார்க்கும் தெளிவு படைத்த தமிழ் மக்களாக நீங்கள் இருப்பதாலும்...''

இப்படி நிறைய 'லும்'கள். முடியாமல் தொடரும் மூளியான வாக்கியங்கள்.

தாயிருக்கட்டும். நல்ல சமர்த்தான பையங்க...செவண்டி ஃபைவ் பரசெண்ட் நமக்குக் கிடைக்கும்...''

''அப்படியா!'' வேட்பாளர்'' குரலைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மகிழ்ச்சி கலந்த வியப்பா! பயம் கலந்த அவ நம்பிக்கையா! எது தொனிக்கிறது என்பது விளங்கவில்லை...

''இங்க 'இலை'க்காரங்க ரொம்ப இருக்கிறதாச் சொன் ஞங்களே''

''இருக்கத்தான் செய்ருங்க—'புடிடா'ன்ன புயலா ஓடிப் போயிடுவானுக, பொடிப் பயலுக...''

என்ற கோவை கடைசி வார்த்தையை அனுபவித்து சொல் வது போலிருந்து.

''அருவாக் கட்சிக்காரங்க தீவிரமா செயல்படுருங் களாமே?''

லட்சத்துக்குமேல் பணத்தை பணயம் வைக்கிற பதைப்பு, அவர் சந்தேகங்களில் ஒளிந்து கொண்டு தலை நீட்டியது.

கோவை அலட்சியமாகப் பேசினர்.

''ஊருக்கு நாலுபேரு...அவுங்களாலே என்ன செய்துட முடியும்?''

கோவையின் மனசுக்குள் வன்மம் கனன்றது. வெங்கடா சலத்தை இருட்டில் ரகசியமாக பார்த்தார். 'பாவி...படுபாவி...' என்று நெஞ்சம் கூச்சலிட்டது.

பாவித்தனம் நெஞ்சில் அலை அலையாக புரண்டது. நெருப் பலைகள்.

அதை அன்று அனுபவித்த நாட்கள் எத்தனை கொடூரமாக இருந்தது; மனம் எப்படி வதைபட்டு புலம்பக்கூட வழியின்றி

கண்ணீர் வடித்தது. இன்று அதுவே வெறும் நினைவுகளாகிப் போன பின்னர்...அந்த உஷ்ணம் இல்லைதான்! ஆயினும்—

அந்த நெருப்பு சிருஷ்டித்த காயத்தின் வடுக்கள் இன்னும் நெருடுகிறது; அந்த காயத்தின் வலி, இன்னும் நினைவில் இருக்கிறது...

கார் விரைகிறது. சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார் கோவை. சிகரெட்டின் புகை மார்புக்குள் பிரவேசித்து வெளி நடப்பு செய்கிறது. அத்தனை சுகமாக இல்லை.

மனசுக்குள் பழைய நினைவுகளின் வெம்மை குமைந்து கொண்டேயிருக்கிறது. அந்த குமைச்சல், சாமான்யமானதல்ல. பொது நியாயம் சம்பந்தப்பட்டதல்ல...சொந்த வாழ்வை—ரத்த பந்தங்களை சூறையாடிய கொடூரத்தினுல் உருவான குமைச்சல்.

வெங்கடாசலம் வெத்றிலையின் முதுகுத் தோலை உரிக்கிறுர். பாக்கை பல்லுக்குள் வதைக்கிறுர்; வாய் ரத்தம் கொப்பளித்தது. அவர் சுவைத்தார். சலித்துப் போன பிறகு—

புளிச்சென்று காருக்கு வெளியே துப்பி விடுகிறுர்.

வாய்த்துணை எதுவுமின்றி தனிமைப்பட்டு சலித்துப்போய் விட்ட டிரைவர் ஏதோ நினைவில் 'டேப்'பை தட்டிவிட்டார். உள்ளிருந்து டி. எம். எஸ். கேட்டார்...

''நீங்கள் அத்தனைபேரும் உத்தமர்தானு? சொல்லுங்கள்.

உங்கள் ஆசை நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.'

வெங்கடாசலத்தினுல் இப்பாடலை ஏனே சகித்துக் கொள்ள முடியவில்லை. சற்று உஷ்ணமாகவே கூறினுர்: ''நிறுத்தித் தொலையப்பா...இதுவேறெ இந்நேரம்... தொல்லை...''

நாலைந்து மாதங்களுக்கு முன்பு வந்த தேர்தலுக்கே இந்தக் கூட்டணி முடிச்சு விழுந்து விட்டது. கோவைக்கு அப்போது மனசுக்கு குமட்டியது. நினைக்கவே அருவருப்பாக இருந்தது.

அவர்களால் கொல்லப்பட்டு அனுப்பிய பிணங்களைப் பார்த்துப் புலம்பினோமே! காரண காரியம் எதுவுமின்றி சிறைச் சாலைகளில் நிரப்பி, அடித்துத் துவைத்து... சித்திரவதைகளுக்குப் பிறகு வெளிப்படுத்திய நடைப்பிண ''மிஸா''க்களைப் பார்த்து மனதுக்குள் ஆவேசப்பட்டு அனல் வார்த்தைகளை சிதற விட்டோமே!

இந்த அசுர குணத்தை முன்னுணர்ந்து, வெட்கக்கேடான கோழைத்தனத்தை, பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திவிட்டு ஓடிப் போனவர்களின் பட்டியலை பத்திபத்தியாக பார்த்து காறித் துப்பினோமே...

இப்படி ராட்சஸ விளையாட்டு அசுரர்களுடன் அரசியல் உறவா? ஊஹூம்...ச்சே!'

கோவை 'தலைமை'யை நோக்கி விழியுயர்த்தினான்.

''என்ன இது, வெட்கக் கேடான கூட்டு...?''

''இது வெறும் தேர்தல் கூட்டு மட்டுமல்ல, லட்சிய உறவு''

''நமது லட்சியங்கள்....தன்மானம் எங்கேபோய்த் தொலைந்தது?''

''இப்போது நமது லட்சியமே வெற்றி ஒன்றுதான். வேறொன்றும் இல்லை''

''வெற்றி ஒன்றுமட்டும்தான் லட்சியமா? இப்படியோர் லட்சியமா? லட்சியங்கள் இல்லாமல் வெற்றி நிச்சயமா?''

''இப்போது நமது லட்சியம் இதுதான்; நம்ம பங்காளி ஒழிந்தாக வேண்டும்''

''பங்காளியை ஒழிக்க, பகையாளியுடன் உடன்பாடா? இந்த விபீஷணத்தனம் எனக்கு உடன்பாடல்ல...''

தலைமையின் மழுப்பல்களுடன் உடன்பாடு கொள்ள முடியாமல் கோவை தவித்தான். 'லட்சிய உடன்பாடை' அவனால் சகித்துக்கொள்ள முடியவில்லை. சகித்துக்கொள்ளவே முடியாத போது... உடன்பாடுக்கு விசுவாசம் எங்கிருந்து வரும்?....

பாராளுமன்றத் தேர்தலில் தனிமைப்பட்டு வீட்டில் முடங்கிக் கொண்டான். தலைமையிலிருந்து தூதுமேல் தூதுக்களாக வந்து அவனை ரொம்ப ஊசலாட வைத்தது; மன நிம்மதியற்று தவித்தான். நிறைய 'தண்ணி' சாப்பிட்டான். போதை வந்தவுடன் நிம்மதியின்மை தலைநீட்டி நெஞ்சை வதைத்தது.

கோவை...பெரிய வசதிக்காரனல்ல...ஆட்சிக்காலத்தில் ஒரு வட்டாரத்தில் தலைவனாக...நல்ல மேடைப் பிரசங்கியான இவன் நகரத்தில் ஒரு வீட்டையும், கொஞ்சம் பணத்தையும்... ஒரு பிரிண்டிங் பிரஸையும்தான் சம்பாதித்துக் கொண்டான்.

வட்டாரத் தலைவன்தானே! கட்சியின் பெரிய தூணல்ல. இருப்பினும், அவனது...மேடைப்பிரசங்கத் திறமை அவனுக்கொரு சிறப்பான ஆயுதம். நிறைய ரசிகர்களை சம்பாதித்துக் கொடுத்திருந்தது. கோ. வையாபுரியை உடன் பிறப்புக்கள் 'கோவை' என்று சுருக்கி, அன்புப்பெருக்கை வெளிப்படுத்தினார்கள்.

தேர்தல் வெற்றி, இவனது ஊசலாட்டத்தை ரொம்பப் படுத்தியது. லட்சியங்களின் விலையாக கிடைத்த போதிலும், அந்த வெற்றி இவனுக்கு உற்சாகத்தையே கொடுத்தது, அதைவிட பங்காளியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. ரொம்பச் சந்தோஷமளித்தது...சட்டமன்றத் தேர்தலின் தேதிகள் அறிவிக்கப் பட்டது.

அப்போதுதான் வெங்கடாசலத்தின் கார் பிரஸ் முன் வந்து நின்றது. ஒரு கதர்ப் பிரமுகர் வந்தார்.

''ஐயா வாங்க...வாங்க...டேய் மாரி...சுடையிலே போய் கோல்டுஸ்பாட் வாங்கிட்டுவா''

கோவை வரவேற்ருன்.

பிரமுகர் நல்லதனமாக சிரித்தார்....

''கோல்டுஸ்பாட்டெல்லாம் வேண்டாம் கோவை''

' வேறென்ன வேணும் ஐயா?''

''கோவைதான் வேணும்''

திகைத்து நின்ருன், புரியாமல் தவித்தான். கதர்ப் பிர முகர் சிரிப்பு மாருமல் கூறினர்:- நம்ம பண்ணையார் வெங்கடா சலம் முதலாளி அவுகதான் இந்தத் தொகுதியிலே 'நிக்கிருக'! நீங்கதான் ஜெயிக்க வைச்சுக் காட்டணும்...''

கோவையின் மனதில் நெருப்பலைகள் ஓசையுடன் புரண்டு மோதித் தகித்தன. ஏதேதோ பழைய காட்சிகள்...பழைய நினைவுகள்...பழைய ரத்தக் காயங்கள்...அதன் வடுக்கள்... மரத்துப்போன இருதயம்.

சிரிக்க முயன்ருன்; உதடுகள் உலர்ந்து போய் ஒத்துழைக்க மறுத்தன.

''நானென்ன ஐயா, சின்ன மனுஷன்...என்னலே என்ன 'ஆகி'க் கிடக்குது''

''அப்படிச் சொல்லக் கூடாது. பத்து விரல்களும் ஒத்துப் பிடிச்சால் தான் எந்தப் பொருளையும் பத்த முடியும்...விரல் களிலும் நீங்க கட்டை விரலாச்சே....''

''கட்டை விரலைத்தான் நறுக்கியாச்சே...'' பழைய அனு பவங்களின் சிறுதுளி ரத்தமாக வார்த்தையில் கசிந்தது.

''நீங்க அப்படியெல்லாம் பேசப்படாது. நம்ம தலைவர் களே பழசையெல்லாம் மறந்துட்டு, மேல் மட்டத்திலே முடிவு செய்ஞ்சு, வெற்றியும் அடைஞ்சாச்சே. நாம மட்டும் அதையே நினைக்கலாமா,..? நாங்க எதுக்கு அலையுருேம்...? உங்க தலை

வரை முதல்வராக்கத் தானே! நீங்க மட்டும் விலகி நிக்கலாமா? இதையெல்லாம் யோசிச்சுத்தான் நம்ம முதலாளி ஐயா அவுக எங்கிட்டே காரைக் குடுத்து... 'கோவையை கையோட அழைச்சிட்டுவா...மத்ததை நா பேசிக்கிறேன்'னுட்டாரு.''

''அதெல்லாம் சரிதான்...இங்க பாருங்க, பிரஸ் கிடக்கிற அலங்கோலத்தை. நா இல்லேன்னு இதைக்கவனிக்க ஆளில்லே. எலெக்ஷன் வொர்க்னு இறங்கிட்டா ...இருபது முப்பது நாளைக்கு இங்க எட்டிப் பாக்க முடியாது. தொழில் என்னாகும்? பொழைக்க வழி என்ன இருக்கு, இந்தத் தொழிலே விட்டா? ''

''அதான் நான் சொல்றேனே அதையெல்லாம் முதலாளி ஐயா அவுககிட்டே பேசிக்கிடலாம்'னு. இதுக்கெல்லாம் ஒரு வழி பார்க்காமல், முதலாளி ஐயா அவுகவிட்டுவிடுவாரா?',

'கைப்பிடியாக' கோவையை அழைத்துக் கொண்டு, காரில் போட்டு 'முதலாளி ஐயாஅவுக' முன் நிறுத்தினார், கதர் பிரமுகர்.

அந்தப் பெரிய 'ரெண்டு மெத்தை காரை வீட்டிற்குள்' பேசி முடிக்கப்பட்டது. தேர்தல் கால தொழில் பாதிப்புக்கு ஈடாக, மொத்தமாக ஒரு கணிசமான தொகை கை மாறியது.

தேர்தல் பணிகளில் பெரும் பகுதியும்... அதற்கான செலவுப் பணமும் தாராளமாக அவன் வசமே ஒப்படைக்கப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட சர்க்கரைப் பானையில் கைவிட்ட அவன், தேவைக்கு நக்கிக் கொள்ள முடியும். .அதற்கொன்றும் தடைகள் இல்லை. அவனும் காற்றடிக்கும் சமயத்தில் தூற்றிக் கொள்ளாமல் இருந்துவிடவில்லை.

இதெல்லாம் அவன் இதயக்காயத்தின் வலிகளை மாற்றுவதாக இல்லை. மாறாக காயத்தைக் கிளறி விட்டது. சீழும் ரத்தமும் வடியச் செய்தது.

வேட்பாளரைப் புகழ்ந்து பேசும் போதெல்லாம் மனதுக்குள் இன்னொரு கோவை, கோவையை ''துரோகி, துரோகி''

என்று திட்டியது. ''மானங்கெட்டவனே'' என்று உள்கோவை கூச்சலிட்டான்...

இந்தக் கூச்சல், படுக்கைக்குப் போகும்-சமயத்தில் வீட்டின் வெறுமையில் பெரிதாக எதிரொலித்து வதைக்கிறது. தூக்கமும் ஒரு கனவாக-ஒரு பொய்யாகப் போய் விடுகிறது. மனக் கோவையின் கூப்பாடு, நிம்மதியை சாப்பிட்டு ஏப்பமிட்டு விடுகிறது

அந்தச் சமயங்களிலெல்லாம் 'தண்ணி' தான் அடைக்கலம். 'அதற்கும் வெங்கடாசலம் ஏற்பாடு செய்துவிடுவார்.

கார் விரைகிறது .... அதோ கிராமம் .... இந்தக்கூட்டம் முடிந்துவிட்டால் ... இன்னும் ஐந்து கூட்டங்கள் ... அதுவும் முடிந்துவிட்டால்... தண்ணி....படுக்கை...தூக்கம்...தூக்கத்திலும் மகனின் இறுதிக் கூவல் கேட்கும்....தமிழ்ச்செல்வி மரணப் புலம்பல் ஒலிக்கும்...முகமெல்லாம் ரத்தகாயங்களினால் குரூரமாகிப் போன மனைவி தெரிவாள்.

கோவை பெருமூச்சு விட்டான். மனத்துயரை தழுவி வந்த பெருமூச்சு உஷ்ணமான ஓசையாக இருந்தது.

''என்ன கோவை...?''

''ஒன்னுமில்லே ஐயா...நாளை செய்ய வேண்டிய வேலைகளைப் பத்தியோசிச்சேன்...''

''என்ன செய்யணும்?''

''நாளையிலேயிருந்து பகல்லே ஒவ்வொரு கிராமத்தின் நாட்டாண்மைகளை தனிச்சு நாமெ சந்திச்சுப் பேசணும்.... நைட்லே பப்ளிக் மீட்டிங்ஸை பார்க்கலாம்...''

''சரி...எப்படியோ கோவை...ஜெயிச்சாகணும். ரெண்டு லட்சத்துக்கு மேலே போட்டாச்சு...பயமாயிருக்கு...''

''ஜெயிச்சுடலாம் ... அதுலே ஒன்னும் சந்தேகமில்லை. சென்ற தேர்தல்லே இந்த சட்டமன்றத் தொகுதியிலே, நம்ம

கூட்டணிக்கு எண்ணுயிரத்துச் சொச்சம் ஓட்டு அதிகமா கெடைச்சிருக்கு...அதுலேயெல்லாம் சந்தேகமில்லே...இதுலே இன்ெஞரு விஷயம் என்னன்ன...?'' கோவையின் நீடடல், அவரைப் பதைக்க வைத்து.

''என்ன?''

''விலேவாசிப் பிரச்னே...தங்கம். டீசல்...சீனிப் பற்ருக்குறை யெல்லாம் நமக்கு இடைஞ்சலா யிருக்கு...விவசாயிகள் கூட இப்ப நமக்கு எதிராகத்தான் இருக்காங்க''

''அதுவும் நிஜந்தான். இந்த எலெக்ஷன் எனக்கு கெளரவப் பிரச்னேயாயிடுச்சு. இந்த ஏரியாவுலேயே பெரிய பண்ணேயார்னு பேர் வாங்கிட்டு.. தோத்துப் போனேன்னு... இந்தக் கேவலம், ஏழு ஜென்மத்துக்கு!''

நீண்ட பெருமூச்சு அவரிடமிருந்து வெளிப்பட்டது. கார் விரைகிறது. இதே மாதிரியான உரையாடல்களே திரும்பத் திரும்பக் கேட்டு சலித்துப் போன டிரைவர் ஓசையில்லாமல் திட்டினன் :

''அட முட்டாள்களே, உங்கள் பாவ மூட்டைகளே எந்த ஜென்மத்துலே இறக்கப் போறீக...''

அடுத்த கூட்டம்...

''நமது வேட்பாளர் வெங்கடாசலம் ஐயா அவர்களே உங்களுக்கு நன்ருகத் தெரியும்...தூங்கும்போதுகூட தொகுதி நன்மையையே நெஞ்சில் கொண்டு தொண்டுகள் செய்பவர்...இவர் மலேயாளியல்ல..நம்மவர்...நம் தமிழினத்தின் துயர்களே-சோகங்களே அறிந்தவர்... ஈ, எறும்புக்குக்கூட துன்பம் விளேவிக்க சகிக்க மாட்டார்...ஏழைகளின் மீது இரக்கமும், அன்பும், வற்ருத பாசமும் கொண்டவர். அவருக்குஉங்களது பொன்னன வாக்குகளே அளித்து......''

வாங்கி முடித்து காரில் ஏறினர். இன்னும் இரண்டு கூட்டம். தொண்டை வலித்தது. உடம்பெல்லாம் சோர்வு. ஓய்வுக்காக ஏங்கும் எலும்புகள்.

கோவை சிகரெட்டை பற்ற வைத்தார். சிகரெட்டின் புகை சற்று இதமாகத் தெரிந்தது.

சில நிமிஷங்களுக்கு முன் ஒளி வெள்ளத்தில் பேசிய பேச்சுக் கள், முழுச்சக்தியுடன் இப்போது முகத்தில் மோதுகிறது.

''நல்லவர்...நம்மவர்...ஈ, எறும்புக்குக்கூட துன்பம் விளை விக்க சகிக்க மாட்டார்....ஏழைகளின் மீது இரக்கமும்...''

கோவைக்கு மனம் எரிகிறதா, கசக்கிறதா? இனம் பிரிக்க முடியவில்லை.

ஊரறிய - உலகறிய - விளக்குகளின் வெளிச்சத்தில் ஒலி பெருக்கியில் பொய்களை முழக்கியிருக்கிறேன்...மனசறிந்த பொய்கள்...ஊரறிந்த பொய்கள்...

உறுத்தல்... உறுத்தல் ... உறுத்தல்கள் ... நெஞ்சுவலி யெடுத்தது.

மூன்று வருஷத்துக்கு முன்னால்—

தேசம் பூராவும் இருண்ட நிலை. பகலிலும் இரவிலும் இருட்டு. இருட்டுக்குள் சர்வாதிகாரத்தின் ராட்சஸக் கரங் களின் அசுரப் பாய்ச்சல்கள், ஜனநாயகத்தின் கழுத்து இறு கியது.மூச்சுத் திணறியது.

இங்கேயும் ஆட்சி கலைக்கப்படும் என்கிற ஹேஷ்யங்கள் சிறகு கட்டிப் பறந்தன; பீதியை விதைத்தன 'இன்றோ நாளை யோ' என்கிற திகில் ஒவ்வொருவருக்கும்! தனக்கு சொந்த முறையில் பாதிப்பு வராது என்று நினைத்திருந்தான் கோவை. இவன் கட்சியின் பெருந்தூண்களில் ஒன்றல்லவே! சாதாரண வட்டாரத் தலைவன் தானே!

நள்ளிரவு நேரம். புதிதாக கட்டிய அந்த வீட்டிற்குள் ஃபேன் சுழற்சியின் ரீங்காரத்தில் மயங்கி உறங்கிக் கொண் டிருந்த கோவை, ஏதோ 'தடதட,' 'திடு திடும்' சப்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்தான்.

பொறுமையில்லாத கைகளின் மோதலில் கதவு ஓல மிட்டது. பல பூட்ஸ்களின் சப்தமும் கேட்டது.

கதவைத் திறந்தால்...

''நீ தானே... கோ. வையாபுரி ?''

''ஆமாம்...'' சொல்லி முடிக்கவில்லே. முகத்தில் ஒரு குத்து. பொறி கலங்கியது !

கட்டுப்பாடில்லாமல் வீட்டுக்குள் நுழைந்த காக்கிப்படை, பாயில் படுத்துத் தூங்கிய மணிமாறனே - இருட்டில் தெரியா மலோ — தெரிந்தோ - ஒரு காக்கிச் சட்டையின் கனத்த பூட்ஸ் கால்கள் மிதிக்க...

'ஓவென்ற' அலற முடியாத திணறலுடன் அலறி...ஓய்ந் தான். பூட்ஸ்கால் தொண்டையிலேயே மிதித்து விட்டதோ !

திடுக்கிட்டு விழித்து...இன்னது நடக்கிறது என்பது விளங் காமல் திகைத்து நின்ற மனேவி மாரியம்மா...அலறிச் செத்த மகனேப் பார்த்து குலேபதற அலறிஞள்...

''அடப்பாவிகளா...எம் புள்ளேயை மிதிச்சுக் கொன்னுட்ட களே...''

அவள் முகத்தில் ஒரு குண்டாந்தடி ரத்தப்பசியுடன் மோது கிறது. அந்தக் குண்டாந்தடி மீண்டும், மீண்டும்...அவள் முகத்தில் நாத்தனமாடுகிறது.

மற்ருெரு காக்கிச்சட்டை, தாவணி கட்டிய தமிழ்ச் செல்வி யின் கூந்தலேப் பற்றி, வெட்டி வெட்டியிழுக்கிருன். அவனது பூட்ஸ்கால்...வயிற்றுக்குக் கீழே மிதிக்கிறது ... கேட்போர் நெஞ்சை பீதிய டயச் செய்யும் அவளது அலறல்... சன்னஞ் சன்னமாக மரணத்தில் புதைந்தது.

கோவைக்கும் மாறி மாறி அடிகள்;அசிங்கமான வசவுகள்... கையில் விலங்குடன் வீட்டுக்கு வெளியே இழுக்கிருர்கள். வாசலுக்குத் தள்ளி வீதியின் ஓரத்தில் ஒரு கார்.

காருக்குள் பண்ணையார் வெங்கடாசலம், அவருடன் பெரிய அதிகாரி சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்.

சமீபகால அரசியலில் பண்ணையாருக்கு இவன் ஆகாதவன், ஆரம்ப காலத்திலிருந்தே... கோவை ஒரு அரசியல் வாதியாக பரிணமிக்க ஆரம்பித்த காலத்திலிருந்தே...வெங்கடாசலம் பகை யாகிப் போனார்... 'ஏதுமத்த வெறும் பயல், எனக்குச் சமமா புகழ் பெறுவதா' என்கிற குமைச்சல். .

இதோ அவர் வன்மத்தை தீர்த்துக் கொண்டார்—

''பாவி.., காத்து எப்பவும் இப்படியே வீசாது...''

கோவை மனம் குமுறினான் ... அவனைச் சுமந்து கொண்டு வேன் பறந்தது, இருட்டுக்குள்.

...ல்லவர்...ஈ எறும்புக்குக்கூட துன்பம் விளைவிக்க சகிக்க மாட்டார். ஏழைகளின் மீ..."

இவனது பிரசங்கமே இவனது நெஞ்சில் சாடி மோதியது.

கூட்டங்கள் முடிந்தன.

கார் இவனை இவனது வீட்டில் இறக்கிவிட்டது. வீட்டை சுடுகாடாக்கிவிட்டு தன்னை விலங்கிட்டு இழுத்துச் செல்லும் சமயத்தில், இதே கார் தான் வீதியோரத்தில் நின்றது. நினைக் கும் போது கோவையின் மனம் கனத்தது ; கசந்தது.

வீட்டைத் திறந்து கொண்டு நுழைந்ததும், வீட்டின் வெறுமை முகத்தில் மோதியது. யாருமேயில்லை....தனிமை... தனிமை...தனிமை...

மணிமறவனின் மரணக் கூவல்...தமிழ்ச் செல்வியின் நெஞ்சு பிளக்கும் கூச்சல்.... குலைபதற அலறிய மனைவியின் அலங்கோல முகம்... வீதியோரத்தில் சிரித்துக் கொண்டிருந்த தனவான் வெங்கடாசலம்...

நெஞ்சில் ரத்தம் கசிந்தது...

தூரத்தில் ஏதோ பொதுக் கூட்டம் போலும். இந்த நேரத்திலுமா! பின்னிரவு அமைதியில் பொதுக்கூட்ட சப்தம் துல்லியமாக மெல்லிதாகக் கேட்கிறது

''...தாலி கட்டிய மனைவியின் ஆத்மா, அலருதா? அடப் பாவியே...என்னையும் நமது அருமைப் பிள்ளைகளையும் வதைத்துக் கொன்று, உன்னையும் சிறையில் அடைத்து வேடிக்கை பார்த்த வெங்கடாசலத்துக்கா, ஓட்டுக் கேட்டு அலைகிருய் ?

பணத்துக்காக மானத்தையா அடகு வைப்பது? உனக்கு பாச உணர்வே கிடையாதா? குடும்பத்தை சுடுகாடாக்கி சந்தோஷப்பட்ட அந்தப் பாவிக்கு ஓட்டுக்கேட்டா, ஊர் ஊராக அலைகிருய்?'' என்று அந்தத் தாயின் ஆத்மா அலருதா?..,

'நண்பர்களே...கோவை நல்லவர்' எனக்குப் பழைய சிநேகிதர். அந்த அன்புச் சகோதரருக்கு ஏற்பட்ட அவலம், உங்களுக்கும் ஏற்படாமல் இருக்க வேண்டாமா? அப்படியானுல் வெங்கடாசலத்தை தோற்கடியுங்கள் ... ஆகவே பெரியோர்களே, தாய்மார்களே...'

இந்தத் துல்லியமான குரல்..,எதிர்க்கட்சி மேடைக் குரலா...? இவனது மனசாட்சியின் குரல் போலல்லவா இருக்கிறது !

பீரோவைத் திறந்தான். பாட்டிலை எடுத்தான். தண்ணி தான் மனத்தீயை சற்று அணைக்கும், வேறு பாதையில்லை. மன அவஸ்தையிலிருந்து தற்காலிக விடுதலையாவது வேண்டும்..,

பாட்டிலைத் திறந்தான்...

சில நாட்கள் நகன்றன.

தேர்தல் முடிந்து விட்டது. இதோ, முடிவுகள் வானெலியில் வருகின்றன.கோவைக்கு ரொம்பச் சோர்வாக இருக்கிறது. மாநிலம் பூராவும் தனது கட்சியின் தோல்விச் செய்திகள்...

இன்னும் இந்தத் தொகுதி முடிவு தெரியவில்லை... ஆனுல் மாநிலம் பூராவும் சரிவு. முதல்வர் பதவி ஒரு கனவாகப்

போவது மட்டுமல்ல...கேவலமான வீழ்ச்சிகள்! நம்பிக்கைகள் மொத்தமும் நொறுங்கிச் சிதறி விட்டன.

கோவைக்கு மனம் ரொம்ப வேதனைப்பட்டது. எரிச்சல் பட்டது...யார் யார் மீதோ கோபப்பட்டது. மனம், வெறி பிடித்த குருட்டு நாயாக அலைபாய்ந்தது... 'துரோகிகள்... கூட்டணித் துரோகிகள்...''

நிம்மதிக்காக பாட்டிலைத் திறந்தான்....நிதானமாக.

அதற்குள் - இதோ—

இந்தத் தொகுதி அறிவிக்கப்படுகிறது. கோவையின் மனம் திக்திக்கென்று அடித்துக் கொள்கிறது. இறுதிக்கணம்- மனைவி – மகள்-மணிமறவன்!

தவிப்பு....தவிப்பு....தவிப்புகள்....

நாலாயிரத்து சொச்சம் வாக்கு வித்தியாசத்தில் வெங்கடா சலம் தோற்றார்....!

பாட்டிலை தூர எறிந்தான். குபுக்கென்று காற்று நெஞ்சுக் குள் பிரவேசித்து, இனிய ராகம் மீட்டியது. நரம்புகளில் ஏதோ ஒரு புத்துணர்ச்சி ஓடிப்பாய்கிறது...அப்பாடா...!

தண்ணியில்லாமலேயே இன்று அவன் சந்தோஷமாகத் தூங்குவான்.

# பிஞ்சுகளும் போரிடும்

வழக்கம் போல அந்த நேரத்தில் பரிமளம் பாட்டிவிழித்துக்கொண்டாள். பக்கத்தில் ராஜிபடுத்திருந்தாள். வீடு பூராவும் ஈரமாகி, சுவரெல்லாம்—தரையெல்லாம் குளிர்ந்து, கிடந்ததால், கிழிந்த சாக்குகள் இரண்டை கீழே போட்டு அதன்மேல், கால்களையும் கைகளையும் உள்ளுக்குள் மடக்கிக் கொண்டு, சுருண்டு ஒடுங்கி படுத்திருந்தாள்.

வாயில் கோழை வடிய குழந்தை போல அமைதியாக உறங்கும் இவள்தான்-இந்தச் சிறுமிதான்-தன்னைக் காப்பாற்றுகிருள் என்பதை நினைத்து, ஒரு சோகப் பெரு மூச்சுடன் எழுந்து நெட்டி முறித்துக் கொண்டாள் பாட்டி.

ரொம்பத் தொலை தூரத்தில் ஊதப்படும் ஏதோ ஒரு ஆலையின் சங்கு சப்தம் கேட்டது. மூன்று மணிச் சங்கு. கதவை இழுத்தாள்.

வாடைக் காற்று ஒரு ஆளைப் போல வந்து மோதியது. உடலெல்லாம் குளிரால் ரோமாஞ்சலி செய்தது. இருள் கும்மென்றிருந்து மிரட்டுகிறது.

இன்னும் தூறல் விழுகிறது. இரவெல்லாம் மழை பாட்டம் பாட்டமாக வந்து பெய்தும்....அதன் ஆங்காரம் தீராமல் இன்னும் தூறுகிறது. இன்று மட்டுமா, மழை? இந்த இருபது நாட்களாக விடாமல் பெய்கிறது. ஆறுகளில் வெள்ளம், ஓடைகளில் எல்லாம் முழங்கிக் கொண்டு நீர்ப்பெருக்கு.

''இந்த இழவெடுத்த மழை, எதுக்குத்தான் இப்படிப் பெய்ஞ்சு தொலையுதோ....எதை எதை பலி கொண்டு நிக்கப் போகுதோ....'' என்று பரிமளம் பாட்டி உள்ளார்ந்த பீதியுடன் முணு முணுத்தாள்.

அவள் 'வயசில்' பார்த்த மழையின் அனுபவங்கள் நினைவுக்கு வந்தது. இடிந்த குடிசைகள்....இறந்த மனிதர்கள்... மனித உழைப்பால் செழிப்படைந்த எத்தனையோ நிலங்கள் வெள்ளத்தால் புரட்டியடிக்கப்பட்டு, வெறும் மணல் காடாக மாறிப்போன கொடுமைகள்....

அட, மனுஷன் வம்பாடு பட்டு பூமியிலே எத்தனையோ ஆக்கிவைச்சாலும் வெள்ளமோ நெருப்போ, வறட்சியோ வந்து அத்தனையையும் மொத்தமாய் சீர்குலைத்து சின்னபின்னப் படுத்தி சர்வ நாசப்படுத்தி விட்டுப்போய் விடுகிறதே....ஆனாலும் மனுஷன் ஓய்றதில்லை. சலிக்கிறதில்லை. மறுபடியும் அத்தனையையும் உருவாக்குகிறான். அதைவிட அழகா—உயர்வா!

பரிமளம் பாட்டி நினைவுகளை உலுப்பி உதறிவிட்டு, நரைத்துப் போன குட்டை ரோமங்களை, அடித்து உதறி முடிந்து கொண்டு அடுப்பை மூட்டினாள். பாத்திரங்களை விளக்கினாள். பேத்திக்குத் தேவையான சாதத்தை அலுமினிய தூக்குச் சட்டியில் வைத்து மூடினாள்.

...இன்னும் கொஞ்ச நேரத்தில் பஸ் வந்து விடும். வந்தவுடன் ஹாரன் அடிப்பான். இப்பப்போற பேத்தி....பெறகு சாயங்காலம் அஞ்சு மணிக்குத்தான் வந்து சேரும்; பாவம் சின்னப்புள்ளை; மகள் வவுத்துப் புள்ளை; வர்ர மார்கழி வந்தா.... பதினொரு வயசாகப் போகுது; சின்னஞ் சிறுசு; பூமொட்டுப் போல. ஆனா....இந்த வயசுலேயும் இந்தப் புள்ளை உழைக்க வேண்டியிருக்கு. அதுவும்... கோழி கூப்பிடப்போய்....கோழியடையிற நேரத்துக்கு திரும்பி வரணும். அவ்வளவு பொழுதும் உழைக்க வேண்டியிருக்கு.

நினைவுகள் நெஞ்சுக்குள் பின்னலாடிக் கொண்டிருந்தன.

நேரமாயிடுச்சு என்ற நினைப்புடன் பேத்தியை உசுப்பினாள்.

''எம்மா....கண்ணு....ஏய் கண்ணு....''

ராஜி மெல்ல நெளிந்தாள். சிணுங்கினாள்.

''என்ன ஆச்சி....போ அங்கிட்டு'' என்று சிணுங்கி-சீறி விட்டு மறுபடியும் ஒடுங்கிக் கொண்டாள்.

''கண்ணு....நேரமாயிடுச்சும்மா....எந்திகண்ணு...பஸ் வர்ர துக்குள்ளே பல்லை விளக்கி சாப்டுக்கோம்மா . . . எந்திம்மா கண்ணு''

பரிமளம் பாட்டிக்கு, 'இவள் என்றும்' கண்ணுதான். குழந் தையாக இருந்த நாளில் கொஞ்சிய கொஞ்சல் வார்த்தைகளே, இன்றும் அவளுக்கு பெயர் ஆகிவிட்டது. ராஜி என்ற வார்த்தை, பரிமளம் பாட்டியின் உதடுகளை தாண்டியதே கிடையாது.

'கண்ணு' நீண்ட மறுப்புகள் சிணுங்கல்களுக்குப் பிறகு கண் விழித்தாள்.

''என்ன ஆச்சி நேரமாயிடுச்சா?'' அலங்க மலங்க விழித் துக் கொண்டு கேட்டாள்.

''ஆமாண்டிக் கண்ணு''

''ரொம்ப கூதலடிக்குது ஆச்சி...''

'என்ன செய்றது? ஆண்டவன் நம்பள அப்படி வைச்சிட் டானே. கூதல்லேயும், மழைக் கொடுமையிலேயும் சின்னஞ் சிறு குருத்து நீ போய் உழைச்சு...நாமெ பொழைக்கணும்னு எழுத்தாணி பிடிச்சு எழுதிட்டானே...''

''சரி ஆச்சி...சாம்பலெடு...''

பல்லை விளக்கி முகம் கழுவினாள். தலைக்கு எண்ணெய் வைத்து சீவி, சடை போட்டுக் கொண்டாள். எண்ணெய் மின்

னும் முகத்தை பாவாடையால் அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.

வேறு பாவாடையும், சட்டையும் போட்டுக் கொண்டாள். ஒரு மஞ்சள் நிறத்துணியை தாவணியாக போட்டுக் கொண் டாள், தாவணி தேவையில்லைதான். அதற்கான வயசோ-உடலோ இன்னும் வரவில்லைதான்-ஆயினும், அவளைவிட சிறிய வயதுப் பிள்ளைகளெல்லாம் தாவணி போடுவதால், இவளும் போட வேண்டியிருக்கிறது.

இவள் தாவணி சுற்றி அழகு பார்ப்பதைப் பார்க்கும் போதெல்லாம், பாட்டி பொக்கை வாயில் பூ பூத்தது போல குறு நகை வெடிக்கும்.

''தாவணியும் இவளும்! மரப்பொம்மைக்கு துணி சுத்தி வைச்சது மாதிரி'' என்று மனதுக்குள் நினைத்துக் கொள்வாள். என்னென்வோ பழைய நினைவுகள்...

''சோறு வை ஆச்சி''

''வைச்சிருக்கேன் கண்ணு...சாப்பிடு''

வட்டில் முன் ராஜி அமர்ந்தாள். அவள் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்த பாட்டி, தனது மகளை நினைத்துக் கொண்டாள்.

அவளும் இப்படித்தான். ஆம்பளை மாதிரி சம்மணம் கூட்டி உட்கார்ந்துதான் சாப்பிடுவாள். ''அடியே எல்லா பொம்பளைக மாதிரி உக்காந்து சாப்பிடுடி'' என்று எத்தனை தடவை கண்டித்துச் சொன்னாலும்...

ஊஹூம்...எப்பவும் இப்படித்தான். ஒரு காலை மடக்கி உள்ளுக்குள் வைத்து ஒரு காலை குத்துக்காலாக நிற்க வைத்து சாப்பிடச் சொன்னால்...''கால்வலிக்கும்'' என்பாள். 'சாப்பிட் டாப்புலேயேயில்லே' என்பாள்.

அவளைப்போலவே இவளும்..,! இவளை இருந்து பாக்க குடுத்து வைக்காமெ நீ போய்ட்டியே...எம் மகளே.

நான் இன்னும் கிடக்கிறேன். அவள் வாழ்ந்து, 'எல்லா வற்றையும் அனுபவித்து முடிச்சவள்' போல போய் விட்டாள்.

புருஷன் செத்த பிறகும்—காட்டு வேலையா செய்து... அவளை எப்படியெல்லாம் வளர்த்தேன். அருமையா பெருமையா வளர்த்தேன். 'ஊர்மெய்க்க' ஒருத்தன் கையிலே பிடிச்சு குடுத்துடணும்னு எவ்வளவு ஆசைப்பட்டேன். என்ன அரும்பாடுபட்டு அரைக் காசும் முழுக்காசுமா சித்தெறும்பு சேர்த்தாப்புலே சேர்த்து வைச்சேன்...

அவளுக்கு கொடுத்து வைக்கல. எவனோ ஒருத்தனோடே ஒரு நா திடுதிப்புனு ஓடிப்போயிட்டாள். என்னதான் 'அவன்' மேலே ஆசை யிருந்தாலும், பெத்து வளர்த்த ஒரு கிழவியை, தவிக்க விட்டுட்டுப் போக, அவளுக்கு எப்படித் தான் மனசு வந்துச்சோ.

போனது போனாளே...இருந்து வாழக்கூடாதா? என்ன தான் எளிய சாதியாயிருக்கட்டுமே...அவனும் ஆம்பளைதானே. ஆசைப்படுறதுக்கு முந்தியிலே-அதைப்பத்தியெல்லாம், தெரிஞ்சிருக்கணும்.

அவனோடே பழகும்போது, ஒரு ஆம்பளையா மட்டும் தோணிருக்கு; ஜாதி தோணலே, ஆசைப்பட்டா. ஓடிப்போயிட்டா. ரெண்டு வருஷம் கழிச்சு அவன், கிராமத்திலேயிருக்கிற அம்மா வீட்டுக்குப் போனப்போ...

அங்கேதான் காலமெல்லாம் இருக்கணும்னு சொன்னப்போ...அந்த அரிஜனச்சேரி... சுற்றிலும் பன்றிகளின் உறுமல்கள். அவர்களின் அடிமைத்தனம்... நாலாந்தர மனிதர்களாக நடத்தப்படும் நிலைமை.

அந்த மாதிரியான குடும்பத்தில் ஒரு மருமகளாக இவளால் வாழ முடியவில்லை. மனசெல்லாம் அருவருப்பு. சண்டை ..கசகசப்பு.. அடி...அழுகை...

மூன்றும் மாசமே ஓடி வந்து மடியில் விழுந்து அழுதாள். அப்போது அவளுக்கு வயிற்றில் மூன்று மாதம். சமாதானப் படுத்தி அழைத்துப்போக வந்த கணவனை ... சாதியைச் சொல்லி வைத்து அனுப்பிவிட்டாள்.

போனவன்.. போன ஏழாம் மாதம், ஒரு விபத்தில் போயே போய்விட்டான்.

இவளும் குழந்தையை பெற்றுப் போட்டுவிட்டு-அத்தோடு தன் கடமை முடிந்த மாதிரி பொசுக்கென்று போய்விட்டாள்.

நாதியத்த கிழவியாக கிடந்த என் கையிலே, என் பேத்தி ஒரு பூவைப்போல...எனக்கொரு கடமையாக - எனக்கொரு பற்றுக்கோலா...

''ஆச்சி...என்ன தூங்குதியா?''

'ஆ. .ஆங்' திடும் மென்று நினைவுகளிலிருந்து அறுபட்டு வெளிப்பட்டாள். ''இல்லேம்மா கண்ணு'' என்ற பாட்டி காய்ந்த உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள். சுருக்கங் களுக்குள் இடுங்கிக் கிடந்த விழிகளில் நீர்க் கசிவு; மனசின் சோகங்களை பெருமூச்சாக்கி வெளியிட்டாள்.

வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். மேலே இருண்டு கிடந்தது. மேகங்கள் பூதங்களாக அடர்ந்து நின்று ஒரு 'வெள்ளி'யைகூட கண்ணில் காட்ட மறுத்தன. லேசாக ஒரு காற்று ஈரத்துடன் வீசியது.

சிவகாசி நகரத்தின் மின் விளக்குகள் நட்சத்திரங்களாக தெரிந்தன.

சற்று நேரத்திற்கெல்லாம் சடசடவென்று மழை பெய்ய ஆரம்பித்தது. பூமியின் மீது பழி தீர்ப்பதுபோல ஆக்ரோஷ மாக மழை சடசடத்தது. ராத்திரி பூராவும் பெய்த மழை போதாதென்று...இந்தப் பாட்டம் சற்று பெரிதாக நீண்டது.

மழை நிற்கவும், பஸ்வரவும் சரியாக இருந்தது. ஒரு ராட்சஸ தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு சொந்தமான பஸ்.

குழந்தைகளின் உழைப்பை யெல்லாம் மலிவான விலைக்கு வாங்கி, லாபமடைவதற்காக பஸ்ஸை அனுப்பி வைப்பார்கள், குழந்தைகளைப் பிடிக்க.

பஸ் நிறைய குழந்தைகளை புளிச்சிப்பம் போல அடைத்துச் செல்வார்கள். மிருகங்களைப் போல வேலை வாங்குவார்கள். வாரச் சம்பளம். அற்பச் சம்பளம்.

காலை ஐந்து மணி முதல் மாலை நான்கு மணி வரை வேலை செய்தால், வாரத்திற்கு ஒரு குழந்தைக்கு 7 ரூபாய்10 ரூபாய்... அதிகபட்சம் 15 ரூபாய்தான்.

குழந்தை பிடிப்பவனைப் போலவே பஸ் கிராமத்திற்குள் நுழைந்தது. சகதியை வாரியடித்தது. டிரைவர் ஹாரனை அழுத்தினார். ஊரெல்லாம் அலறியது.

குழந்தைகள் குதூகலமாக ஓடி வந்து ஏறினர். உட்கார இடம் பிடிக்க-ஜன்னலோரத்தில் இடம்பிடிக்க வென்று முண்டியடித்துக் கொண்டு ஏறினர்.

''ஆச்சி நா வரட்டுமா...?''

''போய்ட்டுவா...கண்ணு'' என்றாள். ராஜி தூக்குச் சட்டியுடன் விரைந்தாள். பட்டியும் பின்னாலேயே சென்றாள்.

''சாக்கிரதையா போய்ட்டுவாம்மா...யார் கூடவும் சண்டை போடாதேம்மா...பத்திரமா போய்ட்டு வாம்மா... ஆளுக்கு முந்தி எங்கயும் ஓடாதம்மா...நல்லபடியா போயிட்டு வாம்மா... நா இருக்குறதே ஒன்னை நம்பித்தான் கண்ணு... சாக்கிரதையா போய்ட்டு வாம்மா...''

வாய் வலிக்காமல் ஓயாமல் கொல்லிக் கொண்டே, பின்னாலேயே வந்தாள் ''சரியாச்சி..,ஆட்டும் ஆச்சி'' என்று எந்திரமாக எதிரொலித்தவாறே முன்னே ஒரு முயலைப்போல் ஓடினாள்,

பஸ்சுக்குள் ஏறிக் கொண்டாள். பூமியை புண்ணாக்கிக் கொண்டு, சகதியில் தடம் பதித்துக் கொண்டு பஸ் கிராமத்தைக் கடந்தது.

பாட்டி வீட்டுக்கு திரும்பினாள். சகதி காலுக்கடியில் நெளிந்தது; குளிர்ந்தது. பேத்தியை அனுப்பி விட்டு வீட்டுக்கு வரும்போது, அவள் மனதில் ஒரு இழப்பின் சோகம் தோன்றியது. குற்ற உணர்வும் நெஞ்சில் முள்ளாக உறுத்தியது.

பேத்தி-சின்னஞ் சிறுசு...படிச்சிக்கிட்டு கவலையறியாமல் வளர வேண்டிய வயசு...இந்த வயசில் சூரியனைப் பாராத உழைப்பு உழைச்சு உயிர் வாழ வேண்டிய அவலம்...

வாழ்க்கைன்னாலே போராட்டம் தானோ! ஒவ்வொரு நாளும் போராட்டம், வாழ்க்கைங்கிறது எவ்வளவு சிரமமா—போராட்டமா நமக்கு மட்டும் வாய்க்கிறதே...இதென்ன கொடுமை...

பணமும் வசதியுமாய் வாழ்கிற மகாராஜாமார்கள், எவ்வளவு சந்தோஷமாக–சாதாரணமாக வாழ்கிறார்கள். அவர்கள் வீட்டுக் குழந்தைகளெல்லாம், அன்றலர்ந்த ரோஜாக்களாக திரிகிறார்களே...அவர்களின் பள பளப்பான உடைகளும், பள்ளிக்குச் செல்லும் அழகும்...அவர்கள் குதூகலப் பேச்சின் இனிய குரல்களும்...உல்லாசமும்...

நம்ம வீட்டுக் குழந்தைகளுக்கு மட்டும் ஏன் இப்படி? துள்ளித் திரிய வேண்டிய பிஞ்சுப் பருவத்தில் கூட வாழ்க்கைப் பிரச்னைகளை சுமந்து திரிய வேண்டியவர்களாக - மாடாக உழைக்க வேண்டியவர்களாக-வாழ்க்கையின் அற்ப சுகங்களைக் கூட அனுபவிக்க முடியாதவர்களாக, சே!

என்ன பொழப்பு இது...ஆண்டவனுக்கு எதுக்கு இந்த ஓரவஞ்சம்!'

கிழவி சிந்தனைகள் நெஞ்சத்தை அழுத்த வீட்டுக்குள் நுழைந்தவளுக்கு, என்னவோ அழ வேண்டும்போல மனதெல்லாம் குமுறியது...

நொந்துபோன இருதயத்திற்குள்ளிருந்து பதுங்கிக் கிடந்த நினைவுகள் புலம்பலாக-அழுகையாக வெளிப்பட்டது அது, நெஞ்சைப் பிளக்கும் சோகத்துடன் கவிதையாக-இலக்கி யமாக ஒலித்தது.

தம் வாழ்க்கையை - அதன் இயக்கத்தை - சிரமத்தை துய ரத்தை - இன்பத்தை - நம்பிக்கையை எல்லாம் சுமந்த, அர்த் தங்கள் பொதிந்த எளிய வாசகக் கோர்வைகளாக - இசை யெடுத்து, குரலெடுத்துப் பாடும்போது, இயல்பாக நேர்த்தி யான கோர்வைகளாக - கவிதையாக - மாறிய அந்தப் புலம்பல் ஓய்ந்து - அவளும் ஓய்ந்து...

''ஆண்டவனே எனக்கின்னு இருக்கிற ஒரே பாசத்தை-ஆதரவை-நீ தான் எந்தக் குறைவுமில்லாமெ காப்பாத்தணும்'' என்ற பிரார்த்தனையுடன் படுத்துக் கொண்டாள்.

கண்களின் ஓரத்தில் நீர் வழிந்தது.

அந்தப் பஸ் விரைந்தது. அதன் வெளிச்சம். ஈரமாகிக் கிடந்த தார்ச்சாலையின் கறுப்பின் மினு மினுப்பை காட்டிக் கொண்டே சென்றது. ஈசல்கள் வெளிச்சத்தில் பறந்தன.

பஸ்ஸுக்குள், குழந்தைகள், சீட்டுகளில் நெரிசலாக அமர்ந்திருந்தனர். சீட்டுகளின் இடை வெளிகளிலும் குழந் தைகள் காற்று நுழைய இடமின்றி அடைக்கப்பட்டிருந்தனர். 10 வயசிலிருந்து 16,17 வயசு வரை; முழுக்க சிறுவர் சிறுமிகள்.

அந்த நகரத்தை நெருங்க இன்னும் ஓரிரு மைல்கள் தான். இருட்டு கருப்பாக அப்பிக் கொண்டிருந்தது. மழை நின்று விட்டது. தார்ச்சாலையின் குண்டு குழிக்குள் பஸ் விழுந்து எழும்போதெல்லாம் ஏற்படும் குலுங்கலில், குழந்தை கள் அலறினர். சிரித்தனர்; கூச்சலிட்டனர்.

ஒரு ஓடை குறுக்கிட்டது. அது ஒரு கிராமத்தின் கரை யாக இருந்தது. அந்த ஓடையில் வெள்ளம். பத்து இருபது

நாட்களாக-அடை மழை பிடித்த நாளிலிருந்து அந்த ஓடை யில் தண்ணீர் ஓடத்தான் செய்யும்.

ரொம்பக் கொஞ்சமாக வேகமின்றி ஓடும்.

ஆனால் இன்று—

தண்ணீர் ரொம்பப் பெரிய வெள்ளமாக ஓடியது.

அக்கரைக்கும்-இக்கரைக்கும் கொள்ளாமல்-செம்மண்ணில் நனைந்த நீராக-பெருத்த சுழல்களும் வேகமும் கொண்ட பெரு வெள்ளமாக ஓடியது. குழந்தைகள் சிரித்தனர். கூச்சலிட்ட னர். ஏதோ ஒரு புதிதைக் கண்ட அதிசயத்தில் குதூகலித்தனர்.

ராஜி பயந்தாள். 'அடேயப்பா எம்புட்டு பெரிய வெள்ளம் டிரைவர் திகைத்தார். ஓடு பாலம் தான். 'இறங்கலாமா' கூடாதா' யோசித்தார்.

ராத்திரி பூராவும் பெய்த மழையை சுட்டிக்காட்டி ''இன் னிக்கு பஸ் எடுக்கவா'' என்று தான் தயங்கியதையும்-''ஆர்டர் களுக்கு சரக்கு அனுப்பியாகணும். என்ன ஆனாலும் சரி, எவ்வளவு சிரமப்பட்டாலும் சரி, வண்டியை எடுத்துட்டுப்போய் ஆள்களை கூட்டிட்டு வரணும். இது முதலாளியோட கடுமை யான உத்தரவு'' என்று மேனேஜர் கடுமையுடன் அடித்து கூறியதையும் நினைத்து கொண்டார் டிரைவர்.

ஓடையில், எந்தக் காலமுமில்லாத அளவில் ஓடும் வெள் ளத்தின் நிலைமையை பார்க்க எழுந்த கிராமத்தினர் சிலர், டிரை வரிடம் எச்சரித்தனர்.

''ரொம்ப ஆபத்து. இறங்க வேண்டாம். 150க்கு மேலே குழந்தை இருக்கு. விளையாடக் கூடாது'' என்று எச்சரித் தனர்.

ஆனால் டிரைவருக்கு மேனேஜரின் கண்டிப்பு மனசுக்குள் பெரிதாக ஒலித்தது 'இப்ப தயங்கினா...வேலை போனாலும் போயிடுமோ' என்கிற உதைப்பு; கண்டக்டருக்கும் அதே நிலை.

பஸ்ஸை ஸ்டார்ட் செய்து விட்டார்-ஓடைக்குள் ஓடு பாலத்தில்-வண்டியை இறக்கினார். ஒரு தடவைக்கு மூன்று தடவை 'மாரியம்மாளை' வணங்கிக் கொண்டார்.

ஹெட்லைட்டின் வெளிச்சம் வெள்ளத்தில் பாய்ந்தது. இழுப்பு அதிக வலுவுள்ளதாக இருந்தது. வெள்ளத்தின்

இரைச்சலும், அச்சுறுத்தும்படி பெரிதாகி-மனசில் பீதி ஏற்படுத்தும்படி இருந்தது.

பஸ் உறுமலுடன் நீருக்குள் இறங்கியது. ஓடு பாலம் எது? ஒன்றும் புரியவில்லை. பத்து வருஷமாக இந்தப் பாலத்தில் போய் வந்த அனுபவத்தில்—ஒரு உத்தேசமாக ஓட்டினார். நீருக்குள், பாலத்தின் பாதையை தீர்மானிப்பது, கஷ்டமாகத் தான் இருந்தது.

வண்டி மெதுவாக நகர்ந்தது, நீருக்குள் சன்னஞ் சன்னமாக—குழந்தைகள் பயத்தில் உறைந்து போய் - மயான அமைதியை ஏற்படுத்தியிருந்தனர். வண்டிக்குள் தண்ணீர் புக ஆரம்பித்தது.

சக்கரம்,தடக்கென்று ஏதோ ஒரு கிடங்குக்குள் விழுந்ததைப் போலிருந்தது.

டிரைவர் பதறிப் போய் பிரேக் போட்டார்.

வண்டியை பின்னுக்கு எடுக்க முயன்றார்.ஊஹூம்....முடியவில்லை, முதல் தடவை, 2-வது, 3-வது, தடவை முடியவில்லை. டிரைவருக்கு உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

''என்னண்ணே....என்ன ஆச்சு....''

''முன் வீல் பாலத்தைக் கடந்து போய் நின்னுக்கிடிச்சு.''

''லெப்ட்டா, ரைட்டா?''

''ரைட்தான்''

''பேக்லே எடேன்''

''முடியலே. வீல் வசமாக போய் சிக்கிக்கிடிச்சு.''

''அய்யய்யோ இப்ப என்ன செய்றது? பின்னாடியும், முன்னாடியும் வெள்ளம். பஸ்ஸை ஆழத்துலே கொண்ணாந்து நிப்பாட்டிட்டியே. பஸ்ஸுக்குள்ளேயெல்லாம் தண்ணி வர்ரதே...''

''நா என்ன செய்ய....''

''வண்டிக்குள்ளே தண்ணி ரொம்ப வருதே....''

''அடக் கடவுளே இப்ப என்ன செய்றது? சண்டாளனுங்க ! முதலாளிமார் அவுங்க பெண்டாட்டி புள்ளேகளோட ஏர்க்கண்டிஷன்லே படுத்துக் கிடப்பான் அவங்களுக்கு உழைச்ச நம்ம குடும்பங்க தான் தெருவுலே நிக்கும். அஞ்சு பைசாகூட குடுக்க மாட்டான். படுபாவி'' டிரைவரின் பயம், குருட்டுக் கோபமாக வெளிப்பட்டது.

குழந்தைகள் பயத்தால் நெஞ்சடைத்துக் கிடந்தவர்கள், நீர் வண்டிக்குள் பெருகப் பெருக பயத்துடன் அழுக ஆரம்பித்தனர். அலறினர். ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டனர். மரண பீதி அவர்கள் முகத்தில் ஒரு கொடிய நிழலாக பதிந்தது.

ஓரிரு 'வெடிப்பான' சிறுவர்கள் பஸ்ஸை விட்டு வெளியில் வெள்ளத்தில் பாய்ந்தனர். பஸ்ஸுக்குள் கிடந்து சாவதை விட, வெள்ளத்தில் போராடிச் சாவோமே என்கிற அசுரத் துணிச்சல். மரண எல்லேயில் எந்த உயிர்ப் பிராணிக்கும் ஏற்படும் போராவேசம்.

டிரைவர் கண்டக்டரைத் திட்டினன்.

''எலே....எவனேயும் வெளியே விடாதே. போக விடாதேடா, தடிமாடு!''

''ஏன்?''

''பஸ்ஸுக்குள்ளே லோடு குறைஞ்சா....வெள்ளம் பஸ்ஸையும் இழுத்துட்டு ஓட ஆரம்பிக்கும்....நாமும் அரோ கராதான் முட்டாள் முண்டம்!''

''போகாதீங்க....யாரும் போகாதீங்க. போனீங்கன்னு.... வெள்ளத்திலே செத்து மிதந்து போகாதீக....''

'போகாதீக' என்ற அபாயக் குரலே அவர்களைப் போக வைத்தது. தடுத்த கண்டக்டரை அடித்துத் தள்ளி விட்டு ஒவ்வொரு குழந்தையும் சாவின் விளிம்பில் விளையும் அபாரத் துணிச்சலில் நீருக்குள் - உயிர்ப்பசி கொண்ட வெள்ளத்தில் பாய்ந்தனர்.

அவர்கள் இந்த வயதில் எத்தனை சண்டை போட வேண்டியிருக்கிறது. உயிர் வளர்க்க வயிறு வளர்க்க-உழைப்பு இடத்தில் சண்டைகள். வாழ்க்கையுடன் இந்தப் பிஞ்சுகளின் மல்லுக்கட்டு. இந்தச் சமுதாயத்துடன்-சமுதாயத்தின் புல்லுருவிகளுடன் போர் நடத்த வேண்டிய நிலைமை. இதோ... அதன் தொடர்ச்சியாக உயிருக்காக வெள்ளத்துடன் மல்லுக்கட்டு. உக்ரமமான மல்லுக்கட்டு. மனித இனமே வெட்கப்பட்டு தலை கவிழச் செய்யும் மல்லுக்கட்டு.

ராஜியும் நீருக்குள் குதித்தாள். குதிக்கும்போது பஸ் தலையில் அடித்துவிட்டது. யாருடைய கையையோ பற்றியிருந்தாள். நீருக்குள் விழவும் அந்தக் கையும் ஒரு வேகத்துடன் உருவிக் கொண்டது.

மரணப் பயத்தில் குழந்தைகளின் அலறல்; கூச்சல்; ''ஐயய்யோ ஐயய்யோ' என்று இரும்பையும் உருக்கும் இளசுகளின் சோகக்குரல்கள்.

''ராஜி....ஏய் விஜயா....'' ''ஏய் ரெட்டை வால்....'' ''ஏய் குட்டை'' ''ஏய் பாஸ்கர்'' ''ஏய் மாலக்கா''.

ஒருவரையொருவர் உதவிக்கு அழைத்துக் கொள்ள-யாருமே யாருக்கும் உதவ முடியாமல்-தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள தெரியாமல்-இருட்டில் கூக்குரலிட—

உயிர்ப்பசி கொண்ட வெறியுடன் அசுர வேகத்தில் வெள் ளம் அவர்களை இழுத்துச் செல்ல-

ராஜிக்கு நீந்த தெரியும். ஆனால் நீந்த முடியவில்லை. வீசி யெறியப்பட்ட வேகத்தில் வெள்ளம் இழுக்கிறது. எங்கோ புதை குழிக்குள் ஆழ்வதைப் போன்ற பீதியில் மனசு மருண்டு- நீந்தக் கை வராமல் தவிக்கிறாள்.

ஏதோ ஒரு வேலி மரம் உருண்டு வரும் ராஜியை தடுக் கிறது. ஆவலுடன் பிடித்துக் கொள்ள நீருக்குள் கைகளால் துளாவ-வேலி முட்கள் கையைக் கீற-வெள்ளம் அதற்குள் வேறு எங்கோ உருட்டி எறிய...

''ஆச்சீ...ஐயய்யோ ஆச்சி'' என்று உரத்த குரலில் கூச்ச லிடுகிறாள். பயத்தில் நனைந்து போன மனது.

நீர் புரட்டும் போதெல்லாம் மடக் மடக் கென்று தண் ணீரை குடித்து விடுகிறாள்.

ஓடு பாலத்தை விட்டு அவர்களை ரொப்பத் தூரம் வெள்ளம் இழுத்துக் கொண்டு வந்துவிட்டது.

ராஜியின் கண்களுக்கு தற்செயலாக 'அது' தெரிந்து விட்டது.

அதோ, ஓடையின் வடகரையில் ஒரு ஆலமரம்! அதன் ஒரு கிளை சற்று சாய்ந்து, ஓடையின் மேல் நீண்டிருந்தது. நீரில்லாத காலங்களில் அந்தக்கிளை எட்டா உயரம்; இன்று வெள்ளம் அதன் மட்டத்திற்கு செல்கிறது. ராஜி பார்த்துக் கொண்டாள்.

எப்படியாவது அதைப் பிடித்துவிட வேண்டும். ஆனால் வெள்ளம் அந்த இடத்தில் எதற்கு சாய்த்து வளைவாக இழுக் கிறது.

ஒரு அசுர பலத்துடன் உடலை நெளிக்கிறாள். கையையும், காலையும்' தத்தக்கா, புத்தக்கா'வென்று உதைக்கிறாள். நீருடன்

மல்லுக் கட்டி நீந்தப் பார்க்கிருள். மரணத்திலிருந்து தப்பித்து, வாழ்வைப் பற்றிக் கொள்ள கிடைக்கும் கடைசி வாய்ப்பை பற்றிக் கொள்ளும் பேராவலுடன் நீந்துகிருள்.

நீருடன் மல்லுக்கட்டி சோர்ந்து போய்விட்ட உடல் ஒத்துழைக்க மறுக்கிறது. வாழத் துடிக்கும் மனம் வாழ்க்கையின் உயிரான அழைப்பு; முயற்சிக்கிருள். நீந்துகிருள்.

ராஜி அந்தக்கிளையை பற்றி விட்டாள். எப்படியாவது கரைக்குப் போய்விடலாம். அங்கு ஏற்கனவே ஒருத்தியிருக்கிருள். மாலக்கா.

ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளக்கூட முடியவில்லை. அத்தனை சோர்வு. மயங்கிக் கொண்டிருக்கும் நிலை.

ராஜி கிளையை பற்றி ஏறப்போனுள் மாலக்கா...ஹீனக் குரலில் சொன்னுள் : ''போகாதே....மேலே பாம்பு இருக்கு....''

''ஐயோ'' அவள் மனசு அதிர்ந்தது.

விடியும் வரை இப்படியே கிளையைப் பிடித்துக் கொண்டே நீருக்குள் கிடக்கவா? முடியுமா? ஏற்கனவே சோர்ந்த கைகள். மரத்துப் போகாதா? மயங்கிவிட மாட்டோமா...? மனசுக்குள் பயத்தின் அலைகள்.

ஆனுலும் வேறு வழியில்லை. விடியும் வரை? விடியுமா? இவர்களுக்கும் விடிவா? விடியத்ததான் செய்யும்...விடிஞ்சு தான் ஆகணும்!

விடிந்தால்...ஆட்கள் வருவார்கள். குழந்தைகளை காப்பாற்றுவார்கள். செத்து ஒதுங்கிய உடல்களை தூக்குவார்கள். ஆட்கள் மட்டுமா வருவார்கள். நாடே இங்கு வரும். உலகக் குழந்தைகள் ஆண்டல்லவா!. உலகமே இதுபற்றி ரொம்பப்

பேசும். ‘வெட்கப்பட வேண்டும்’ என்றெல்லாம் விஸ்தாரமாகப் பேசும். ஆனால், குழந்தைகளையும் இரக்கமின்றி சுரண்டும் அரக்கத்தனம் மட்டும் இன்னும் கொஞ்ச காலம் வாழும்.

விடிந்தது. ஒரு பாலத்தின் கரையில் மனிதக் கூட்டம். நீருக்குள் பாயும் மனிதர்கள். குழந்தைகளை—சடலங்களை—தேடும் மனிதர்கள்.

கரையில் பெண்களின் ஒப்பாரிகள் அழுகைகள், வரிசை யாகக் கிடத்தப்பட்டிருக்கும் பிரேதங்கள்—பிஞ்சுகளின் பிரேதங்கள்.

பார்த்த ஒவ்வோர் உள்ளமும் இந்த பரிதாபம் கண்டு கசந்து உருகுகிறது.

பரிமளம் பாட்டிக்கும் செய்தி தெரிந்தது. ‘‘ஐயய்யோ, பாதகத்தி, என்னை விட்டுட்டுப் போய்ட்டியா?’’ என்று நெஞ்சி லும், தலையிலும் அடித்துக் கொண்டே இந்தக் கிராமத்துக்கு அலையக்குலைய வந்தாள்.

நீருக்குள் புதையுண்டு கிடக்கும் பஸ்ஸைப் பார்த்தாள். கரையில் கிடக்கும் பிரேதங்களை பார்த்தாள். ஒரு ராட்சஸ வேகத்தில் அவள் விழிகள் பிரேதங்களை பார்த்தது. அவளுக்கு ஒன்றுமே பிடிபடவில்லை. கண்கள் இருண்டன. இந்தக் கோரச் சம்பவத்தின் கொடூரப் பாதிப்பை தாங்க முடியாமல் விழுந்துவிட்டாள். தனது பற்றுக்கோல்’ இற்றுவிட்டதாக எண்ணி... அவளும் செத்துப் போனாள்.

அங்கே ஆலமரத்தைப் பற்றி நீருக்குள் அரைப்பிணமாக மிதக்கும் ராஜிக்கும், தனது வாழ்வின் ஆதாரப்பற்றுக்கோல் ‘வெள்ளத்தில்’ போய்விட்டது. இன்னும் தெரியாது. பாவம், அவள் இன்னும் வாழ்வுடன் மல்லுக் கட்டுவாள்.

சாப்பிட்டு முடித்த ராஜையா, வெத்தலைப் பையை எடுத்து. மடியில் வைத்துக் கொண்டான்.

பிள்ளைகள் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்துக் கொண்டு, கடைக்குட்டியை மடியில் போட்டு தன் ரத்தத்தை பாலாக்கிக் கொண்டே கணவனிடம் கேட்டாள் முத்துமாலை.

''வெளியே மழை பேயுதா?''

''இன்னும் பேயத்தான் செய்யுது''

இரண்டு மாதங்களுக்கு முன் இந்த மழைக்காக ரொம்ப ஏங்கினார்கள். வானத்தை அண்ணாந்து அண்ணாந்து பார்த்தார்கள். மேகங்களின் அசைவையும், காற்றின் போக்கையும் உன்னிப்பாகக் கவனித்தார்கள்.

பூமி மனிதக் கரங்களின் தழுவலையும், மேகத்தின் அபிஷேகத்தையும் மிகவும் விரும்பியது பூமியின் விரகதாப வேதனை கண்டு, மேகங்கள் இரங்கி விட்டன மேகத்தின் கண்ணீர்! நாடெல்லாம் நீர்க்காடு; நாடே தண்ணீரில் மிதக்கிறது.........

வருணபகவானின் அதிகப்படியான இரக்கம் மனிதர்களுக்கு அழிவு சக்தியாக மாற ஆரம்பித்து 'இச்சிலாத்தி'ப் படுத்தியது,

முத்துமாலைக்கு ரொம்ப 'இச்சிலாத்தி'யாக இருந்தது, எப்போ பார்த்தாலும் சடசட; எங்கு மிதித்தாலும் நச நச;

ஒன்றரை மாசமாக ஒரு ஜேர்லி நடத்த முடியவில்லே. வேலே யில்லாமல் கூலியில்லாமல், எப்படி கஞ்சி குடிப்பது? மழைத் தண்ணி குடிச்சி பிழைச்சிருக்க முடியுமா?

''என்ன இழவு கூட்டப் போகுதோ. இப்படி ஓய்வு ஒழிச் சல் இல்லாமெ பேயுது. மழை 'விடேன் பிடி'ன்னு நாப் பது தாளா 'சொருச்சொரு'ன்னு இடைவிடாமெ தண்ணியா ஊத்துதே. அன்னடம் ஒழைச்சுக் கஞ்சி குடிக்கிற நம்ம மாதிரி ஜனங்க என்ன செய்யும்?....ம்ம்... வேலேயுமில்லாமெ வெட்டியு மில்லாமெ....வயிற்றிலே ஈரத் துணியையா, கட்டுறது?''

''நாமெ கூலிக்காரங்கதான். இருக்கலே! செத்தா போனும்?

''நாமாச்சும் ஒரு ஆட்டுக் குட்டி வைச்சிருந்தோம் 'வித்த பணத்தை' தின்னு, பொழுதை கழிக்கிரோம். இதுவும் இல்லாத ஜனங்க....திங்கிற புள்ளேகளே வச்சிக்கிட்டு என்ன தவிப்பு தவிக் குங்க... ம்...''

''இவா யாருடி, சுத்த விவரம் கெட்டவ, நாட்டு நடப்பு தெரியாமெ வருத்தப்படுதே வேலேயில்லேயேங்கிறதா, இப்ப கவலே? பேயிற பேய்மழையிலே உயிரைக் காப்பாத்துறதே பெரும் பாடாயிருக்கு, தெரியுமா? பெரிய பெரிய டவுன்களுக் குள்ளேயெல்லாம் இடுப்பளவு தண்ணி புகுந்து குடிசைகளெல் லாம் வெள்ளத்துலே மிதக்குது, ஒன்னு ரெண்டு இல்லே, லட்சக்கணக்கான குடிசைக தண்ணியிலே போயிடுச்சு நூத்துக் கணக்கிலே ஆளுக செத்துடிச்சு...''

''ம் ச்சூ ச்சூ ச்சூ ம், மண்ணேக் குழைச்சு சுவரா வைச்சு, ஏதோ ஒரு இருப்பிடம்னு உக்காந்திருந்தா அதுலேயும் மண் ணேப் போடுதாக்கும், இந்த நாசமழை! இந்த மழைக்கு அப்படி யென்ன பேதியோ, அடியம்மா, நாபொறந்தாம் பொறப்புலே இப்புடி மழையை பார்த்ததேயில்லேயம்மா.

''நம்ம திருவேங்கடத்து ஆத்துலே இன்னிக்கு ரெண்டு பொண்ணுக வெள்ளத்துலே போயிடுச்சாம்....''

“என்னது? ரெண்டு பொண்ணுகளா? நம்ம திருவேங்கடம் ஆத்துலேயா? நெசந்தானு?'' திடுக்கிடல் தெளிவாகத் தெரிந்தது.

''பெறகென்ன பொய்யா சொல்லுறேன்?''

“அங்கனே ரெண்டு ஆம்பளேக இல்லே?''

''இருந்துதா, இறங்க வேண்டாம்னு சொல்லியிருக்காக. நெல்லுக்கு களேயெடுக்க வந்தவக. திடுதிப்புன்னு வெள்ளம் ஏறியிடுச்சு. பாலத்துக்கு மேலே, கம்பி தெரியாமெ தண்ணி திமுதிமுன்னு வெறி பிடிச்ச வேகத்துலே போயிக்கு அங்க இருந்த ஆம்பளேக் கடத்தி விடுதோம்னு சொல்லியிருக்காங்க.

''இதுக குமரிப் பொண்ணுக. 'இக்கரையிலும் அக்கரையிலும் மொளோர்னு ஆளுககூடி வேடிக்கைப் பார்க்கிறதுனுலே, ஆம்பளேயை தொட்டுக்கிட்டு வெள்த்துலே இறங்க கூச்சப்பட்டுக்கிட்டு, கடத்திவிட முன் வந்தவர்களேயும் வேண்டாம்னுட்டாக. ஏழு பேரும் கையை கோர்ந்துக்கிட்டு தண்ணியிலே இறங்கியிருக்கிருக. என்ன இருந்தாலும் பொம்பளேக தானே!'

''அடடா, பெறகு?'' முத்துமாலேயின் மனம் நிஜமாக துடித்தது.

''பெறகென்ன, தொடையளவு தண்ணிக்கு போனவுடனே புள்ளேக பயந்துடுச்சு தண்ணி திமிங்கலம் போல சுழிச்சு இழுத்துருக்கு. வேகம்னு அப்படி வேகம். ஏழுபேரும் ஒன்னுேடொன்னு கட்டிப்பிடிச்சுக்கிட்டு அலறியிருக்குக, தண்ணி வேகமா இழுத்து உருட்டிப் புரட்டி யடிச்சிடுச்சு அதைப் பாத்து, ஆம்பளேக குதிச்சு. அடிச்சு இழுத்துட்டுப் போனதுலே அஞ்சு பேரை அரைஉசுரோட கரைசேத்துட்டாக. ரெண்டு பேரை தண்ணி கொண்டே போயிடுச்சு''.

''அய்யோ, பாதரவே (பரிதாபமே), அந்நேரம் அந்தப் புள்ளேக மனசு என்ன தவிப்பு தவிச்சதோ! எந்தப் புண்ணியவதி

வவுத்துப் புள்ளைகளோ : வம்பாடு பட்டு வளர்த்து, தண்ணிக்கு வாரிக்குடுத்துட்டு அந்தப் புண்ணியவதிக எத்தனை கோடி அழுகை அழுததுகளோ''.

முத்துமாலை கண்ணில் நீர் வடிந்தது. சொந்த மகளை இழந்து விட்டதைப் போன்ற சோகத்தில் அவள் முகம் வாடி வெளுத்தது. உதடுகள் நடுங்கி அசைய அழுதுவிட்டாள்.

அவன் மனதுக்குள் சிரித்து கொண்டான். 'பொம்பளைக பொசுக்குங்குன' அழுதுடுருகளே என வியந்து கொண்டான் இருப்பினும் பொதுவாக பெண்களுக்குள்ள இரக்க சுபாவத்தை யும், உயர்ந்த மனிதாபிமானத்தையும் நினைக்கும்போது, பிரமிப்பாகவே இருந்தது.

வெளியே மழை இன்னும் பொசும்பிக் கொண்டுதானிருந் தது. இந்நேரத்துக்கு நாலு 'பாட்டம்' முரட்டடியாக அடித்து விட்டது. இன்னும்விட மனசில்லாமல் தூறுகிறது. வீதியில் கண்ணுடிச் சுத்தமாக தண்ணீர் ஓடியது அதில், மழைத் தூறல் விழும்போதெல்லாம், அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது போல் ஒவ்வோர் ஊசியாக எழுந்து அடங்கியது.

''மூணு வருஷமா காய்ஞ்சு கெடுத்தது. இப்ப பேய்ஞ்சு கெடுக்குது. நமக்கு மட்டும் இப்படி ஊர்களை கொள்ளை கொண்டு போக நாசமழை வந்து வாய்ச்சதாக்கும்?''

முத்துமாலையின் துயரார்ந்த அங்கலாய்ப்பு.

''இங்க மட்டுமல்ல முத்துமாலை. தமிழ்நாடு பூராவும் இதே மழைதான். எத்தனையோ கன்மாய்க உடைஞ்சு. கிராமங் களையே இழுத்துட்டுப் போயிடுச்சு. வெள்ளத்துலே பன்னிகளும், வெள்ளாடுகளும், கழுதைக் குட்டிகளும் செத்துமிதந்து வரு தாம். பரமக்குடி ஏரியா பூராவும் தண்ணி சூழ்ந்து, அவங் களையே தனித் தீவாக்கிடுச்சாம். பாவம் வீடிழந்ததுக! எத்தனையோ புள்ளை குட்டிகளை பறி கொடுத்து தவிக்கிறதுக எத்தனையோ''.

''அடக் கொடுமையே, உலகத்தை அழிக்கத்தான் இந்த மழை இப்படி ஊத்துது. பரமக்குடின்னு, நம்ம செல்லச்சாமி அண்ணச்சி மகன் கூட்டம் கூட்டம்னு போவானே அந்த ஊரா? அது, கடலுக்கு அங்குட்டா இருக்கு?''

''அங்குட்டு இல்லே. இங்கிட்டுதான் அதுவும் நம்ம மாவட்டம்தான்''

''இப்படி பேயா மழை பெரு மழையா பேய்ஞ்சு கெடுக்குதே. நாமெல்லாம் என்னதான் செய்றதோ! இந்த ஏற்கை (இயற்கை)யோட இன்னும் எத்தனை காலம் மல்லுக் கட்டணுமோ''

என்ற முத்துமாலை 'ஏதோவோர்' நினைப்புடன் தமது வீட்டை அண்ணாந்து ஒரு சுற்று பார்த்தாள். கண்களில் ஒரு பிரகாசிப்பு.

புது வீட்டின் மணம் இன்னும் போகவில்லை கதவில் தடவிய எண்ணெய், மேலே பனங்கட்டையில் பூசிய கீல் எண்ணெய் இவையின் மணம் இன்னும் புதுசு மங்காமல் வீசுகிறது. கூரையில் மூடியிருந்த செங்கல் ஓடுகள் மழைத் தூறலை 'கணங்கண' வென்று எதிரொலித்தது.

இந்த வீட்டைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு நெஞ்சம் பெருமையிலும் பூரிப்பிலும் விம்மியது. இனிய இசை கேட்ட பசுவின் மனசைப் போல லாகிரியில் மயங்கியது.

வீடென்றால் இது சாதாரணமாக கல்லும் மண்ணும் கலந்து கட்டிய வீடா? இந்தக் குடும்பத்தின் ரத்தமும் சதையும் எலும்புமாக சேர்த்து எழுப்பிய வீடல்லவா இது!

இது அவளுக்கு ஒரு லட்சிய வெற்றி இப்படி வீடு கட்ட வேண்டுமென்று கொஞ்சமா கனவு கண்டாள்! ஒரு வருஷமா, ரெண்டு வருஷமா, பத்து வருஷகனவல்லவா!''

கல்யாணம் முடிந்து ராஜையாவுடன் தும்மந் தட்டையால் வேய்ந்த சிறு குடிசைக்குள் நுழைந்தாள் மறு மாதம்.

ஆடி மாதக் காற்று சூருவளியாக மாறி சுழன்றடித்ததில் அந்தக் கூரையின் கம்மந்தட்டையில் பாதிக்குமேல் அள்ளிச் சென்று விட்டது. வீடு 'பௌாச்' சென்று வாய் திறந்து விட்டது.

சூரியனின் வெயில் பூராவும் வீட்டுக்குள்தான் ராஜையா ரொம்ப மனசு உடைந்து போனன்.

முத்துமாலையை பிடிக்காத ஒரு சில பெண்கள் இப்படி கிசுகிசுக்கத் தொடங்கினர்.

''எந்த நேரத்திலே இந்த ஓடு காலி நுழைஞ்சாளோ வீட்டைக் காத்து பறத்திட்டுப் போயிடுச்சு''

அது, 'இவளை ரொம்பப் பாதித்தது இரவுகளில் தனியே உட்கார்ந்து நீண்ட நேரம் விசும்பி விசும்பி யழுவாள் ராஜையா எத்தனை சமாதானம் சொன்னலும். மனசு ஆறவில்லை நெருப் பாகத் தகித்தது.

''இந்த முண்டச்சிக கண்ணுக்கு முன்னலே நாமும் ஒரு பெரிய வீடு கட்டுனத்தான் எம்மனசு ஆறும்'' என்று அவமதிக் கப்பட்ட பாஞ்சாலியின் ஆவேசத்துடன் கூறினள்.

அந்த ஆவேசமே கனவுகளாக....லட்சியமாக நெஞ்சில் உறைந்து அவளை ஒரு பேயாக ஆக்கிவிட்டது.

இந்த வீட்டை இப்போது பார்க்கிறபோது மனசெல்லாம் நிறைந்து ததும்பிவிடுகிறது லட்சியத்தை எட்டிப் பிடித்த வீராங்கனை போல சவாலில் ஜெயித்து விட்டதைப் போல, துரியோதனின் தொடை ரத்தத்தை கூந்தலில் பூசிக்கொள்ளும் போது பரவசப்பட்ட பாஞ்சாலியின் மனசைப் போல முத்துமாலை இப்போது சந்தோஷப்பட்டாள்.

அவளது கண்களின் பிரகாசம் நெஞ்சில் இறங்கி நாவிலும் துடித்துக்கொண்டிருந்தது....

'எப்படியோ எந்தச்சாமி புண்ணியத்திலேயோ நாமெ நல்ல படியா ஒரு வீட்டை கட்டி முடிச்சாச்சு கஞ்சி குடிச்சாலும், குடிக்

காட்டாலும் புள்ளே குட்டிகளே வைச்சுகிட்டு பத்திரமா உறங்கி முழிக்கலாமே''

அவள் நெஞ்சில் பொங்கி வழிந்த பெருமிதம், ராஜையா நெஞ்சிலும் தாவிக் கொண்டது. இவனும் விரிந்து ஒளிரும் கண்களுடன் வீடு முழுக்க ஒரு சுற்றுசுற்றினன். 'கோபாலச் சுவரில் வந்து பார்வை நின்றது. தேங்கியது; மங்கியது; மன சில் ஒரு கவலேயின் பாரம்...

...அன்று பனங்கட்டை அடித்து, ஓடு வேய்ந்து கொண்டி ருந்தார்கள். டவுனிலிருந்து வந்திருந்த ராமையா நாடார் வேலே நடக்கும் விதத்தை உற்றுக் கவனித்துக் கொண்டிருந் தார்.

மிளகாய் வற்றல் கமிஷன் மண்டியில் கணக்கப்பிள்ளேயாக இருக்கிருர் ஆனல், இந்த கிராமம் தான் பூர்வீகம்.

அவர் வீடுகளே-வீட்டுச்சுவர்களே-கட்டுமான முறைகளேப் பற்றியெல்லாம் நிறைய அனுபவ ஞானம் மிக்கவர். புது வீடு கட்டுகிறவர்களெல்லாம் அவரைக் கூட்டிக்கொண்டு போய் காட்டி, அவர் சொல்லும் யோசனேகளேயும், திருத்தங்களேயும் கேட்டு அதன்படியே செய்வார்கள். அவரது எஞ்ஜினீயரிங் மூளேமீது அத்தனே நம்பிக்கை.

அவர்தான் ஓடு கவிழ்ப்பதையும், வீட்டுச்சுவர் கடடுமானத் தையும் உன்னிப்பாகப் பார்த்தார்.

''என்ன மாப்ளே, வீட்டுக்கு சுவர் வைச்சது யார் மாப்ளே?''

''நம்ம கொத்தனர்தான் மாமா, என்ன விஷயம்?''

அவர் மௌனமானர். அவர் மனசுக்குள் ஏதோ எண் ணங்கள் ஓடுகின்றன சற்று தயக்கத்திற்குப் பிறகு கேட்டார்.

''இந்தக் கோபலச் சுவர் கட்டணும்னு யாரு சொன்னது?'

''கொத்தனார்தான் மாமா''

'எதுக்காம்?''

''ஓடு மரம் வாங்க பணம் போதாமே தவிச்சிக்கிட்டிருந்தேன் பணம் பத்துப் பானேஞ்சுநாள் தாமதமாயிடுச்சு. நா மருகிக்கிட்டு நிக்கிறதை பாத்துட்டுதான் கொத்தனார் இந்த யோசனையை சொன்னார்'

''என்ன சொன்னார்?''

''கோபாலச் சுவர் வைச்சிடலாம் வைச்சிட்டா ஓடு மரம் வாங்றே செலவு பாதியா கொறைஞ்சு போகும்னு சொன்னார் எனக்கும் அது நல்லதாப் பட்டது. சரின்னுட்டேன்''

''அப்படியா'' என்று உயிரில்மாமல் எதிரொலித்தார். மீண்டும் மௌனமாக இருந்தார். ரொம்ப யோசனையாக இருந்தார் மட்டியைக் கடிப்பதுவும், மீசையை நீவுவதுமாக இருந்தார் பார்வை, கோபாலச்சுவர் மீது ஆணி அடித்தாற்போல நிலைத்து நின்றது.

ராஜையாவுக்கு மனசுக்குள் 'நறுக்'கென்றது 'நேர்ந்து விட்ட தவறை சுட்டிக்காட்டி ஏன் விணுக பயப்படுத்த வேண்டும்' என்று தயங்குவதுபோல அவரது முகபாவனை உணர்த்தியது,

ராஜையா கொடுத்த வெற்றிலையை போட்டு வாயில் குதப்பிக் கொண்டே சொன்னார்.

''பெரியவுங்க வீட்டைக் கட்டிப்பாரு கல்யாணம் பண்ணிப் பாருன்னு' சொல்லுவாக ரெண்டும் ரொம்ப காலம் நிலைச்சு நிக்க வேண்டிய விவகாரம் ரொம்ப நிதானமா யோசிச்சு, குறையில்லாதபடிக்கு செய்யணும். ஏதாச்சும் ஒரு குறை செய்ஞ்சுட்டா பின்னடி வந்து பாதிக்கும். ரொம்ப நஷ்டமாகும் திருத்த முடியாத ஒரு சிக்கலாகிப் போகும்''

என்ற ரீதியில் அவர் பேசிக் கொண்டிருந்தது ராஜையா வுக்கு இன்னும் நெஞ்சில் புதுமை குன்ருமல் ஒலிப்பது போலி ருந்தது.

'கோபாலச்சுவர் ஒரு குறைதானே' என்ற நினைப்பு ஒரு நெருடலாக ஒரு பீதியாக இருந்து கொண்டே தானிருக் கிறது.

''என்ன யோசனை?''

முத்துமாலையின் உசுப்பலில் ராஜையா விழித்துக் கொண் டான்.

''ஒன்னுமில்லே'' என்று சொல்லிவிட்டு, மனசின் கனத்தை ஒரு பெருமூச்சாக்கி லேசாக வெளியிட்டு விட்டு வெளியேறி விட்டான்.

தூறலுக்கு மறைவாக ஒரு சாக்கை 'கொங்காணி' போட்டு கொண்டான்.

இந்த ஒரு மாதமாகவே வானத்தின் நீலவண்ணம் கண் ணில் படவில்லை. மதம் பிடித்த யானைக் கூட்டங்களைப்போல மேகங்கள் திரண்டு திரண்டு, அடர்ந்து-குவிந்து-படர்ந்து—தா மிரட்டிக் கொண்டே திரிகின்றன.

வெயிலின் வெளுப்போ உஷ்ணமோ, புழுக்கமோ இல்லா விட்டாலும், எந்நேரமும் ஒரு இறுக்கம் இருந்து கொண்டே யிருந்தது, சண்டை நடந்த வீட்டில் போல.

ஆற்றில் பத்து வருஷமாக இல்லாத பயங்கர வெள்ளம், பெருத்த இரைச்சலுடன் பெருக்கெடுத் தோடுகின்றது.

வளர்ந்து நின்ற வேலி மரங்களையெல்லாம் சாய்த்துப் பணிய வைத்து மறைத்துக் கொண்டு 'செவேர்' ரென்று வெள் ளம் பாய்கிறது.

வெள்ளத்தை வேடிக்கை பார்க்க ஆண்களும், பெண்களும், சிறுவர், சிறுமிகளுமாக ஏராளமான கூட்டம்.

வெள்ளத்தில் பாய்ந்து அக்கரைக்கும், இக்கரைக்குமாக நீந்தி வீரசாகசம் செய்து காட்டும் விடலைப் பையன்களின் குதூ கலப் பேரொலிகள்.

தோட்டமெல்லாம் ததும்பிக் கிடக்கும் நீர்ப்பெருக்கு. நட் டப்பட்டிருந்த மிளகாய் நாற்றுகள் தூர் அழுகி உயிரிழந்து காணப்பட்டன கிணறுகளெல்லாம் நீர் நிரம்பி, 'மறுகால்' பாய் கிறது. பம்ப் ஷெட் அறைகளுக்குள்ளிலிருந்து சில மோட்டார் கள் நீரில் மூழ்கிக் கிடக்கின்றன; முன்கூட்டி விழித்துக் கொண்ட வர்கள், மோட்டாரை மட்டும் கழற்றி வீட்டிற்கு கொண்டு போய் விட்டனர்.

பாவம், இந்த ஊர்க் கடைக்காரர்கள்! ரோடு வசதியில்லை. எந்தத் திசையில் போனாலும் முழங்காலளவுக்கு இறங்கும் சகதி; போதாக் குறைக்கு வடக்கிலும், தெற்கிலும் வெள்ளத் தின் சீற்றமான பாய்ச்சல். எங்கும் போக இயலவில்லை.

சரக்குகள் வாங்க எப்படி போவது? சிரமப்பட்டு போனாலும், எப்படி சரக்குகளை சுமந்து வருவது? அப்பப்பா...நரகவேதனை தான்.

கொங்காணியுடன் நடுத்தெரு மடத்துக்கு வந்தான் ராஜை யா, அங்கே ஏற்கனவே கூடியிருந்த விவசாயிகள் மேற்கண்ட விஷயங்கள் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள். சாங் கோபாங்கமாக அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அடேயப்பா, அதில் தான் எந்தனை நகைச்சுவைத் தூறல் கள்!

வெள்ளத்தில் பருத்தி விதை மூட்டையைப் பறி கொடுத்து விட்டு கரையில் உட்கார்ந்து அழுத கடைக்காரன் ஒருவனைச் சொல்லிச் சொல்லிச் சிரித்தார்கள்.

வெள்ளத்தில் இறங்கி, நீந்த முடியாமல் நீரைக் குடித்து முள்ளுக்குள் கைகள் சிக்கி, மேனியெல்லாம் ரத்தக் கீறல்

களுடன் தவித்து, மிரண்டு கரையேறிய ஒரு விவசாயியையும் கேலி செய்து சிரித்தார்கள்.

அவர்கள் பார்வை ராஜையா பக்கம் திரும்பியது.

''இந்தா இருக்கானப்பா, புது வீட்டுக்காரன் ராஜையா''

''அவனுக்கென்னய்யா கவலே ஊரு நாடெல்லாம் வீடி டிஞ்சு கூரை விழுந்து ஜனங்க தெருவுலே நாதியத்து திரியுது. இவன் அரண்மனே மாதிரி வீடு கட்டி... சௌக்கியமா யிருக்கா னய்யா.

''இந்த மாதிரி பெரிய வீடு கட்ட பணம் எங்கேயிருந்து கிடைச்சது? எங்கையாச்சும் புதையல் கிதையல் எடுத்தாஞ?''

''அவன் எதுக்கு புதையல் எடுக்கணும்? முத்துமாலேயே ஒரு புதையல் மாதிரி தானே! பூதம் மாதிரி உழைக்கக் கூடிய வள். நல்ல செட்டுமைக்காரி.''

அதற்கெல்லாம் சேர்த்து பொதுவாக 'சும்மாயிருங்கய்யா' என்று ஒரு சிரிப்பு சிரித்தான். எத்தனே மறைக்க முயற்சித் தாலும் சிரிப்பில் ஒரு பெருமிதம் ஒளிவிடத்தான் செய்தது.

உரையாடல் தொடர்ந்தது. ராஜையா நினேவுகளில் புதைத்து போஞன். 'இப்படி ஒரு வீட்டை எப்படி தன்ஞல் கட்டி முடிக்க முடிந்தது?'

இப்போது நினேத்தால் கூட மனசில் ஒரு மலேப்பும், பிரமிப் பும் தோன்றத்தான் செய்கிறது.

நிஜந்தான். முத்துமாலே ஒரு புதையல் மாதிரிதான். என்ன உழைப்பு உழைப்பாள். நாள் பூராவும் அயராமல் அத்தனே உழைப்பு, தொடர்ந்து உழைக்க அவளால் எப்படி முடிந்தது? அதுவும், 'இன்னும், இன்னும்' என்கிற மாதிரியான தீராத ஆர்வத்துடன் கூடிய உழைப்பு.

வீட்டு வேலைகளை முடித்துவிட்டு கூலி வேலைக்குப் போய் விடுவாள். மாலை வீடு திரும்புபோது ஆட்டு குட்டி, மாடு கன்றுக்குத் தேவையான புல்லைப் பறித்துக் கொண்டு வந்துவிடு வாள்.

சாயங்காலம் வீட்டில் வேலைகள். கம்போ, சோளமோ- குத்த களி கிண்ட—கடைக்குச் செல்ல...குழம்பு காய்ச்ச வெல்ல மும் தேயிலையும் போட்டு கொதிக்க வைச்ச 'கெடுந்தண்ணி'யை ஊற்றி காய்ந்த குடலை சூடேற்றிக் கொள்ள...

இடை இடையே சண்டை போட்டு சேட்டைகள் செய்யும் குழந்தைகளையும் சமாதானம் செய்து கொள்ள, அம்மம்மா, அவள் ராட்சஸிதான் உழைப்பதில்!

''அங்கே போ'' ''இங்கே போ'' ''இதைச் செய்'' என்று ஒரு நிமிடம்கூட ஓயாமல் இவனையும் அவள் துரத்தித் துரத்தி வேலை வாங்குவாள். உஸ்ஸென்று உட்கார அவளுக்கு மனம் சம்மதிக்காது.

அனாவசியமாக ஒரு சல்லிக் காசு செலவழிக்க மாட்டாள் துட்டு இல்லையே என்று ராஜையா வருத்தப்பட்டுக் கொண் டிருக்கும் தருணத்திலெல்லாம்—அவசியமான செலவாக தோன் றினால் முத்து மாலையின் முந்தியிலிருந்து காசு வெளிப்படும்.

ஏதோ விரதமெடுத்து செயல்படுபவள் போல பல்லைக் கடித்துச் செலவழிப்பாள். எப்படியாவது மிச்சம் பிடிப்பாள் நல்ல செட்டுமைக்காரி தான்.

கால்நடைகள் வளர்ப்பதற்கென்றே பிறவி எடுத்தவள் போல அத்தனை பாசத்துடன் வளர்ப்பாள், அதில் தான் மிச்சமே கிடைக்கும் சீட்டு பிடிப்பாள். அதற்காக வீடுவீடாக அலைவாள். இப்படி வழியும் வியர்வையை துடைக்க பொழு தில்லாமல் பாடுபடுவாள்.

உழைக்காமல் கூரை நிழலில் குழந்தைகளை வைத்துக் கொண்டு ஒரு பெண் சும்மாயிருந்தால் அவளை முத்துமாலை அடிமனசிலிருந்து வெறுப்பாள்.

''இப்பேற்பட்ட 'கூகை'களை ஊருக்குள்ளேயே வைக்கக் கூடாது. ஊர் பாழாகிப் போகும்'' என்பாள்.

முத்துமாலையால் தான் இந்த வீடே எழுந்தது. வீட்டின் ஒவ்வொரு கல்லிலும் மண்ணிலும் அவளது வியர்வையின் வாடையை நுகர முடியும்.

வாழ்க்கையில் கால் எடுத்து வைத்த ஆரம்பத்தில் இதயத்தில் பட்ட வலிய அடி-அதன் தீவிர பாதிப்பு-மனசுக்குள் உருவாகிக்கொண்ட சவால்....அதன் உத்வேகம்-பத்து வருஷ கால இடைவிடாத ஓயாத உழைப்பு.

எல்லாமாக சேர்ந்து இன்று ஒரு நல்ல பெரிய வீடு எழுந்து விட்டது!

தூறல் நின்று, மழை 'சட்டச்சட்ட'வென்று ஆவேசமாகச் சாடியது. மடத்தின் தகரக்கூரை பிரளய வருகை அறிவிப்பு போல அந்தச் 'சடசடப்பை' வாங்கி பெரிதாக எதிரொலித்தது.

மழை அச்சுறுத்தும்படி நீண்ட நேரம் நீடித்தது.

மேகங்களின் உச்சபட்ச தாக்குதலே இன்றுதான் என்பது போல பூமியை சர்வநாசம் செய்யும் நினைப்புடன் மழை இறங்கி விட்டதைப் போல ஆக்ரோஷமாக ரொம்ப நேரம் சடசடத்தது.

தெருவில் தண்ணீர் வெள்ளக் காடாக பெருக்கெடுத்தோடியது. மழை பெய்ய பெய்ய வானம் வெளி வாங்குவதற்குப் பதிலாக 'யானைக்கூட்டங்கள்'' மேலும் மேலும் காற்று முற்றுகையிட்டு இருண்டு கொண்டே வந்தது.

மழையை சபித்தார்கள், கூதலடித்தது. பீடி சுங்குகள் கண் விழித்தன. மழை ரௌத்ரமாக தாண்டவமாடியது.

சதசதவென்று ஈர மண் சுவர் சரியும் சப்தம் பக்கத்தில் கேட்டது. எல்லோரும் பயந்துபோய் எட்டிப் பார்த்தனர் பயனில்லாமல் நின்று கொண்டிருந்த ஒரு கட்டை மண் சுவர்தான் சரிந்திருந்தது.

ஆஸ்வாசப் பெருமூச்சுடன் மீண்டும் திரும்பினர்.

மீண்டும் கேலி கிண்டல்கள்; கவலை; சபித்தல்கள்; மழை நீடிப்பு பற்றிய வருத்தப் பரிமாறல்கள். இதை நிறுத்த வழி தெரியாத கையறு நிலைமை; கிழக்கே போகும் ரயிலில் மழையை நிறுத்தச் செய்யும் ஐதிகம் பற்றிய ஒரு இளைஞனின் கதை.

மழையும் நேரமும் நீண்டது.

அந்நேரம்.

''ஐயய்யோ ஐயய்யோ'' இதயத்தை அறுக்கும் பீதியுடன் பெருத்த ஒலமாக மேற்கிலிருந்து கேட்டது. கூட்டமே திடுக் கிட்டது.

'என்னவோ, ஏதோ' வென்று விழுந்தடித்துக் கொண்டு ஒடினர். மழையை பொருட்படுத்தாமல் நனைந்து கொண்டு துடிக்கும் நெஞ்சுடன் ஒடினர்.

மழைக்குப் பயந்து சிலர் தேங்கி நின்றனர். அதில் ராஜை யாவும் ஒருவன்.

''ஐயய்யோ ஐயய்யோ'' அந்த ஒலம் இன்னும் பெரிதாகி அவலமாக-ஒலித்தது. அந்தக் குரல்களில் ஒன்று, முத்துமாலை யின் குரலைப்போல ஒரு பிரமை! ராஜையாவின் மூளையில் ஒரு மின்னல்!

நெஞ்சு 'திக்' கென்றது. மழையைச் சாடி பாய்ந்து கொண்டு ஒரு புயலைப் போல ஒடினான். சப்தம் வந்த திசையை நோக்கி-

அவன் வீட்டில்தான் கூட்டம் அடைத்துக் கொண்டு நின் றது இதென்ன கொடுமை!

மழைத்துளிகள் கண்களில் விழுந்து மறைந்தது. வெறி யுடன் ஓடினான் அய்யோ!

கோபாலச்சுவர் இருபக்கமும் சாய்ந்து ஒரு மண் குன்றாக நனைந்து கிடக்க மரமும் ஒடுகளும் சரிந்து நொறுங்கிக் கிடக்க

முத்துமாலை விரிந்து கிடக்கும் தலையில் அடித்து அடித்து அழுக வீடே கிழித்துப் போடப்பட்ட ஒரு ஓவியமாக-பிய்த்து உதறப் பட்ட மலர் மாலையாக—வேங்கை மிருகத்தின் மூர்க்கத் தாக்கு தலுக்குப் பலியான ஒரு மனித உடலைப்போல அலங் கோலப்பட்டு நிற்க.

ராஜையாவுக்கு இது ஒரு அதிர்வாக தெரியவில்லை; ஒரு ஒரு இடியாக தாக்கியது. அலைபாய்ந்த விழிகளால் அனைத் தையும் வெறியுடன் பார்த்தான் பார்க்கப் பார்க்க கண்கள் விரிய-பந்து போல் ஏதோ ஒன்றுதிரண்டு வந்து நெஞ்சை அடைக்க ஹா...ஹா, அம்மா...'' அடி மனசைக் கிழித்துக் கொண்டு அலற—

காலுக்கடியில் பூமி நழுவிக் கொண்டது.

'நேற்று கட்டிய வீட்டை நாசப்படுத்திய மழையை சபித் துக்கொண்டு, இழப்பின் கொடூரம் உணர்ந்து துக்கித்துக் கொண்டிருந்த கூட்டம் அதிர்ச்சி தாங்காமல் நிலை குலைந்து மயங்கிச் சரிந்த ராஜையாவுக்கு முதல் சிகிச்சை செய்ய ஆரம் பித்தது.

'சோடா வாங்கிட்டு வாப்பா''

''சுக்கும் கருப்பட்டியும் வாங்கி வாய்யா''

''பச்சை வெங்காயம் கொண்டாம்மா''

ஒரு பெரியவர் கண்களை துடைத்துக் கொண்டே சொன்னர்:

''உடம்பும் மனசும் தெம்பாயிருந்தா, ஒம்பது வீடு கட்ட லாமே, உழைச்சு. இதெதுக்கு இவன் இப்படி மனசு தள ரணும்''

''அதென்ன அப்படி சொல்லிட்டீக. பத்து வருஷமா வம் பாடு பட்டு கட்டுன வீடு, பொசுக்குன்னு இடிஞ்சு விழுந்தா, யாரால்தான் தாங்க முடியும் ஆனு அதுக்கா வுட்டுடவா செய் வா....? இன்னும் கட்டத்தான் செய்வான். மழையை விட மனு ஷன் குறைஞ்சவன் இல்லையே!''

# சரியும் நியாயம்

'இப்போ என்ன செய்றது?'

இது பற்றிய சிந்தனையே மகேந்திரனின் மூளையில் சுழன்று கொண்டிருந்தது. ரொம்ப நேரமாக யோசித்து விட்டான்... முடிவுகள் குழப்பமாகவே இருக்கிறது. ஒரு தெளிவுக்கு வர முடியவில்லை... மனதில் தைரியம் இல்லை. இருட்டை விட்டு வெளிப்பட அச்சம்.

சூழ்நிலைகளின் தாக்குதலுக்கு உட்பட்டு சன்னம் சன்னமாக பின்வாங்கி, விளிம்புக்கு வந்தாகிவிட்டது. இனியும் ஓரடி பின் வாங்கினால்கூட அதல பாதாளம் ; முன்னேற வேண்டுமானால்... மனதில் தடைகள்... குடும்பத்தில் தடங்கல்கள்... சிக்கல்கள்...

''இப்போ என்ன செய்றது?''

உதடு காய்ந்து சொர சொரக்கிறது. அந்த உதட்டில் பீடியை வைத்து உறியும் போது...கீழ் உதட்டின் உள் பக்கம் எரிகிறது. எச்சில்கூட்டி புளிச்சென்று துப்பிக் கொண்டான். கண்கள் எந்தப் பொருளையும் பார்க்காமல் வெறுமனே 'பார்த்து'க் கொண்டிருக்கின்றன.

'இனியும் சிந்தனையிலேயே...நாட்களை நகர்த்த முடியாது. இன்னும் இரண்டே நாள்...அதுக்குள்ளே ஒரு முடிவுக்கு வந்தாகணும், அந்த முடிவு எப்படிப்பட்டதாக இருக்கும்...? எது

வாயிருந்தாலும்...முடிவு என்பது எனக்கோர் வீழ்ச்சிதான்! ஒன்னு குடும்பத்துலே குழப்பம், வீழ்ச்சி; அல்லது சமூக வாழ்க்கையோட உள்ள உறவுலே குழப்பம், வீழ்ச்சி !

இதென்ன....எனக்கு இப்படியோர் கதி! சமூக உறவும், குடும்பமும் முரண்பட்டு...அம்முரண்பாடு என்னையே நசுக்கி கூழாக்குகிறதே ! இம்முரண்பாடு எப்படி முளை விட்டது? இது முளைக்கிற காலத்துலே நா ஏன் விழிச்சுப் பார்க்கலே...ஹூம்...

'இப்போ நா என்ன செய்றது?'

பீடி அணைந்துவிட்டது. எரிச்சலுடன் தரையில் தேவைக்கும் அதிகமாக நசுக்கி தூளாக்கி மன எரிச்சலைக் காட்டிக் கொண்டான். சட்டைப் பைக்குள் மேலும் ஒரு பீடிக்காக துழாவினான். கிடைத்தது. வாயில் வைத்து...அதன் நுனியை பல்லினால் கடித்து வெளியே துப்பி விட்டு...தீப்பெட்டியைத் தேடினான். குச்சி இல்லை. தீப்பெட்டியை எரிச்சலுடன் வீசியெறிந்தான். தெருவில் நின்ற செவலைக் கோழி என்னவோ ஏதோவென்று பதறியடித்துக் கொண்டு சிறகடித்து ஓடியது. அவனுக்கு மனசு குறுகுறுத்தது.

ஒன்றிரண்டு கல்லைப் பொறுக்கி...ஒவ்வொரு கல்லையும் ஒவ்வொரு கோழி மீதும் வீசி எறிந்தான். அவை ஓடியது...... இவனுக்கு ரசிக்கவில்லை.

.......சென்ற மாதம் சம்பள தினம். பேக்டரி ஆபிஸில் கையெழுத்துப் போட்டு விட்டு, சம்பளக் கவரை பெற்றுக் கொண்டு வந்தான்.

ஆபிசுக்கு வெளியே மரத்தடியில் சங்கச் செயலாளரும் இன்னும் மூவரும் ஏதோ வசூல் செய்து கொண்டிருந்தனர். சந்தா. வசூலா நன்கொடை வசூலா ?

இந்த மாதிரி வசூலிலெல்லாம் தான் பங்கெடுத்துக் கொண்ட முந்தைய நாட்களை நினைத்துக் கொண்டான். அதற்காக சம்பளமில்லாத லீவுகள் எடுத்துக் கொள்வான்

அந்த சம்பள இழப்புகள் பூக்கச் செய்த பெருமிதத்தின் இனிமை....இன்னும் நெஞ்சில் ருசி காட்டுகிறது.

அந்த மரத்தைக் கடக்க முயன்றபோது மகேந்திரனை ஒரு குரல் நிறுத்தியது. ''தோழர் மகேந்திரன்...எங்க போறீங்க? சந்தா குடுங்க....''

மகேந்திரன் தயங்கினான்....அந்த தயக்கம் அவனுக்கே கூச்சமாக இருந்தது.

''என்ன தயக்கம்...? உங்களுக்கு எத்தினி மாசம் பாக்கி.... மூனுமாசமா? குடுங்க...''

''இப்ப வேண்டாம்னு பார்க்கறேன்'' வார்த்தைகள் உதடுகளில் மட்டுமே பிறந்து வெளிப்பட்டன.

ஏன், வேண்டாம்? அடுத்த மாசம் தாரீங்களா?''

''இல்லே வேண்டாம்...இனிமே நா சந்தா குடுக்கப் போறதில்லே''

''வேற சங்கத்துக்குப் போறீங்களா?'' செயலாளர் முகத்தில் ஒரு நிழல் கருப்பாக விழுந்தது. கண்ணில் கோபம் மின்னியது.

''எந்த சங்கமும் வேண்டாம்........''

''என்ன காரணம்...? நீங்க நம்ம சங்கத்துலே நிர்வாகக் கமிட்டி மெம்பர்...உங்களுக்கு யூனியன் மேலே ஏதாச்சும் கோபமா? கோபம்னா சொல்லுங்க பேசித் தீர்த்துக் கொள்வோம்...''

''அதுக்கில்லே....அதெல்லாம் பெறகு பார்த்துக்குவோம்... இப்ப எனக்கு வேண்டாம்''

இதைச் சொல்லி முடிப்பதற்குள் மகேந்திரன் தவித்துப் போனான். ஏதோ ஒரு நிர்ப்பந்தம் அவனுக்கே எதிராக அவனை பேச வைப்பதை உணர்ந்து...உள்ளுக்குள் புழுங்கினான்.

செயலாளரின் பார்வையில் தெரிந்த கத்தி...அவனை அறுத்தது. நிர்வாணப்படுத்தப்பட்ட மன அவஸ்தை. நேருக்கு நேராக சந்திக்க முடியாமல் பார்வையைத் தவிர்த்தான். மனசு வெட்கிக் கூசியது. கூனிக் குறுகினான்.

முள்ளின் மீது நிற்பது போன்ற தர்மசங்கட உணர்வில் நெளிந்தான். நழுவி ஓடிவிடமாட்டோமா....தலைதெறிக்க ஓடி விடமட்டோமா....என்று மனக்சுகுள் ஏங்கினான்.

செயலாளர் முகத்தின் ஏளனம் அவனை வதைத்தது.

''சரி போங்க.......''

நடந்தான். நடையில் ஒரு சோர்வு. பஞ்சத்துக்கு திருடி விட்டு, கையும் மெய்யுமாய் பிடிபட்டு, அடிபட்டவனைப் போல மனம் அவமானப்பட்டு கசந்தது.

கோழிகளை குறிக்கோள் எதுவுமில்லாமல் விரட்டிக் கொண்டிருந்த மகேந்திரனின் நெஞ்சில் நினைவுகள் நெளிந்தன.

மேகத்தின் முதுகை விட்டு விலகிய சூரியன், வெயிலின் உஷ்ணத்தை விதைத்தான். கிராமத்தின் வீதி மனிதவாடை எதுவுமில்லாமல் வெறுமையாக இருந்தது. இந்நேரம் காட்டில் இருப்பார்கள்...

இவனுக்கு இப்போது தனிமையே ஒரு தொல்லையாகி விட்டது. இதயத்தின் ஆழத்தில் புதைந்து கிடந்த அவலமான நினைவுகள், உயிர் பெற்று பூதாகரமாக்கிக் கொண்டே வருகின்றன...

இந்தக் கிராமத்தில் முதன் முதலாக கொடியேற்றியதை நினைத்துப் பார்த்தான். அன்று...கொடி தைக்கும் செலவை தானே ஏற்றுக் கொண்டதை நினைத்தான்...

தானே முன்னின்று கொடியேற்றியதையும்...கூட இருந்த தோழர்கள் கோஷித்து ஆனந்தமாக கை தட்டியதையும்... சாதிக்க முடியாத மகத்தான காரியத்தை சாதித்துவிட்ட பெருமித உணர்வு நெஞ்சில் பொங்கி வழிந்ததையும்...

''உயரட்டும்...உயரட்டும்

வானில் செங்கொடி உயரட்டும்....

மலரட்டும் மலரட்டும்...

சோசலிசம் பூமியில் மலரட்டும்...''

அன்றைய உற்சாகக் கோஷங்கள் இன்னும் மனதில் ஒலிப்பது போன்ற பிரமை! அன்று மனதில் பொங்கிப் பூரித்த சந்தோஷ உணர்வுகள், அதன் குளுமை மாருமல் இன்னும் நெஞ்சுக்குள் தவழ்கிறபோது...இன்றைய மனசின் வெறுமை... நெருப்பாக தகிக்கிறது.

தனக்குரிய இடத்தைவிட்டு அநியாயமாக தொலை தூரத்துக்கு தூக்கியெறியப்பட்டு....எழ முடியாமல் தவிப்பதை உணர்கின்ருன்...

கல்யாணத்துக் முன்பு வரை—

அவன் அப்படித்தானே இருந்தான். தொழிற் சங்கத்தில் முன்னணி ஊழியனுக இருந்தானே! சங்கத்துக்காக உழைப்பதில் எத்தனை ஆர்வம் கொண்டிருந்தான். தனது நியாயங்களை—லட்சியங்களை மனிதர்கள் குழுமியிருக்கும் இடத்திலெல்லாம் பேசி...விவாதித்து...தர்க்கித்து...சண்டை கூட போடுவதில்....எத்தனை சந்தோஷப்பட்டான்...

தான் வாழும் கிராமத்திலும் தனது நியாயத்தை பரப்பி... அதன் கிளையாக ஒரு கொடியையும் ஏற்றி வைத்தானே...

அந்த ஆர்வம்...உத்வேகம் எல்லாம் இப்போது எங்கே போய் புதைந்து போய்விட்டது...? புதைந்து மட்கி மண்ணோடு மண்ணுகிவிட்டது?

இதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்தான் !

கல்யாணம் !—

''எப்பா....எப்பா...வருவியாம்...''

நான்கு வயதிருக்கும்—நல்லசிவப்பு—ரொம்ப மெலிவு—முகத்தில் மலர்ச்சியின்மை...ஒரு வறட்சி—மூத்தவன் நின்றிருந்தான்.

மகேந்திரன் திரும்பினுன். வெயில் கண்ணை கூசச் செய்தது.

''என்னடா ?''

''அம்மா கூப்ட்டா''

''போ...நாவாரேன்''

''அம்மா கூப்ட்டா...''

''சரிடா....போடா...பெரிய அம்மா...''

சிறுவன் சிணுங்கிக் கொண்டே நகன்ருன். மகேந்திரன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். மனம் வீட்டுக்குப் போனது.

'இந்நேரம் கமலம் என்ன பண்ணிக்கிட்டிருப்பா......சமையலை முடிச்சிருப்பாளோ இல்லே. தலைவலின்னு...கால் கை உளைச்சல்னு படுத்திருப்பாளோ.. !

ஏனே தெரியவில்லை...5 வருஷத்திற்கு பிறகு இப்போது கமலத்தை நினைக்கிறபோது 'எப்படியோ' இருக்கிறது! 'எப்படியோன்னு... கசப்பா? சலிப்பா? எரிச்சலா? தெரியலே. இனம் புரியாத குருட்டுக் கோபம் நெஞ்சுக்குள் முட்டுகிறது.

இவளாலே...நா எம்புட்டு கேவலமாயிட்டேன். சே! நாலு பேரு பாத்து கைகொட்டி சிரிக்காங்களே! பொண்டாட்டி முந் தானைக்கு பயப்படுற சுத்த வீரன்னு கண்ணுலேயே கிண்டல் பண்ருங்களே...இந்தளவுக்கு இறங்கிப்போக என்ஞலே எப்படி முடிஞ்சது! அந்தளவுக்கா' நாபுத்தி மழுங்கிப் போனேன்!...

ஆஞ, அவளும் நல்லவாதான்! ஒரு மனுஷஞகக்கூட மதிக்காத இந்த ஊர்க்காரங்க மத்தியிலே...என்னை புருஷஞ கவே ஏத்துக்கிட்டு மதிப்போட குடும்பம் நடத்துருளே...'

வீட்டுக்குப் போகலாம் போலிருந்தது கமலம் நெஞ்சுக்குள் அழைத்தாள், பீடி பத்தவைக்க வேண்டும்போல மார்புக்குள் 'பக பக' வென்ற உணர்வு.

அவன் வீட்டை நோக்கி நடந்தான். இப்போதும் அந்தக் கேள்வி விசுவரூபமெடுத்து, மனம் கனத்தது.

''இப்போ நா என்ன செய்றது?''

கமலம் அடுக்களைப் புகையின் முற்றுகைக்குள் சிக்கித் திணறிக் கொண்டிருந்தாள். வாய்க்குள் புகை பாய்ந்து நெஞ்சை சுரீரிட்டது. செருமினுள். செருமலே இருமலாகி அவஸ்தைப்படுத்தியது.

தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த பிள்ளை 'சிலு சிலு' வென்று நீரை விட்டுவிட்டு, லேசாக திமிறி...சிணுங்கி...அழ ஆரம்பித்துவிட்டது அவளுக்கு சங்கடமாக இருந்தது.

'புள்ளையைப் பாக்க வா' சமையலை கவனிக்கவா?!

''இந்தச் சனியனேட பெரிய தொல்லையா போச்சு... நேரம் காலம் தெரியாமெ தொண்டையை தொறக்கு பாரு... என்ன சத்தம்....ஜீவனுக்குத் தக்கவா இரையுது...''

சள்ளையுடன் முணு முணுத்துக் கொண்ட கமலம்...

''ஏலே...ஏலே...'' கோபத்துடன் கத்தினாள், மூத்தவன் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தவன்...திடுக்கிட்டு ஓடி வந்தான்.

''என்னம்மா...''

''போயி... உங்கப்பாவை கூட்டிட்டு வா...''

அவன் போய் விட்டான். தொட்டிலில் குழந்தையின் கத றல் அவள் நெஞ்சை என்னவோ செய்தது. அடுப்பும்...புகை யும்...அவளை எழவிடாமல் தடுத்தது.

''நம்ம பொழைப்புக்கு என்னிக்குத்தான் நல்ல கால மோ...'' என்று சம்பந்தமில்லாமல் அங்கலாய்த்துக் கொண்டாள்.

இந்த மனுஷனுக்கும் ஒரு பொறுப்பு கிடையாது...பொம் பளை ஒத்தையிலே சீரழியிருளே...கைக்கு உதவியாரெண்டு காரியம் பண்ணுவோம்னு பக்கத்துலே நிக்கிரா? அது இல்லே எப்பப் பாரு...பேச்சு, பேப்பர் வாசிப்பு தான்...

பேப்பர் வாசிச்சு வாசிச்சு...என்ன பெரீசா கிழிக்க போரு? உண்டான வேலையை பாத்துக் கிட்டு இருக்கு வேண்டியது தானே! தெருக் காட்டிலேயே ஒரு ஆம்பளைக்கு என்ன வேலை? பேசிப் பேசிப் பொழுது போனது தான் மிச்சம் உப்புக்கல்லுக்கூட ஆகாத பேச்சு...

உஷ்ணத்துடன் ஓடிக்கொண்டிருந்த அவள் நினைவு 'சடக்' கென்று நின்றது. தான் அநியாயமாக சிந்தித்து விட்டதாக ஒரு சுய விமர்சனம் மனசில் படவே...நிதானமாகி...நிதானமாக பெருமூச்சுவிட்டுக் கொண்டாள்.

'அவரைக் குற்றம் சொல்றதுவும் பாவம்...'என்று நினைத் துக் கொண்டாள்.

'இந்த அஞ்சு வருஷத்திலே...?

அவள் நினைவில் திடுமென தன்து கல்யாண காலம் வந்தது.

அப்போது எவ்வளவு சந்தோஷமாக இருந்தாள்! இதெல்லாம் தனக்குக் கிடைக்கக்கூடிய மாப்பிள்ளையா? யார் செய்த புண்ணியமோ—நமக்கு இப்படியோர் வாழ்க்கை அமையப் போகிறது என்று நிறையவே பெருமிதப்பட்டுப் போனாள்...

சாதாரண ஏழைக் குடும்பம். அப்பா எங்கோ தொலைதூர நகரத்தில் கணக்கெழுதிக் கொண்டிருக்கிறார் இங்கு அம்மாவும் தானும் கூலி வேலை செய்து கஷ்டஜீவனம் நடத்திக் கொண்டிருந்தசமயம்.

இருக்கிற துண்டு நிலமும் எந்த விளைச்சலையும் எதிர் பார்க்க முடியாத வானம் பார்த்த பூமி. இப்படி இருந்த தனக்கு....

''நகை நட்டெல்லாம் வேண்டாம்....எங்களுக்கு பொண்ணு தான் வேணும்... அதுவும் தாயில்லாக் குடும்பத்துலே பூசல் இல்லாமெ நல்லபடியா-லட்சணமா நடத்திப் போனா போதும்'' என்று கேட்டபோது—

தனக்கும் 'திருமணம் ஆகுமா....'நகை நட்டுக்கு எங்கே போவது? எப்போ சம்பாரித்து....எப்போ கல்யாணமாவது?என்றெல்லாம் ஏங்கிப் போய் கிடந்த அந்த ஏழைக் குடும்பம், எவ்வளவு அக மகிழ்ந்து போயிற்று!

வகையான பருவத்திற்கு, பெய்த மழையில் நனைந்து குளிர்ந்து போன வானம் பார்த்த பூமிபோல!

அதுவும் எப்படிப்பட்ட மாப்பிள்ளை...பேக்டரியில் வேலை.... 400க்கு மேலே சம்பளம்....இந்தக் கிராமத்தில் இந்தச் சம்பளம் ரொம்ப உசத்திதான். மத்யதர விவசாயிகள் கூட பொருமைப்படக் கூடிய அளவுக்கு பெரியசம்பளம்தான்...

தனக்கும் இப்படிப்பட்ட வாழ்க்கையா...

அந்த வயதின் கனவுகளுக்கேற்ப அமைந்துவிட்ட வாழ்வினல் மனசில் ஊறிப்பாய்ந்த இன்ப ஊற்றுகள்....

வண்ண வண்ணமாய் பூத்துச்'' சொறிந்த ஆனந்த புஷ்பங்கள்....

இந்த இன்பத் திகட்டலே.... அவள் குணத்தில் ஒரு மாறுதலை நிகழ்த்த ஆரம்பித்துவிட்டது. 'எந்தப் பெண்ணுக்கும் கிடையாத வாழ்வு, தனக்கு' என்ற உணர்வின் திகட்டல்... அவளை 'எவரும் தனக்கு ஈடில்லை' என்று சிந்திக்கச் செய்ய வைத்துவிட்டது.

எல்லாரையும்விட தான் ஒருபடி மேல் என்ற சிந்தனையே கொஞ்சங் கொஞ்சமாக அவளை அந்நியப்படுத்த ஆரம்பித்து விட்டது. சமுத்திரத்திலிருந்து தனித்தெழுந்துவிட்ட ஒரு தனித் தீவாக அவள் மனம் ஆகிவிட்டது.

மாமாவை மதிக்கவில்லை. கொழுந்தன்களை அலட்சியப் படுத்தினாள். குடும்பத்தில் பூசல்....ஆறே மாதத்தில் தனிக் குடித்தனமாகி விட்டாள்....

ஆயிற்று....இந்த அஞ்சு வருஷத்துலே....எத்தனையோ அனுபவங்கள்...ஆயினும் அவர்கள் தாம்பத்யத்தில் தென்றல் மட்டுமே வீசியது...

என்ன நடந்த போதிலும்....என்ன செய்த போதிலும் மகேந்திரன் ஒரு நாளாவது அவளை கை நீட்டி அடித்திருப் பானா...? அல்லது மனம் நோகும்படி கடிந்தாவது பேசியிருப் பானா? ஊஹூம்!

எவ்வளவோ விட்டு கொடுத்திருக்கிறானே, விட்டுக் கொடுக் கிறபோது மனசுக்குள் உளைச்சல் இருந்தாலும்... அதுகண்டு கமலம் முகம் மலர்கிறது என்பதைக் கண்ணுற்று, அந்த மலர்ச்சி யில் தன் உள்மனக் கசப்பை விழுங்கிக்கொண்டு அகமகிழ்ந் திருக்கின்றானே....

'அவரையும் குத்தம் சொல்றது பாவம்....' என்று வருந்து வதுபோல கமலம் மீண்டும் நினைத்துக் கொண்டாள். தொட்டில் தானாகவே அடங்கி அமைதி கொண்டுவிட்டது.

சமையலையும் முடித்துவிட்டாள். வீட்டைப் பெருக்கி சுத்தப்படுத்திவிட்டு வட்டில்களை கழுவி வைத்துவிட்டு...' வேர்த்து விறுவிறுத்துக்கிடந்த முகத்தை அலம்பி..., லேசாக பௌடர் அப்பிக்கொண்டு காத்திருந்தாள்...

'நேரமாச்சே... பசி தாங்கமாட்டாரே.... ஏன் இன்னும் காணலே....' என்று யோசித்துக் கொண்டாள்.

வாசலுக்கு வந்தாள். வீதியின் முடிவுவரை கண்ணை ஓட விட்டாள். ஓரிரண்டு மனிதர்கள்.... (அதோ அந்த மச்சான்' கஷ்டம்னு சொல்லி 60 ரூபாய் கைமாற்று வாங்கிப்போய் மூன்றுமாதம் ஆகிவிட்டது. இன்னும் வரவில்லை. இவர்களுக் கெல்லாம் கொடுத்தால் திரும்பவா செய்யும்? படித்து படித்துச் சொன்னாலும் இவர் புத்திக்கு எட்டமாட்டேன் என்கிறதே) அதோ செவலைநாய்... மேய்ந்துவிட்டு திரும்பும் எருமைகள்... ஆனால் அவரைக் காணோம்.

'அவரை குத்தம் சொல்றது ஞாயமில்லே .. இவரைப் போல புருஷன் எவளுக்கு அமையும்? எவ்வளவு பொறுத்துப் போறாரு.... எம்பேச்சை எப்படியெல்லாம் மதிக்கிறாரு.... எனக் காக விட்டுக் குடுக்குறாரே.... இப்படி எந்த புருஷன் இருப்பான்? 'பொம்பளை பேச்சை கேக்குறவனா, நா' என்று அலட்சியப் படுத்தி விடுவார்களே....

அப்படியெல்லாம் ஒரு நாளாச்சும் தூக்கியெறிஞ்சி பேசின தில்லையே.... என் வார்த்தையை மதிச்சு ரொம்பநாள் தயங்கு னாலும்.... சங்கம் கட்சியின்னு அலையுறதை நிறுத்திட்டாரே, நா சொல்றதுக்காக விட்டுக்கொடுக்க முடியாமே தயங்கும் போதுகூட நா லேசா கண்ணீர்விட்டு கலங்கிட்டாபோதுமே.... அப்படியே உருகிப் போயிடுவாரே....! இளகிப்போற மனுஷன். இந்த இளகின மனசைக் கண்டுக்கிட்டுத் தானே...ஒவ்வொருத் தனும் இவருகிட்டே கண்ணைக்கசக்கி 100, 200 என்று கை மாற்று வாங்கிக்கிட்டுப் போயிடுறாங்க...

கை நிறைய சம்பளம் வாங்கியும் 'நாளைக்கு வேணும்'னு ரெண்டாயிரம் மூவாயிரம்கூட சேத்து வைக்க முடியலியே...

இவரு. இதைப்பத்தியெல்லாம் எப்பத்தான் புரிஞ்சிக்கிடப் போரூரு...நாமெ தான் சொல்லணும்...கொஞ்சம் கண்டிச்சுச் சொல்லணும்...

இரக்கப்பட்டுக் கொடுத்தாலும் நல்ல மதிப்பா கெடைக் குது? 'அவளா, மண்டைக்கனம் ஏறுனவளாச்சே' என்றல்லவா முதுகுக்குப் பின்னலே பழிப்புக்காட்டிப் பேசிட்டுப் போருங்க!

இந்த ஊரில எந்த ஒரு கழுதைக்கும், நாங்க இப்படி நல்லா வாழ்றது பொறுக்கவே மாட்டேங்குது...பொருமை யிலே வேந்துசாகுதுக... 'இவளுக்கு இப்படியொருவாழ்க்கை யா'ன்னு மனசுக்குள்ளேயே வெகுதுக. அவுக பொழைப்பு, காடு கரைன்னு நெறைய இருந்தாலும் விளைய மாட்டேங்குது. விளைஞ்சாலும் விலையிருக்காது. கைக்கு எட்டுனு வாய்க்கு எட் டாது. வீடு பூரா கடன் தொல்லே. அதுக்கென்ன செய்றது!

அவுகவுக மனசுக்கேத்த வாழ்க்கைதானே கிடைக்கும்! பொருமைப்பட்டு புலம்பி ஆகப் போறது என்னவாம்! இந்தத் தெருவுலே இருக்குற பொம்பளேகளுக்கெல்லாம்... நான்னு தீயாயிருக்கும். கண்டால், மூஞ்சை மூனுவெட்டு வெட்டி திருப்பிக்கிடுதுக...சிறு சிறு காரணத்துக்காக...தெனம் சண் டைக்கு வருவாக...வந்துட்டுப் போகட்டுமே! இந்த வக்கத்துப் போன கழுதைகளோட உறவு இல்லேன்னுதான் நான் அழுகு றேனுக்கும்! இவுக சிநேகம் இல்லேன்னு...ஏ வீட்டிலே அடுப்பு புகையாதோ....போக்கத்த கழுதைகளே போகச் சொல்லு...

—என்ன இன்னும் இவரைக் காணலியே....கூப்பிடப்போன அந்தப் பயளேயும் காணும்...மதியம் திரும்பி மேற்கே சாய்ஞ் சிருச்சு பொழுது...இன்னுமா...பசிக்கலே....... ?

அவள் மீண்டும் வீதியின் முடிவு வரை கண்களே ஓட விட் டாள்......

மனசுக்குள் கமலம் அழைத்தாலும்...மனதில் கனத்து நின்ற அந்தக் கேள்வி—இப்போ என்ன செய்றது—அவனது கால்களேப் பிடித்திருந்தது.

வீட்டுக்கு இந்த சமயத்தில் போகக்கூடாது. இருக்கிற மனநிலையிலே....நிம்மதியாயிருக்க முடியாது...கமலம் வழக்கம் போல 'அதுஇது'னு சொல்ல ஆரம்பிச்சா....இப்ப தாங்கிக் கொள்ளமுடியாது...ஒரேடியா வெடிச்சிடுவேன்......கோபத்தில் ஏதாவது இசகுபிசகா நடந்தாலும் நடந்துடும்....ஊஹும்.... வீட்டுக்கு இந்நேரம் போகக்கூடாது....எங்கே போகலாம்? டீக்கடை பக்கம் போகலாமா? பேப்பர்கூட படிக்க முடியாதே.... மனசு ஒட்டாது. மீண்டும் அதே கேள்வி, 'இப்ப என்ன......'

ஐந்து வருஷத்துக்கு முன்பு—பேக்டரியில் இதே மாதிரி ஸ்டிரைக் நடந்த போது...நான் எவ்வளவு இரண்டறப் பிணைந்து வேலைகள் செய்தேன் !

ஸ்டிரைக்குக்கு முன்பு நடந்த பேச்சு வார்த்தைகளின் அது பற்றிய விவாதம் நியாயமான முடிவுகள் வராததால் ஸ்டிரைக் நடத்துவதா, எந்தத் தேதியில் துவங்குவது...எப்படி நடத்துவது என்பது பற்றிய விவாதங்கள் எல்லாம் அவனில்லா மல் நடந்ததில்லையே !

அந்தப் போராட்டத்தை நடத்திய போது....அதற்காக கிராமம் கிராமமாக சைக்கிளில் அலைந்து ஆதரவுப் பிரச்சாரம் செய்தது...சொந்தக் கிராமத்துக்குக்கூட வராமல் அந்த இருபது நாட்கள் முழுவதும் ஆலையிலேயே கிடப்பாய்க் கிடந் தது....சோறு தண்ணீர் பாராமல் அலைந்தது....சண்டை சச்சரவு வந்த போதிலும்கூட விளைவைப் பற்றிய கவலையின்றி துணிந்து முன்னின்ற அனுபவங்கள்....

கருங்காலிகள் ஆலைக்குள் நுழைந்துவிடக்கூடாதே என்பதற்காக ஆலைவாசலில் சக தொழிலாளர்களுடன் இரவுக் காவல் புரிந்த பொழுதுகள்....ஆயுதம் தரித்த காக்கி மனிதர்களின் நெருக்கமான உலாவலுக்கு மத்தியில், நெஞ்சுயர்த்தித் திரிந்த நினைவுகள்....

மறியல் நடத்தி லாரி லாரியாக தொழிலாளர்கள் சிறைக் குச் சென்றபோது.... ''நானும் நாளைக் காலை மறியல்லே கலந்துக்கிடுறேன்''.

''வேண்டாம் மகேந்திரன். வெளியேயிருந்து வேலைகளை கவனிக்க பொறுப்பான காம்ரேட்ஸ் வேணும். நீங்க இருங்க...''

செயலாளர் இப்படிப் பதிலிறுத்திய போது....நெஞ்சு எவ்வளவு நிமிர்ந்தது...அடேயப்பா தான் எத்தனை உயர்வாக மதிக்கப்படுகிறோம்? பொறுப்பான காம்ரேடாமே!

அந்த மதிப்பீட்டுக்கு சொந்தக்காரனாக இருந்த நான்' இப்போ என்ன செய்றது...?

உல்லாசமாக வான விதானத்தில் சிறகடித்துத் திரிந்த பறவை குண்டடிபட்டது போல மனம் திடும்மென சோர்வுற்றது.

அந்த மதிப்பீட்டின் உயரத்திலிருந்து எப்போது சரிய ஆரம்பித்தேன்? எப்படி சரிய ஆரம்பித்தேன்?.....அந்தச் சரிவு எப்படி சாத்தியமாயிற்று? அன்று சந்தா தரத் தயங்கி நழுவிய சமயத்தில் செயலாளர் பார்த்த பார்வை—

இப்போதும் நெஞ்சை ஊடுருவிப் பாய்ந்து கிழிப்பது போன்ற பிரமை!

தான் எவ்வளவு நழுவி வந்து விட்டோம்... இந்தச் சறுக்கல்....என் மனதுக்கு என்றும் உடன்பாடானதல்லவே! ஆனாலும் நழுவினேன்! மனசுக்கு கசப்பாக இருந்த போதிலும்— கசப்பை விழுங்கிக் கொண்டு....ஒரு பேடியைப் போல சரிந்தேனே! அது எப்படி சாத்யமாயிற்று?!

நான் விரும்பாத ஒன்றைச் செய்யும் நிர்ப்பந்தத்திற்கு நான் எப்படி ஆளானேன்? அந்த நிர்ப்பந்தம் எது? யார்?

கமலம்! கமலம்தான்....அவளேதான்! அந்த பொட்டைக் கழுதையேதான்!

'ஓ'வென்று கோபத்தில் கத்த வேண்டும் போலிருந்தது. வெடித்துப் போனான். திடுமென்று மண்டைக்குள் ஒரு பளீர்!

பளாரென்று கன்னத்தில் அறைந்தது போலிருந்தது அந்த நினைவுப் பளீர்....(....மடையா....சொல்றவா சொல்ரு...... உனக்கு சொந்தப் புத்தி எங்கே போச்சு? கேப்பையிலே நெய் வடியுதுன்னு சொன்னு...கேக்குறவனுக்கு மதி எங்கே போச்சு? கிணத்துலே விழுந்து செத்துப் போன்னு....விழுந்திடுவீயா?'

'அதானே, நா எப்படி அந்த நிர்ப்பந்தத்திற்குப் பலியானேன்! எப்படி பணிந்தேன்....ஒவ்வொரு சரிவு நிகழும் சமயத்திலும் நான் பிரக்ஞையுடன்தானே இருந்தேன் அது பற்றிய மறுப்பும் என் மனதுக்குள் குமுறிக் கொண்டேயிருந்ததே! அப்புறமும் பணிந்தேனே....சரிந்தேனே....அது எப்படி சாத்யமாயிற்று?

கமலத்தின் வார்த்தைகளை ஏன் மதிச்சேன்.......? மீறமுடியாத வரம்பாக—வேதமாக—அவள் பேச்சுக்கு ஏன் மரியாதை கொடுத்தேன்....?

மகேந்திரன் நினைவு, காரணத்தை—மர்மத்தை—தேடி இருட்டுக்குள் கண்ணை மூடிக் கொண்டு அலைந்தது.

கடையில் வாங்கிய தீப் பெட்டியை நகத்தால் கீறி உடைத்தான். விரல் பதிக்கவிடாமல் குச்சிகளின் ஒற்றுமை எதிர்த்தது. எப்படியோ ஒரு குச்சியை உருவினான்...பீடி நெருப்பில் விழித்துக் கொள்ள....புகை நெஞ்சுக்குள் இதமாகப் பரவியது. சுகானுபவத்துடன் நாசிவழியே கசியவிட்டான்....

'என்ன காரணம்...?' மீண்டும் சிந்தனையின் குருட்டுப் பயணம்.

அவனது கல்யாண காலம் நினைவுக்கு வந்தது. மற்றவர்களைப் போலல்லாமல் என் கல்யாண காலம் மட்டும் ஏன் அப்படி கேவலமாக இருந்தது?

இத்தனைக்கும் நல்ல சம்பளம்...உத்தரவாதமான வேலை. கொஞ்சம் நிலம். ஊரில் குடும்பத்துக்கு மரியாதை. இத்தனையிருந்தும் இந்த ஊரில் ஏன் பெண்தர மறுத்தார்கள்? பெண் கேட்ட இடத்திலெல்லாம் ரொம்பச் சுலபமாக மறுத்தார்களே!

அப்போது என் மனம் எவ்வளவு வதைபட்டது! அவமானம் தாங்காமல் உள்ளுக்குள்ளேயே வெந்து பஸ்பமாகிக் கொண் டிருந்தேனே!

பெண் பார்த்துவிட்டு, மறுத்துவிட்டுப் போவதை—பெண்ணை அவமதிப்பதை—ஒரு சமூக வழக்கமாக—சாதாரண மாக—எடுத்துக் கொள்ள முடிகிறது. ஆனால் ஒரு ஆணுக்கு இத்தகையதோர் இழிநிலை சம்பவிக்கும்போது...

அந்த அவலம், என்னை ரொம்பக் கிழித்துவிட்டது. ஊரார் முழுதும் என்னைப் பார்த்து கைகொட்டி நகைப்பது போன்ற பயங்கரப் பிரமை...மனதை அவஸ்தைப்படுத்திக் கொண்டேயிருந்தது.

அப்போது தான் - பக்கத்துக் கிராமத்திலிருந்த கமலம் பற்றிய தகவல் கிடைத்து...நாள் பார்த்து...பெண் பார்க்கச் சென்று...

'மனுஷனாககூட மதிக்காத இந்த ஊரார் மத்தியிலே, என்னை புருஷனா ஏத்துக்கிட்டு மதிப்போட வாழ்ந்து காட் டினாள்...! அது ஒன்றுதான். என்மனதில் அவள் மீது இத்தனை மதிப்பை—காதலை – காட்டச் செய்ததா ?

செருக்குடன் உலாவரும் வாலிபப் பருவத்தில், எவனுக்கும் ஏற்படாத கொடூர அவமதிப்பு ஏன் நெஞ்சை காயப்படுத்தி—சீழ் வடியச் செய்து—நித்யரணத்தில் துடிக்க வைத்ததே.... அந்த ரணத்துக்கு மருந்தாகி — ஆறுதலாகி—சுகமாகி—சந் தோச மலராகி நிமிர வைத்தாளே...

அதனால்தான் கமலத்தை தேவதையாக பாவித்து பூஜிக்க ஆரம்பித்து விட்டேனே...! அவள் வார்த்தைகளுக்கு கட்டுப்பட ஆரம்பித்து விட்டேனே !

அன்பைப் பொழிந்து இன்பப்படுத்த வேண்டிய நானே, ஆறுதலுக்காக ஏங்கித் தவித்து—அன்பு தந்த அவளை அதீத மாக அடிபணிய முனைந்துவிட்டேனே !

மகேந்திரனின் மனசிற்குள் வைகறை புலரத் தொடங்கி விட்டது. சிந்தனையின் குருட்டுப் பயணம் நின்று விட்டது. பளிச் சென்று பிரவாகத்தில்...எல்லாமே துல்லியமாக புலப்பட—

அதெல்லாம் சரி...இப்போ என்ன செய்றது? சூழ்நிலைகளின் தாக்குதலுக்கு உட்பட்டு சன்னஞ் சன்னமாக பின் வாங்கி, விளிம்புக்கு வந்தாகி விட்டது. இனி ஓரடி பின் வாங்கினாலும் அதல பாதாளம்; முன்னேற வேண்டுமானால்..,மனதில் தடைகள்...குடும்பத்தில் தடங்கல்கள், சிக்கல்கள். .

இதை எப்படி சமாளிப்பது? என்ன செய்றது...?

தேநீர் விடுதி வழக்கம் போல மதியம் இரண்டு மணிக்கு உயிர் பெறத் துவங்கியது. உள்ளே மனிதக் கசகசப்புகள் ஊர் விவகாரம், அரசியல்...பழைய சம்பவ விசாரணைகள்.,.

மகேந்திரனுக்கு வயிற்றில் என்னவோ ஒரு கபகபப்பு வீட்டுக்குப் போக விருப்பமில்லை.

''ஒரு சாயா போடுப்பா''?

ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டான். மனதிற்குள் நிகழ்ந்த உலைச்சல், அவனை எதையும் கவனிக்கவிட மறுத்தது. ஆழ்ந்த யோசனையுடன் மீண்டும் ஒரு பீடி பற்ற வைத்துக் கொண்டான். உதடு சுட்டது.

பத்து நாட்களுக்கு முன்பு—

ஷிப்டு முடிந்து கிராமத்துக்கு திரும்பிய ஒரு தொழிலாளி நடுவழியில் பாம்பு கடித்து இறந்துவிட்டான். செய்தி கிடைத்ததும் தொழிலாளர்கள் பரபரத்தனர்.

''பிரேதத்தை கொண்டு செல்ல வேண்டும்'' என்றனர்.

''ஆலைக்குள் விபத்து நடந்தால்தான் கம்பெனி வேன் தரப்படும்'' என்று மனிதாபிமான மற்ற முறையில் சட்ட விதியை நிர்வாகம் பேசியது.

ஆத்திரமுற்ற தொழிலாளர்கள் வேலையை அப்படி அப்படியே போட்டபடி ஜி. எம். ஆபிஸ்முன் திரண்டு.... ஆவேசக் கூச்சல் போட . . ¸ . . வேன் கிடைத்தது.

பிரேதம் கிராமம் சென்று . . . . தொழிலாளர்கள் அனைவரும் பங்கெடுக்க இறுதியடக்கம் செய்யப்பட்டது. இரண்டு ஷிப்ட் நேரம் வேலையில்லாமல் வெறுமையாக நகர—நிர்வாகம்.

''உற்பத்தி பாதிப்பு, ஆகவே சம்பளம் பிடிக்கப்படும்'' என்று நோட்டீஸ் ஒட்டியது. தொழிலாளர்கள் கொதிநிலை யடைந்து விட்டனர்.

பறிபோகும் சம்பளத்தைக்கூட பெரிதாக நினைக்கவில்லை— ஒரு தொழிலாளியின் மரணத்தைப் பொருட்படுத்தாமல் சட்ட விதி பேசும் நிர்வாகத்தின் ராட்சஸ மனோபாவத்தை அவர்கள் சகித்துக் கொள்ளத் தயாரில்லை. கொதித்தெழுந்த தொழி லாளர்கள் மீண்டும் ஜி. எம். ஆபிஸ் முன்கூட . . . . சங்கச் செயலாளர் உறுதியாகக் கூறிவிட்டார்.

இப்படி அரக்கத்தனமாக நடந்து கொண்ட நிர்வாகத்துக்கு புத்திபுகட்டும் கடமை நமக்கு உண்டு. ஆகவே ஜி. எம். இறங்கி வந்து . . . . தொழிலாளர்களுடன் சேர்ந்து இரங்கல் கூட்டம் நடத்த சம்மதிக்கும்வரை நாம் ஓரடிகூட நகரக்கூடாது'' என்று வெண்கலக் குரலில் முழங்க—

ஜி. எம். (ஜெனரல் மேனேஜர்)முக்கு இது ஒரு பிரஸ்டீஜ் பிரச்னையாகி திணற—நீண்ட நேர உறுதியான போராட்டத் திற்குப்பின் பணிந்தார். இறங்கி வந்தார்.

கொதி நிலையிலிருக்கும் 'வொர்க்கர்ஸ்' தன் மீது பாய்ந்து ரசாபாசமாக்கி விடுவார்களோ என்ற அச்சத்தில் உடல் வியர்த்து தள்ளாட...

செயலாளர் அவருக்கு தைரியம் சொன்னார். பாதுகாப் புக்கு உத்தரவாதம் தந்தார். இரங்கல் கூட்டம் நடந்தது. ஜி. எம்,மும் இரங்கினர். அப்போதே ஒரு 12 (3) ஒப்பந்தம்

நிறைவேறியது. (அதாவது நடக்காமல் போய்விட்ட ஷிப்டு களுக்கு சம்பளம் பிடித்தம் செய்வதில்லை. ஆனால் பண்டிகை நாட்களில் பார்க்கும் ஷிப்டுகளில் இதன் பாதிப்பை சரிகட்டு வது என்று)

மூன்று நாட்களுக்கு முன்பு நிர்வாகம் மறுபடியும் கூடியது. 'சம்பளம் பிடிக்கப் போவதாக!' ஆலையே பரபரத்தது. தொழி லாளர்கள் குமுறினர்.

ஷிப்டு கூட்டங்களில் ஆவேச பிரகடனங்கள்...

நாளைக்கு சம்பளதினம். ''சம்பளப் பிடித்தம் செய்தால்... வேலை நிறுத்தம்' என்ற தொழிலாளர்களின் வைரம் பாய்ந்த முடிவுகள்; அதை அறிவிக்கும் தந்திகள் 'மேலே' பறந்து விட்டன. பத்திரிக்கைகள் கூட செய்தி போடுகின்றன...

சுற்று கிராமங்களே பரபரக்கின்றன.

இப்போ நா என்ன செய்றது?

சங்கத்தின் நடவடிக்கையிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக பின்வாங்கி, ஒரு சமயத்தில் அறவே ஒதுங்கிய பிறகு அவர் களும் தன்னை ஒரு கோழையாகக் கருதி ஏளனப்படுத்தி....இழிவு படுத்தி . . . . அதனால் தன் மனதிலும் ஒரு பகையுணர்வும் இடைவெளியும் வளர்ந்த பிறகு . . . .

இப்போ என்ன செய்றது . . . . ? போராட்டத்தில ஈடுபடு வதா, கருங்காலியாவதா ?'

மனசில் கல்லாக இந்தக் கேள்வி அழுத்திக் கொண்டே யிருக்கிறது. இலக்கற்ற குருட்டுப் பயணமாக எண்ணங்கள் ஓடிக் கொண்டேயிருக்கின்றன . . . . , .

''இப்போ என்ன செய்ற . . . . ''

கமலத்துக்கு மெல்ல நிதானம் கரைந்து, எரிச்சல் தலை தூக்கியது. 'நேரம் காலம் தெரியாமெ இந்த மனுஷன் . . . .

என்ன பண்ணிக்கிட்டிருக்குது . . . . வந்து சாப்பிட்டுட்டு போய்த் தொலைய வேண்டியதுதானே ''

நேரம் 2க்கு மேலாகி விட்டது. மூத்தவன் சாப்பிட்டுவிட்டு தூங்குகிருன். இளையவனை குளிப்பாட்டி, பவுடர் போட்டு, பாலூட்டி மறுபடியும் தொட்டிலில் தூங்கச் செய்து விட்டாள்.

கமலம் 'கடைக்குப் போகலாம்' என்று நினைத்தாள். வீட்டைப் பூட்டி விட்டு புறப்பட்டாள்.

சரக்கு கொடுத்துக் கொண்டிருந்த கடைக்காரர் . . . என்ன நினைத்தாரோ, திடுமெனக் கேட்டார் . . . ,

''என்ன கமலம் நாளைக்கு மகேந்திரன் என்ன செய்யப் போருன் ?''

''என்ன அண்ணுச்சி. திடுதிப்புனு கேக்குறீக... நாளைக்கு என்னவாம் ?''

''ஒனக்குத் தெரியாதா சங்கதி . . . . நாளைக்கு ஸ்டிரைக் நடக்கப் போவுது. ஓம் புருஷன் வேலைக்குப் போருனு . . . . இல்லே ஸ்டிரைக்லே நிக்கப்போருனு ?''

கமலத்தின் வழக்கமான அலட்சியம் வெளிப்பட்டது.

''ஆமா . . . . இந்தச் சங்கத்துக்காரங்களுக்கு வேறை வேலையே கிடையாது. எப்பப் பார்த்தாலும் இதே பொழைப்புத் தான் . . . . . . ?''

''அப்படியில்லேம்மா . . . . . இது சங்கத்துக்காரங்க செய்ற ஸ்டிரைக் இல்லே''

''அப்புறம் . . . . ?''

அவர் சம்பவத்தை சொல்கிருர் . . . . இடையில் இறுகிய கர்வப் பாறைக்கும் அப்பால், பெண்மைக்குரிய இரக்க சுபாவம், அவளுள் பதைப்பு ஏற்படுத்தியது.

''இதென்ன கொடுமையாயிருக்கே! காலம் பூரா உழைச்ச ஒரு மனுஷன் செத்தா .... அதைப் பத்தி கொஞ்சம்கூட கவலேப் படாமே .... இதென்ன பேய்ப் பிறவிகளா ....''

அவளிடமும் கண்டனம் வெளிப்பட்டது.

''அதுமட்டுமில்லேம்மா . இந்த ஸ்டிரைக்லே எல்லாருமே கலந்துக்கிடணும்...இல்லேன்னு அது நல்லதுல்லே ஒரு நாய ம்னு அதுக்காக நிக்க வேண்டாமா...? அதானே மனுஷ லட்சணம்?''

அவள் மௌனமானுள். அவளுள் ஏதேதோ எண்ணச் சுளிவுகள். உளேச்சல்கள். வழக்கமான பயணத்தில் ஏதோ ஒரு தடை குறுக்கிட்டு விட்டதை உணர்ந்தாள். விருப்பமில்லாமல் பின் வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உணரும் சமயத்தில், அவளுக்குள் மறுப்பு தோன்றியது. இருப்பினும்—

எல்லோரும் ஒரு காரியத்தில் இறங்கும் போது...சிலர் மட்டும் கருங்காலியானுல் ஏற்படும் அவமானத்தை—தனது கணவனும் அந்த அவமானத்தில் பங்கெடுப்பதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியுமா?

அதுக்காக ஸ்டிரைக்லே கலந்துகிட்டா...மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்துலே் ஏறுன மாதிரி—சங்கம், கட்சி யின்னு சிநேகம் வந்துவிடுமே....

நெஞ்சு சுமையில் அழுத்த... அவள் கடையை விட்டு அகன்ருள்.

மணி மூன்று இருக்கும். இன்னும் அவர் வரவில்லே. மனசுக்குள் பதைப்பு காணத் தொடங்கியது. என்ன காரணம்? ஏதாச்சும் கோபமா? என்ன கோபம்? இதே மாதிரியான மன உளேச்சலில் அவரும் தவிக்கிருரோ!

வேலேக்குப்போனுல்...ஆலே பூராவும் காறித்துப்புவார்களே என்று கலங்குவாரோ!—இந்த ஊர்லயிருந்து பத்துப்பேரு

வேலே பாக்குருங்க. அத்தனே பேரும் ஸ்டிரைக் செய்ய...இவர் மட்டும் வேலேக்குப்போனு, ஊர் இவரைக் கேலி செய்யாதா?

அதுக்காக பின் வாங்குவதா? சண்டை போட்டவங் களோட மறுபடியும் சங்காத்தம் வைச்சிக்கிடுவதா? இவரை சங் கம் கட்சியின்னு அலேயவிடுவதா?

அவள் ஊசலாடினுள். இதயம் பூராவும் உறைந்து கிடந்த கர்வத்தினடியில் எங்கோ ஓர் சிறு கசிவு!

பொழுது முகம் மாறி மஞ்சளாகிக் கொண்டிருந்தது. ஐந்து மணியிருக்கும். தண்ணீரெடுக்கப் போனுள். அங்கும் பெண் கள்....

இறந்துபோன தொழிலாளியைப் பற்றி வருந்தினர். இறப்புக்குக் கூட இரங்க மறுத்து அடம் பிடிக்கும் அயோக்கியர் களே அவர்கள் பாஷையில் திட்டினர். ''இதே வசவு, நாளேக்கு நம்ம புருஷனுக்கும் வருமோ''

ஏனே...கமலத்துக்கு 'சுருக்'கென்று குத்தியது. மௌனத் தில் இறுகி தனிமையில் வந்தாள். கசிவு! கசிவு!

வீட்டுக்குள் பானேயுடன் நுழையும் போது—

உள்ளே உட்கார்ந்திருந்தான் மகேத்திரன். முகமெல் லாம் கறுத்து. அறுபட்ட கொடியாக வாடிப் போயிருந்தான். குடிகாரனுடையதைப் போல் கண்கள் கலங்கியிருந்தன.

கண்டிப்பதற்காக வாயைத் திறந்தவளுக்கு என்னவோ போலிருந்தது. இவன் முகமும் படிந்திருந்த துயரமும் அவள் மனதைப் பிசைந்தது...

''ஏன் இப்படி பசி பட்டினியோட இருக்கணும். உடம்பு என்னத்துக்காகும்?...'' பரிவோடு கேட்டாள். ஏறிட்டுப் பார்த்தான். பார்வையில் தீம்பொறிகள் பறந்து மறைந்தன.

''ஒரு நாளையிலே உடம்பு ஒன்னும் சுடுகாட்டுக்கு போயி டாது...''

திகைப்போடு நிமிர்ந்த அவளின் விழிகள் மலர்ந்தன. திடுக்கிட்டுப்போய் கேட்டாள்...

''எதுக்கு இப்படிப் பேசுறீக...''

''சோறு பெரிசு...? மனுஷன இருக்க வேண்டாம்? நா மனுஷனாகவா இருந்துருக்கேன்...?

சம்பந்தா சம்பந்தமின்றி அவன் சீறுவதைக் கவனித்தாள். இது நேற்றுவரை இருந்த அவரல்ல...வேறு இவர்!

''இன்னிக்கு என்னாச்சு உங்களுக்கு?''

''எனக்கும் ஒன்னு ஆகலே...''

''சரி...நாளைக்கு என்ன செய்யப் போறீக?''

விருட்டென்று நிமிர்ந்தான். பார்வையில் ஏதேதோ அர்த் தங்கள்! சட்டென்று அர்த்தங்கள் உதிர்ந்து வெறுமையாகிப் போன பார்வை.

''என்ன ஆனாலும் சரி ... என்னை அடிச்சுக் கொன்னாலும் நா வேலைக்குப் போகத்தான் போறேன்?''

''எதுக்கு? நாடோட நாமோடன்னு ... எல்லாரையும் போல நின்னுக்கிட வேண்டியது தானே! எல்லோருக்கும் ஒரு பாதை நமக்கு மட்டும் தனிப் பாதையா?

''போங்கடா உங்க சங்கமும் வேண்டாம், ஒரு மயிரும் வேண்டாம்'னுட்டு விலகி வந்தேனே ... நாளை என்ன முகத் தோட அவங்க முன்னடி போய் நிற்கிறது? என்னையும் சேர்த்துக் கோங்கன்னு...எப்படி வாயைத் திறந்து சொல்றது?''

''இதுலே வெக்கப்பட என்ன இருக்கு? ஆயுசு பூரா பாடு பட்ட மனிஷன் அகாலமா செத்துக் கிடக்க...அதுக்கு வருத்தப் படுவதே தப்புன்னு சொன்ன...அது என்ன ஞாயம்? அதுக்காக சம்பளம் பிடிச்சா...அக்கிரமமில்லே...? இதைத் தட்டிக் கேட் குறப்போ...நீங்க மட்டும் வேலைக்குப் போன, என்ன அர்த்தம்... ?''

இன்னிக்கு அவுகளுக்கு...நாளை நமக்கு...பக்கத்து வீட்டுத் தீ நம்ம கூரைக்கு வர, எத்தினி நாளாகும்... ?''

மகேந்திரனின் கண்கள் திகைத்து மலர்ந்தன.

''என்ன சொல்றே...நீ...?''

''வேலைக்குப் போகக் கூடாதுன்னு சொல்றேன்.

அவனுக்கு சப்பென்ருகி விட்டது. வழக்கம்போல் பேசு வாள்,..அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தையெல்லாம் அடித்தே தீர்த்துவிட வேண்டும் என்று வெறியோடு வந்த அவனுக்கு... இவளுடைய மாறுதல் சப்பென்ருகி விட்டது...அது சரி...

இவள் ஏன் இப்படி பேசுகிருள்...இவளை இப்படி மாற வைத்தது எது? தன்வீடு, தன் வாழ்வு என்று குறுகிய தன்னல மும் தன்னகங்காரமும் கொண்ட இவள் மனம், எப்படி விரிந் தது...பாதிக்கப்பட்ட சகலருக்கும் பரிவு காட்டும் அளவுக்கு எப்போது விரிந்தது...?

அவனுக்குப் பிரமிப்பாகவும், புதிராகவும் தோன்றிஞள். நிஜமாகவே இவள் கமலம் தான...? இல்லை. வேறு கமலம்!...

சூரியன் அஸ்தமித்து...இருள் பரவத் தொடங்கியது. ஆனல் மகேந்திரனுக்கு இப்போதுதான் வைகறை புலர்வது போலிருந்தது.

# மானுடம் வெல்லும்

உள்ளே


- சமரசவிலை
- குரூர நிறைவு
- துக்க ஆசை
- சந்தோஷமான தோல்வி
- பிஞ்சுகளும் போரிடும்
- மானுடம் வெல்லும்
- கசியும் நியாயம்


